THIRU

# VALLUVAR VACHAKAM

CONNEMARA PUBLIC LIBRARY
12 NOV 1957
MADRAS

CLASS III

by

Pandit M. VADIVELAN

Edited by

Vidwan S. V. Varadaraja Ayyangar, M.O.L.
Vivekananda College, Mylapore, Madras-4.

(Revised Edition)

M. D. NAGABHUSHANAM & SON,
108, Corporation Fruit Market, Madras-1

*Rights Reserved* ] 1955 [*Price As.* 0—6—0

திருத்திய முதல் பதிப்பு : 1950
,, இரண்டாம் பதிப்பு : 1952
,, மூன்றாம் பதிப்பு : 1953
,, நான்காம் பதிப்பு : 1954
,, ஐந்தாம் பதிப்பு : 1955

Approved by the Text Book Committee, Madras for Class use : Vide Fort St. George Gazette, Supplement Part I-B, Page 22, Dated 19-5-1954.

Rajan Electric Press, Madras-1.

12 NOV 1967
MADRAS

# நூன்முகம்

இந்தத் திருவள்ளுவர் வாசகம் சென்னை அரசாங்கத்தாரின் கல்வித் துறையினர் புதியதாக வெளியிட்டுள்ள பாடத் திட்டத் திற்கிணங்க எழுதப் பெற்றுள் ளது. இன்றியமையாத இடங் களில் குறிப்புக்கள் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. இப் புத்த கத்தில் ஐந்நூறு புதுச் சொற் கள் விரவி வந்திருக்கின்றன.

கேள்விகளும் பயிற்சிகளும் பிள்ளைகளுக்கு அதிக உபயோக மாகுமாறு அமைக்கப்பட்டிருக் கின்றன. ஆசிரியர்கள் வேண்டு மிடங்களில் குறித்துள்ளபடி வேறு கேள்விகளும் பயிற்சி களும் அமைத்துக்கொள்ளலாம்.

எதையும் எளிய முறையில் கற்பிக்கவேண்டும் என்னும் நோக்கத்தால் விஷய ஞானம் புகுத்துவதையே குறைத்து விடும் பழக்கத்தைக் கைவிட்டு, எளிய முறையில் விஷய ஞான வளர்ச்சியையும் கருதிப் பாடங் கள் அமைக்கப்பட் டிருக்கின் றன.

பிள்ளைகளுக்குத் தமிழில் ஆர் வம் ஏற்படுமாறு எழுதப்பட்ட இப்புத்தகத்தைப் பலரும் பாட புத்தகமாக வைத்து ஆதரிக்கு மாறு வேண்டுகின்றேன்.

ஆக்கியோன்.

12 NOV 1957
MADRAS

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தந்தையும் மகனும் | 1 |
| 2. | அறிவுள்ள காக்கை | 5 |
| 3. | திருவள்ளுவர் | 9 |
| 4. | குழந்தைப் பாட்டு | 12 |
| 5. | பறவைகள் I | do |
| 6. | பறவைகள் II | do |
| 7. | நரியும் ஒட்டகமும் | 20 |
| 8. | அறிவில்லாத குரங்கு | 25 |
| 9. | கொன்றை வேந்தன் | 30 |
| 10. | வீட்டு விலங்குகள் | 32 |
| 11. | காட்டு விலங்குகள் | 37 |
| 12. | சிங்கமும் நாயும் | 45 |
| 13. | ஆறு | 51 |
| 14. | பாதை ஒழுங்கு | 52 |
| 15. | குமணன் | 57 |
| 16. | தமிழ் மொழி | 62 |
| 17. | நாகனும் செல்லையும் | 63 |
| 18. | கண்ணகி சிலம்பு | 70 |
| 19. | சிங்கக்குட்டி தேசிங்கு | 77 |
| 20. | தேசிங்கின் குதிரைச் சவாரி | 81 |
| 21. | வாழ்த்துப் பாக்கள் | 82 |

திரு

# வள்ளுவர் வாசகம்

12 NOV 1957
MADRAS

## மூன்றும் புத்தகம்

---

## 1. தந்தையும் மகனும்



| | | | |
|---|---|---|---|
| ஆண்டு | பாராட்டு | தமிழ்நூல் | நாற்பத்தைந்து |
| விடை | மகிழ்ச்சி | உணர்ந்து | மறை பொருள் |
| மதிப்பு | புத்தகம் | விடுமுறை | தேர்வு |
| முயற்சி | ஊக்கம் | வெளிப்படை | முடிவு |

**தந்தை** :—கந்தா ஏன், இரண்டு நாட்களாக நீ பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லை ?

**கந்தன்** :—அப்பா நேற்றிலிருந்து எங்களுக்கு விடுமுறை.

**தந்தை** :—எதற்காக விடுமுறை ?

**கந்தன்** :—அப்பா எனக்கு ஆண்டுத் தேர்வு நடந்துவிட்டது. அதனால் நேற்று முதல் நாற்பத்தைந்து நாட்களுக்கு விடுமுறை விடப்பட்டது.

**தந்தை** :—அது இருக்கட்டும்; நீ மேல் வகுப்புக்கு மாறிவிட்டாயா?

**கந்தன்** :—அப்பா விடுமுறை விடப்பட்டதை நான் தங்களிடம் முன்பே தெரிவித்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது என் பிழைதான்.

**தந்தை** :—நீ மேல் வகுப்புக்கு மாறிவிட்டாயா என்று கேட்டேனே! அதற்கு விடை சொல்லவில்லையே? தேர்வில் தவறி விட்டாயா என்ன?

**கந்தன்** :—இல்லை அப்பா, இன்னும் தேர்வின் முடிவு எனக்கு வெளிப்படையாகத் தெரியவில்லை. விடுமுறை கழிந்து மீண்டும் பள்ளிக்கூடம் சென்ற பிறகு தான் மேல் வகுப்புக்கு மாறினதும் மாருததும் தெரியும்.

**தந்தை** :—கந்தா நீ பேசுவதில் ஏதோ மறை பொருள் இருப்பதுபோலத் தெரிகிறதே. வெளிப்படையாக என்கிருயே என்ன அது?

**கந்தன்** :—இல்லை அப்பா, நேற்று ஆசிரியர் என்னைத் தனியாக அழைத்து ஒரு மகிழ்ச்சியான செய்தி கூறினர்.

**தந்தை** :—அது என்ன?

**கந்தன்** :—நான் எல்லாக் கேள்விகளுக்கும் நன்ருக விடை எழுதி யிருப்பதாகவும்

எங்கள் வகுப்பில் நான் தான் முதலாவ தாகத்தேர்ந்திருப்பதாகவும் ஆசிரியர் எனக்குக் கூறினர்.

**தந்தை** :—அப்படியா? மிகவும் மகிழ்ச்சி. இந்த நாற்பத்தைந்து நாட்கள் விடு முறையில் நீ என்ன செய்யப் போகிருய்?

**கந்தன்** :—மேல் வகுப்புக்கு வேண்டிய பாடப் புத்தகங்களைத் தாங்கள் வாங்கிக் கொடுத்தால், அவைகளை நான் நன்ருகப் படித்து வைத்துக்கொள்வேன். மேலும் எனக்குத் தமிழ் கற்பதில் மிகுந்த விருப்பமாகையால் சில தமிழ் நூல்களையும் தங்களிடம் முறையாகக் கற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி யிருக்கிறேன்.

**தந்தை** :—நல்லது, உனக்குத் தமிழ் மொழி யைக் கற்பதில் ஊக்கம் இருப்பதை நான் பாராட்டுகிறேன். தாய்மொழி யைக் கல்லாதவன் எவ்வளவுதான் மற்றப் பாடங்களில் தேர்ந்தவனுக இருந்தாலும், தன்னுடைய முதல் கடமையை மறந்தவனுவான்.

**கந்தன்** :—அப்பா, நாளைமுதல் எனக்குத் தமிழ்நூல் ஏதாவது ஒன்று கற்பிக் கத் தொடங்கி விடவேண்டும்.

**தந்தை** :—அப்படியே ஆகட்டும்.

## கேள்விகள்

1. ஆண்டுத் தேர்வு என்றால் என்ன?

2. கந்தனுக்கு எதைப் படிப்பதில் விருப்பம் அதிகம்?

3. விடுமுறையில் கந்தன் என்ன செய்ய எண்ணியிருந்தான்?

## பயிற்சி 1

1. கந்தனைத் தனியாகக் கூப்பிட்டு ஆசிரியர் கூறியதை மூன்று வாக்கியங்களில் எழுது.

2. 'தமிழைக் கற்றுக்கொள்ளலாம் என்று இருக்கிறேன்' என்று கந்தன் சொன்னபோது, தந்தை கூறிய பதிலை நீ சொந்தமாகக் கூறு.

முதல் வரிசையிலுள்ள ஒவ்வொன்றுடன் இரண்டாம் வரிசையிலுள்ள பொருத்தமுள்ள தொடரைச் சேர்த்து ஒவ்வொரு வாக்கியமாக எழுது :—

| | |
|---|---|
| விடுமுறையில் | எலியைக் கௌவிப் பிடிக்கும் |
| நாய் | ஒரு மாதம் |
| பூனை | பழம் பாடம் படிக்கவேண்டும் |
| சித்திரை என்பது | செய்து முடித்துவிட்டான் |
| காரியம் | வேகமாக ஓடும் |
| மயில் | தோகை விரித்து ஆடும் |
| குதிரை | நன்றியுள்ள பிராணி |

## பயிற்சி 2

கீழ்வரும் ஒவ்வொன்றையும் பிரித்து இரண்டிரண்டு சொற்களாக எழுது :—

| | |
|---|---|
| இரண்டிரண்டு | அறிந்திருந்தான் |
| ஊரெங்கும் | கொடுப்பதாக |
| செய்திருந்தான் | நாளையிலிருந்து |
| உணவாயின | ஒவ்வொன்று |

# 2. அறிவுள்ள காக்கை

| | | |
|---|---|---|
| அமைத்துக்கொண்டு | குடியேறின | இளைப்பாற |
| கடுமையான | சக்தி | களைப்பு |
| நீரோடை | தாகம் | யோசனை |
| வற்றிவிட்டது | சஞ்சலம் | பருகி |
| செழிப்பான | வழிப்போக்கன் | இனத்தார் |

காட்டில் காக்கை ஒன்று உயரமான மரத்தின்மேல் கூடு அமைத்துக்கொண்டு வசித்து வந்தது.

வெயில் கடுமையாக இருந்த கோடை நாளில் அந்த வனத்தில் இருந்த சிறு குளங்களிலும் நீரோடைகளிலும் தண்ணீர் வற்றி விட்டது. பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் குடிப்பதற்கு ஒரு துளி தண்ணீர்கூடக் கிடைக்கவில்லை. ஆகையினால் அந்த வனத்தில் இருந்தபறவைகளும் மிருகங்களும் பக்கத்தில் இருந்த செழிப்பான காட்டில் குடியேறின.

ஆனால், இந்தக்காக்கை மாத்திரம் போகவில்லை, ஏனென்றால் அதனுடைய குஞ்சுக்கு, நன்றாகப் பறக்கும் சக்தி உண்டாகவில்லை. குஞ்சை விட்டுவிட்டுத் தாய்க் காக்கை மாத்திரம் போய்விடுமா?

ஒருநாள் அந்தக் காக்கைக்கு அதிக தாகம் உண்டாயிற்று, எங்கும் துளி நீர்கூட இல்லை. அதனால் அது தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுவது எவ்வாறு என்று வருத்தப் பட்டுக் கொண்டிருந்தது.

அப்பொழுது ஒருவன் அவ்வழியாக வந் தான். அவன் கையில் ஒரு குடம் இருந்தது.



அந்தக் குடத்திலிருந்து தண்ணீர் குடித்து விட்டு அவன் இளைப்பாற மரத்தின் கீழ்ப் படுத்தான். படுத்தவன் களைப்பினால் உறங்கி விட்டான். இதைக் கண்ட காக்கை அவன் வைத்த குடத்தில் நீர் இருந்தால் குடிக்கலாம்

என்று எண்ணிப் பறந்து வந்து, குடத்தின் மேல் உட்கார்ந்து பார்த்தது. குடத்தின் அடியில் சிறிது தண்ணீர் இருந்தது. காக்கையின் அலகுக்கு அது எட்டவில்லை. என்ன செய்யலாம் என்று அது யோசனை செய்தது. சிறு கற்களைத் தன் அலகால் எடுத்துக் குடத்திற்குள் போட்டுக் கொண்டே இருந்தது. கற்களைப்போடப்போட நீர் மேலே உயர்ந்து வந்தது. காக்கை அதைப் பருகிவிட்டு மகிழ்ச்சியோடு பறந்துவிட்டது.

மறுநாளே அந்தக் காக்கை தன் குஞ்சுடன் அந்த வனத்தைவிட்டுத் தன் இனத்தார் குடியேறி இருக்கும் அந்த கானகத்துக்கு மெதுவாகப் பறந்து போய்விட்டது.

## பயிற்சி 3

கீழே வரும் இரண்டிரண்டு வாக்கியங்களையும் ஒவ்வொன்றாகச் சேர்த்து எழுது :—

1. நான் ஊருக்குப் போனேன்.
   என் தந்தை ஊருக்குப் போனார்.
2. காக்கை குடத்தைப் பார்த்தது.
   காக்கை குடத்தருகில் பறந்து வந்தது.
3. அவன் மரத்தின்கீழ் படுத்தான்.
   அவன் மரத்தின்கீழ் உறங்கினான்.
4. முருகன் வீட்டை விட்டுப் போனான்.
   பிறகு கந்தன் வீட்டுக்கு வந்தான்.

5. பட்டிணத்திலிருந்து எங்கள் ஊர் வெகுதூரம்.
ஆகையால் நான் வண்டியில் போவேன்.

6. வைத்தியர் மருந்து கொடுத்தார்.
நோய் உடனே நீங்கியது.

7. குரங்கு அவனைப் பார்த்தது.
குரங்கு அவனைத் தூரத்திற்று.

## பயிற்சி 4

1. கீழ்வரும் சொற்களின் உதவியைக் கொண்டு படத்தில் காணும் கதையைக் கூறு.

கிழவி—சிறுவர் — இருந்தாள் — காக்கை—கௌவி—கரி—பாட்டுப் பாடு—வாய் திறந்து—பாடிற்று—விழுந்தது—எடுத்துக் கொண்டு.

# 3. திருவள்ளுவர்



மாணவர்களே, இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் அமர்ந்திருக்கும் பெரியார் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? இவர் தான் **திருவள்ளுவர்.**

சற்றுத் தூரத்தில் ஓர் அம்மையார் அமர்ந்திருக்கிறார் பாருங்கள். அவர் திருவள்ளுவரின் மனைவியார். அவர் பெயர் **வாசுகி அம்மையார்.**

திருவள்ளுவர் என்ன செய்கிறார்? அவர் கடவுளை வழிபடுகிறார். அதோ பாருங்கள். சூரியன் உதித்துச் சற்று நேரம் ஆகிறது. சூரியன் உதிக்கும் முன்னமே அவர் படுக்கையிலிருந்து எழுந்து காலைக்கடன்களை முடித்துக் குளித்து அமர்ந்தார். அமைதியாகக் கடவுளை

நினைத்துப் பூசை செய்தார். பின்பு கடவுள் வாழ்த்துக் கூறுகிறார்.

வாசுகியம்மையார் எப்போதும் கணவருக்கு முன் படுக்கையிலிருந்து எழுவார். காலைக் கடன்களை முடிப்பார். தம் கணவருடைய கடவுள் வழிபாட்டுக்கு வேண்டிய வேலைகளைச் செய்வார். பின்பு அவர் கடவுள் வழிபாட்டை முடிக்கும்வரை சும்மா இருப்பாரா? சற்று நேரம் நூல் நூற்பார்; நூற்ற நூலைக் குழையில் சுற்றுவார்.

திருவள்ளுவர் பூசையை முடித்துத் தமது தொழிலைச் செய்வார். அவர் செய்த தொழில் எது தெரியுமா? அதுதான் நெசவு. செய்யும் தொழில்களில் சிறந்த தொழில் நெய்யும் தொழிலே அல்லவா? அதைத்தான் அவர் செய்தார்.

திருவள்ளுவரும் வாசுகியம்மையாரும் மனம் ஒத்து வாழ்ந்தார்கள். வாசுகியம்மையார் மாசில்லாக்குணம் உடையவர். கணவருடைய மனக்குறிப்பை யறிந்து நடக்கும் திறமை மிக்கவர். தம் கணவன் செய்த நெசவுத் தொழிலுக்கு மிகத் துணை செய்தார். தம் மனைவியார் இவ்வளவு சிறந்த குணமுடையவராய் இருந்ததனால் வள்ளுவர் மிக மகிழ்வோடு மனைவாழ்க்கை நடத்தினார்.

நூல் நூற்கும் வாசுகியம்மையாரின் பின் புறத்தில் தறி தெறிகிறது பாருங்கள். அதில் தான் ஆடை நெய்வார் திருவள்ளுவர். வாசுகியம்மையார் பஞ்சினுல் நூல் செய்வார். திருவள்ளுவர் தமிழினுல் ஒரு நூல் செய்தார். அந்த நூல்தான் **திருக்குறள்.**

திருக்குறள் என்பது மிகச் சிறந்த நீதி நூல். அதைப்பற்றி அடுத்த வகுப்பில் விளங்கப் படிப்பீர்கள்.

### கேள்விகள்

1. வள்ளுவரின் மனைவியார் பெயர் என்ன?
2. வாசுகியம்மையார் எப்படிப்பட்டவர் ?
3. வள்ளுவருடைய செய்தொழில் யாது ?
4. வாசுகியம்மையார் வள்ளுவருக்கு எந்தெந்த வகையில் துணை புரிந்தார் ?
5. இருவகை நூல்கள் எவை? எவர் எவர் எந்தெந்த நூல் செய்தனர் ?
6. திருவள்ளுவர் செய்த நூல் எது ?

### பயிற்சி 5

வள்ளுவர் வாழ்க்கையைச் சுருக்கிப் பத்து வரிகளில் எழுது.

# 4. குழந்தைப் பாட்டு

தாயினிடம் சோறுண்ணத்
தாவுகின்ற குழந்தை ;
போய் எடுத்தால் புதியவர்கள்
ஓடிவிடும் குழந்தை,
மழலை மொழி பேசிப் பேசி
மகிழ்வளிக்கும் குழந்தை ;
அழகோடு அனைவருக்கும்
அன்பளிக்கும் குழந்தை.
காக்கைகளைக் கண்டு மனம்
களிக்கின்ற குழந்தை ;
தூக்குவோரைக் கண்டவுடன்
துள்ளிக் குதிக்கும் குழந்தை.

சொ. கண்ணபிரான்

---

# 5. பறவைகள்

| | | |
|---|---|---|
| சஞ்சரிக்கும் | தோகை | அணைத்துக்கொண்டு |
| விாகரம் | சத்துரு | நாட்டியம் |
| இசை | நிதானம் | வெறுக்கத்தக்கன |
| அன்பு | விரைந்து | பொருமை |
| இரை | கொண்டை | இறகு |
| இனம் | அலகு | சொரூபம் |
| வட்டமிட்டு | துளை | வம்சம் |
| பிய்த்து | வெடிப்பு | மலிந்துகிடக்கும் |
| விசித்திரமாக | தென்பு | கடக்கலாம் |

பறவைகளில் பலவகைகள் உண்டு. சில பகலில் சஞ்சரிக்கும்; சில இரவில் சஞ்சரிக்கும். சில நன்ருகப் பறக்கும் ; சில நன்ருகப் பறக்க மாட்டா. சில நாம் வளர்க்கக்கூடியவை ; சில

நாம் வளர்க்கக்கூடாதவை. சில அழகாக இருக்கும்; சில விகாரமாக இருக்கும். சில இசைபாடும்; சில இசைபாடா.



பருந்து பறவை இனத்தில் பெரியது. இது ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறக்கும். இதற்கு அலகும் நகங்களும் கூராக இருக்கும், கோழிக் குஞ்சைப் பற்றிக் கொண்டு போய்த் பிய்த்துத்தின்ன அதற்கு மிக விருப்பம். அது செத்த எலி, நாய் முதலியவற்றின் இறைச்சியைத் தின்னும்.



மிருகங்களுக் கெல்லாம் சிங்கம் மிருக ராஜனாக இருப்பது போல, பறவைகளுக்கு எல்லாம் ராஜனாக இருப்பது **இராஜாளி** என்பது. இராஜாளி ஆணும் பெண்ணுமாக உயரமான மலைமேல் கூடிகட்டி வாழும். இது ஆகாயத்தில் மிகுந்த உயரத்தில் பறக்கும். இதற்குக் கண் பார்வை மிகவும் கூர்மையானது. அது ஆகா

தில் எவ்வளவு உயரத்தில் பறந்துகொண்டி ருந்தாலும், பூமியில் உள்ள இரையைக் கண் டால் அம்புபோல் பாய்ந்து அந்த இரையைக் கௌவிக்கொண்டு போய்விடும். அது ஆட்டுக் குட்டி, முயல் முதலியவற்றைத் தனக்கு இரை யாகக் கொள்ளும்.

மரங்கொத்தி என்னும் பறவை அழகிய தோற்றம் உடையது. இது மிகவும் சுறுசுறுப் புள்ளது. இது வடிவத் தில் சிறியது. இது தன் கூறிய அலகால் மரத் தில் துளைசெய்து, அத் துளையில் வசிக்கும்.



இது மரத்தின்மேல் நடந்துபோகும் சக்தி உடையது. மரப் பொந்துகளிலும், பிளவு களிலும், வெடிப்புகளிலும் மறைந்து வசிக் கும் புழுபூச்சிகளை இது பிடித்துத் தின்னும்.

நாட்டியம் ஆடுவதில் விருப்பமுடைய மற்றொரு பறவையும் உண்டு. அதுதான்வான் கோழி என்பது. அதன் தோற்றமும் நடையும் வெறுக்கத் தக்கனவாக இருக்கும். காடுகளில் மயில்கள் ஆடுவதைக் கண்டு விருப்பம் கொண்டு வான் கோழிகள் தாமும் சிறகை

விரித்து ஆடும். தாமும் மயில்கள் போல அழகுள்ளவை என்று அவை நினைத்துக் கொள்ளும். நமக்கு அவை விகாரமான வடிவம் என்பது நன்ருகத் தெரிகின்றதல்லவா? இது கோழி



இனத்தைச் சேர்ந்தது. ஆகையால், இதற்கு வான்கோழி என்று பெயர் உண்டாயிற்று.

நெருப்புக்கோழி என்ற பறவை இனம் ஒன்று உண்டு. இது சம சீதோஷ்ணமான இடங்களில் மிகுதியாக வசிக்கும். இது உஷ்ணமான இடங்களில் இருப்பதாலும், நெருப்பையே தின்னக்கூடியதாகையாலும் இதற்கு அப்பெயர் ஏற்பட்டது. இது நீண்ட கால்களையும் கழுத்தையும் உடையது. பாலைவனங்களைக் கடக்க ஒருவகைத் தீப்பறவை பயன்படுகிறது.



இது இரும்பு, கண்ணுடி, தோல், நெருப்பு முதலியவற்றை விழுங்கும். இது பெரிய முட்டை இடும். இதன் முட்டை ஒரு பெரிய தேங்காய் அளவாக இருக்கும்.

புருக்களில் பலவகை உண்டு. புருவை மனிதர் வளர்க்கிருர்கள். தவிட்டுப் புரு என்று ஒரு வகை உண்டு. இது வயல்களிலும் காட்டுப் பிரதேசங்களிலும் காணப்படும். புருவின் சத்தம் ஒருவித ஹுங்காரம் போலிருக்கும். புருக்கள் கோயில் கோபுரங்களில் கூட்டமாக வாழும். புரு அழகான பறவை. அது இன்பமாக இருக்கும்போது தன் வால் சிறகை விரித்துக்கொண்டு கழுத்தை உடம்போடு அணைத்துக்கொண்டு நாட்டியம் ஆடும். அப்போது அது பார்ப்பதற்கு வெகு அழகாய் இருக்கும்.



கொக்கு குளம், குட்டை, ஏரி, ஆறு முதலிய இடங்களில் காணப்படும். இதற்கு மெல்லிய நீண்டகால்கள் உண்டு. கொக்கிடம் ஒரு சிறந்த குணம் உண்டு. அது என்னவென்ருல் நிதானபுத்திதான். நீர் நிலையில் இது நிதானமாக நின்றுகொண்டே இருக்கும். சிறு மீன்கள் அகப்பட்டால் இது அசையாமல் நிற்கும். தன் உணவுக்கு ஏற்ற பெரியமீன்



பார்வையில் பட்டால் உடனே ஒரே குத்தில் அதைத் தன் மூக்கால் கௌவி விழுங்கிவிடும்.

ஆந்தை இரவில் சஞ்சரிக்கும் பட்சி. பகலில் இதற்குக் கண் தெரியாது. ஆகையினால் அது பகற்பொழுதில் மரப் பொந்துகளில் புகுந்துகொண்டு இருக்கும். இரவில் அது



பொந்தை விட்டுக் கிளம்பி, இரை தேடும். ஆந்தை, தவளை, எலி முதலிய சிறு சிறு பிராணிகளைத் தின்று வயிறு வளர்க்கும்.

மயில் மிகவும் அழகான பறவை. அதன் தோகை பல நிறங்களோடு விசித்திரமாக இருக்கும். ஆண் மயிலுக்கு மட்டும் தோகை உண்டு. பெண் மயிலுக்குத் தோகை இல்லை. மயிலுக்கு மேகத்தைக் கண்டால் உற்சாகம் பிறக்கும். அப்பொழுதுதான் அது தன் தோகையை விரித்து ஆடும். மயில் பாம்பின் சத்துரு. அது



பாம்பைக் கண்டால் உடனே அதைக் குத்திக் கொல்லும். மயில்களைச் சுப்பிரமணியர் கோயில்களில் வளர்ப்பதுண்டு.

மீன்குத்திப் பறவை கொக்கைப் போல் நீரிருக்கும் இடங்களில் தான் காணப்படும். அது சற்று உயரத்தில் நீரின் மேலேயே பறந்து கொண்டிருக்கும். ஏதாவது மீன் கண்ணுக்கு அகப்பட்டால் உடனே விரைவாகப் பாய்ந்து அதைக் குத்தி விழுங்கி விட்டுப் பறந்துவிடும். இதன் அலகு நீண்டு கூராக இருக்கும்.



## கேள்விகள்

1. இரவில் சஞ்சரிக்கும் பறவை ஒன்று கூறு.
2. பருந்து எந்த இனத்தைச் சேர்ந்தது ?
3. பருந்து வானத்தில் எப்படிப் பறக்கும் ?
4. பக்ஷிராஜன் எது ?
5. இராஜாளி தன் இரையை எப்படித் தேடும் ?
6. ஆந்தைக்குக் கண் இரவில் தெரியுமா, பகலில் தெரியுமா ?
7. கொக்கு எப்படி மீனைப் பிடிக்கும் ?
8. மயிலுக்கு எதைக் கண்டால் உற்சாகம் பிறக்கும் ?
9. மயில் எந்தக் கோவிலில் வளர்க்கப்படுகிறது ?
10. மீன்குத்தி எப்படி மீனைப் பிடிக்கும் ?
11. மீன்குத்தி எங்கே காணப்படும் ?
12. நாட்டியம் ஆடக்கூடிய பறவைகள் எவை ?
13. எந்தப் பறவையின் நாட்டியம் மிகவும் அழகாக இருக்கும் ?

## பயிற்சி 6

1. ஆந்தையைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

2. சஞ்சரிக்கும், சத்துரு, நீர்நிலை, அலகு, வட்டமிட்டு, பருமை—இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் உபயோகித்து எழுது.

3. கூர்மையான கண்பார்வை,' வட்டமிட்டுப் பறக்கும் தின்று வயிறு வளர்க்கும். அழகிய தோற்றம் உடையது—இந்தத் தொடர்களில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் உபயோகித்து எழுது.

4. புறாவைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

5. வான்கோழியைப் பற்றி எட்டு வாக்கியங்கள் எழுது.

6. நெருப்புக்கோழியைப் பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது.

## பயிற்சி 7

1. ஙை, சௌ, யோ, வை—ஒவ்வொன்றையும் பிரித்துக் காட்டு.

2. சேர்த்து எழுது.

| | | | |
|---|---|---|---|
| ழ் + ஔ | = | ______ |
| த் + எ | = | ______ |
| ய் + ஐ | = | ______ |
| ற் + ஊ | = | ______ |
| ப் + ஈ | = | ______ |

# 7. நரியும் ஒட்டகமும்

| | | |
|---|---|---|
| மீன் | ஆலோசனை | ஓசை |
| மிகவாக | செழிப்பு | துரத்த |
| ஆவல் | வயிரூர | நைய |
| பூர்த்தி | மேயலாம் | புடைத்தார்கள் |
| இயலவில்லை | மெதுவாக | தந்திரம் |
| நீந்த | தோனி | வினவிற்று |
| நிறைவு | ஊளை | தடுப்பது |

ஒரு காட்டில் ஒரு நரியும் ஓர் ஒட்டகமும் சிநேகமாய் வாழ்ந்து வந்தன. அவை ஆற்றை அடுத்த ஓர் இடத்தில் வசித்தன. அந்த ஆற்றின் அக்கரையில் நண்டுகளும் மீன்களும் மிகவாக இருந்தன. இக்கரையில் வசித்துவந்த அந்த நரி அக்கரைக்குப் போய் அவற்றைப் பிடித்துத் தின்ன ஆவல்கொண்டது. அந்த ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள அதனால் இயலவில்லை. ஏனென்றால் நீந்தத் தெரியாத நரிக்கு ஆற்றின் அக்கரைக்குச் செல்ல முடியுமா? எனவே, அது தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள ஓர் ஆலோசனை செய்தது.

அது ஒட்டகத்தைப் பார்த்து, "அன்பரே! அக்கரையில் செழிப்பான கரும்புத் தோட்டம் இருக்கிறதே! அதில் நீர் சென்று வயிரூர மேயலாமே! வேண்டுமானால் நீர்

என்னை முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு ஆற்றைக் கடந்து சென்றால், நான் உமக்கு அத் தோட்டத்தை காட்டுகிறேன்'' என்று கூறிற்று.



நரியின் சொல்லுக்கு இணங்கி, ஒட்டகம் அதை ஏற்றிக்கொண்டு அக்கரைக்குச் சென்றது. நரி ஒட்டகத்தின் முதுகை விட்டுக் கீழே தாவிக் குதித்து மீன்களையும் நண்டுகளையும் வயிறு நிறையப் பிடித்துத் தின்றது. ஒட்டகமோ சாவகாசமாகத் தோட்டத்தில் மேய்ந்துகொண்டிருந்தது. தன் வயிறு நிரம்பின பிறகு, நரி தோட்டத்திற்குள் சென்று பெரிய குரல் எடுத்து ஊளையிட்டது. நரியின்

ஊளையிடும் ஓசையைக் கேட்ட தோட்டக் காரர்கள் அதைத் துரத்தவேண்டி, தோட் டத்துக்குள் ஓடிவந்தார்கள். வந்தவர்கள் நரி யைக் காணமல் ஒட்டகத்தைக் கண்டு, அதை நையப் புடைத்துத் துரத்தினர்கள்.

ஒட்டகம் ஆற்றோரத்துக்கு ஓடிப்போய் விட்டது. அப்போது நரியும் விரைந்து வந்து அதன் முதுகில் ஏறிக்கொண்டது. தனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த தந்திர நரியைத் தண்டிக்கவேண்டும் என்று ஒட்டகம் எண் ணிற்று. ஆனல் ஒன்றும் பேசாமல் நரியை முதுகின்மேல் சுமந்துகொண்டு ஆற்றைக் கடக்க ஆரம்பித்தது. ஆற்றின் பாதி வழியில் நல்ல ஆழமான பாகத்தில் வந்தவுடன் ஒட்ட கம் நரியைப் பார்த்து "நண்பரே! ஏன் தோட் டத்தில் வந்து ஊளையிட்டீர்?" என்று வின விற்று. அதற்கு நரி அன்பரே! வயிறு நிறைய உண்ட பிறகு ஊளையிடுவது என்னுடைய வழக்கம். அதை எப்படி நான் தடுப்பது?" என்று கேட்டது. இதைக் கேட்ட ஒட்டகம் நரி தன்னை ஏமாற்றப் பொய் சொல்லுகிறது என்று உணர்ந்து, மெதுவாய்த் தண்ணீரில் படுக்க ஆரம்பித்தது. இதைக் கண்ட குள்ள நரி நெஞ்சம் பகீரிட்டு, "அன்பரே! நடு ஆற் றில் வந்து படுத்தால், உம் முதுகின்மேல்

இருக்கும் நான் தண்ணீரில் விழுந்து இறந்து விடுவேனே! எனக்கு நீந்தவும் தெரியாதே" என்று கூறிற்று. அதைக் கேட்ட ஒட்டகம் "நண்பரே! வயிறுபுடைக்க உண்ட பிறகு நான் படுத்துப் புரளுவது என் வழக்கமாயிற்றே. நான் அதை எப்படித் தடுப்பேன்?" என்று கூறிக்கொண்டே ஆற்றில் படுத்துப் புரண்டது. நரி தண்ணீரில் விழுந்து தத்தளித்து மடிந்தது. ஒட்டகம் பிறகு எழுந்து ஆற்றைக் கடந்து சென்றுவிட்டது.

"மோசக்காரன் மோசம்போவான்"

## கேள்விகள்

1. நரி ஏன் அக்கரைக்குப் போக ஆசைப்பட்டது?
2. நரி ஏன் ஒட்டகத்தின் உதவியை வேண்டிற்று?
3. ஒட்டகத்துக்கு நரி அக்கரைக்குப்போக என்ன காரணம் சொல்லிற்று?
4. நரி ஏன் ஊளை இட்டது?
5. நரி ஊளை இட்டதால் ஒட்டகத்துக்கு என்ன நேர்ந்தது?
6. ஊளை இட்டதற்கு நரி என்ன காரணம் கூறிற்று?
7. ஒட்டகம் நரியை எவ்வாறு தண்டித்தது?

## பயிற்சி 8

1. அண்மை, மச்சம், ஆவல், இயலவில்லை, இணங்கி இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அதே அர்த்தமுடைய வேறு ஒவ்வொரு சொல் எழுது.

2. ஆலோசனை, ஓசை, குரல், செழிப்பு, அந்தகாரமான—இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

3. ஆவலைப் பூர்த்தி செய்துகொள்ள, சொல்லுக்கு இணங்கி, நையப் புடைத்துத் துரத்தினார்கள், தனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்த, இவற்றில் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு சொந்த வாக்கியம் எழுது.

4. 'வயிறு நிறைய உண்டபின் படுத்துப் புரளும் பழக்கத்தை நான் எப்படித் தடுப்பேன்' என்று கூறிக் கொண்டே ஒட்டகம் ஆற்றில் படுத்துப் புரண்டது—இதை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

5. ஒட்டகம் நரி தன்னை ஏமாற்றப் பொய் கூறுகிறது என்று உணர்ந்து—எது பொய் கூறுகிறது? எது உணர்ந்தது?

6. ஆற்றைக் கடந்து செல்ல நரி செய்த தந்திரத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

7. நரி செய்த நம்பிக்கைத் துரோகத்தைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

8. ஒட்டகம் நரியைத் தண்டித்த விதத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

9. ஆற்றின் நடுவில் நரிக்கும் ஒட்டகத்துக்கும் நடந்த சம்பாஷணையை உன் சொந்த மொழியில் எழுது.

## பயிற்சி 9

சரியான இடங்களில் முற்றுப்புள்ளிகள் வை :—

இந்தப் பானைகள் களிமண்ணால் செய்யப்படுகின்றன குலாலர் முதலில் நல்ல களிமண்ணைக் கொண்டு வருவார் அதில் தண்ணீரை ஊற்றி வைப்பார் அத்துடன் கொஞ்சம் பொடி மணலைக் கலப்பார் பின் நன்றாக மிதித்துப் பக்குவப் படுத்துவார் பிறகு பக்குவமான மண்ணைச் சக்கரத்தில் வைப்பார் அதைக் கையாலாவது பக்கத்தில் வைத்திருக்கும் தடியாலாவது சுற்றுவார் அப்போது சக்கரம் சுழலும் கையால் மண்ணைப் பிடித்துத் தனக்கு வேண்டிய பாத்திரத்தின் உருவத்தை உண்டுபண்ணுவார் இப்படிப் பாத்திரங்களைச் செய்தபிறகு நிழலில் உலரவைப்பார் வெயிலில் காயவைத்தால் விரிந்துவிடும் நிழலில் உலர்ந்த பிறகு சூளையில் அடுக்கி வைத்துச் சுடுவார்.

# 8. அறிவில்லாத குரங்கு

| | | | |
|---|---|---|---|
| பகுதி | சகலரும் | அறுத்து | புகழ்ந்து |
| நாமம் | ஆலயம் | வாட்காரன் | உத்தரவு |
| ஜீவித்து | கட்டளை | மந்திகள் | கிட்டிக்கொண்டது |
| நற்செய்கை | முளை | பிளவுவாய் | நசுங்கி |

நாம் வாழும் தேசத்துக்கு இந்தியா என்று பெயர். இதைப் பாரத தேசம் என்றும், பாரத நாடு என்றும் கூறுவது உண்டு. இந்தப் பாரத தேசத்தின் வடக்கு பாகத்தில் முன் மகதநாடு என்ற ஒரு பகுதி இருந்தது. அந்த நாட்டில் அந்தக் காலத்தில் சுதத்தன் என்ற பெயருள்ள ஒரு செல்வன் வாழ்ந்து வந்தான்.

சுதத்தன் நற்குண நற்செய்கைள் உடையவன். கோயில்கள் இல்லாத இடங்களில் கோயில்கள் கட்டிவைப்பதும், குளங்கள் இல்லாத இடங்களில் குளங்கள் வெட்டி வைப்பதும் அவன்செய்து வந்த தொண்டுகள் ஆகும். அது கண்டு அவனை யாவரும் புகழ்ந்து வந்தனர்.

ஒரு சமயம் அவன் ஓர் ஆலயத்திற்கு வேண்டிய மரப்பொருள்களைச் செய்யும்படி தச்சர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். அவன் உத்தரவின்படி செய்வதற்கு வேண்டிய மரப்பலகைகளை ஒரு பெரிய மரத்தில்

இருந்து அறுத்து எடுப்பதற்காக ஒரு வாட்காரன் வந்தான். அவன் ஆலயத்தின் பின்புறத்தில் தன் வேலையைச் செய்வதற்கு ஏற்பாடு செய்துகொண்டான். அந்த இடத்தில் மரங்கள் நிறைந்திருந்தன. அந்த மரங்களில் பல குரங்குகள் வசித்து வந்தன. வாட்காரன் நாள்தோறும் செய்யும் வேலையை இந்த மந்திகள் கவனிப்பது வழக்கம்.



ஒரு நாள் மாலைப்பொழுதில் அந்த வாட்காரன் வழக்கமாகப் போகும் நேரத்திற்குச் சற்று முன்பே வீட்டிற்குப் போக நேர்ந்தது. போவதற்கு முன் அவன் அறுபட்ட மரம் மூடிக்கொள்ளாதபடி பிளவு வாயில் ஒரு முளையை அடித்துவிட்டுப் போனான்.

வாட்காரன் செய்த காரியங்களை எல்லாம் ஒரு குரங்கு பார்த்துக் கொண்டிருந்தது. அவன் போனதும் அது கீழே இறங்கி வந்தது. அப்பொழுது இருட்டவில்லை. ஆகையால் அது தானும் வாட்காரன் போல் மரத்தை அறுத்துப் பார்க்கலாம் என்று மரத்தருகில் வந்தது. அது பிளவுக்குள் வலது காலை விட்டு உட்கார்ந்து வாட்காரன் வைத்து விட்டுப்போன முளையை அசைத்து அசைத்துப் பிடுங்கிவிட்டது. முளை வெளியே வந்து விடவே மரப்பிளவு இறுக்கிக் கொண்டது. அதனால் அந்தக் குரங்கின் கால் நசுங்கி இறந்தது.

அறிவில்லாத குரங்கு தன்செயலால் தனக்கே அழிவைத் தேடிக்கொண்டது.

### கேள்விகள்

1. பாரத தேசம் என்று எதற்குப் பெயர்?
2. சுதத்தன் எப்படிப்பட்டவன்?
3. வாட்காரன் போனபின் குரங்கு என்ன செய்தது?

### பயிற்சி 10

1. குரங்குக்கு வேறு இரண்டு பெயர்கள் கூறு.

2. பாரததேசம், ஆலயத்திற்கு, வழக்கமாக, தைரியமாக, இறுக்கிக்கொண்டது—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. ஆலயத்திற்கு வேறு ஒரு பெயர் கூறு.

## பயிற்சி 11

பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களை எடுத்து எழுது:—

1. சுந்தரம்பிள்ளை பிறந்த ஊர் ஆலப்புழை.
2. நான்கு கால்கள் உடையது நாற்காலி.
3. ஒரு தேசத்தில் பல கிராமங்கள் உண்டு.
4. தைரியம் இல்லாதவன் கோழை.
5. ஆசிரியர் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடத்தில் அன்பாக இருப்பார்.

## பயிற்சி 12

கீழ்வரும் இணைச் சொற்களைச் சேர்த்து எழுது:—

**மாதிரி** : அரசர் + இடம் = அரசரிடம்

1. பக்கத்தில் + இருக்கும் ____________
2. பிள்ளைகள் + இடத்தில் ____________
3. வழக்கம் + ஆக ____________
4. ஓட + இல்லை ____________
5. கை + இல்லை ____________
6. இருட்ட + இல்லை ____________
7. அரை + அணா ____________
8. முன் + ஒரு ____________
9. தலைவர் + ஆக ____________
10. தினம் + தோறும் ____________
11. அந்த + கழுதை ____________

## பயிற்சி 13

சொற்களை ஒழுங்காக வைத்து அர்த்தமுடைய வாக்கியமாகச் செய் :—

1. புத்தகத்தை, முனியன், கந்தனுடைய, திருடிக் கொண்டான்.

2. கல்லூரியில், திருவனந்தபுரம், வாசித்தார், சுந்தரம் பிள்ளை.

3. வீதியின், நடக்கும்போது, போனல், மோட்டார் காரில், நேரிடும், இறக்க நடுவில், அகப்பட்டுக்கொண்டு.

4. கடலில், எல்லா, சேர்கின்றன, நதிகளும்.

5. மொழி, இனிமையுடைய, தமிழ், மிகவும்.

## 9. கொன்றைவேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
கற்பெனப் படுவது சொல் திறம்பாமை.
கிட்டாதாயின் வெட்டென மற.
கீழோர் ஆயினும் தாழ உரை.
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு.
சீரைத்தேடின் ஏரைத் தேடு.
சுற்றத்திற்கழகு சூழ இருத்தல்.
சூதும் வாதும் வேதனை செய்யும்.

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயின் சிறந்தொரு கோயிலும் இல்லை.
திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக்கோபம் போராய் முடியும்.
தேடாதழிக்கின் பாடாய் முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு.
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
தோழனோடும் ஏழமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லல் படுத்தும்.
நாடெங்கும் வாழக்கேடொன்றும் இல்லை.

—

# 10. வீட்டு விலங்குகள்

| | | |
|---|---|---|
| இயல்பாம் | கவலே | வியாதி |
| காளே | செக்கு | கோமாரி |
| பருமன் | பயன் | தொத்து நோய் |
| வேற்றுமை | குடியானவன் | சிகிச்சை |
| ஜாதி | பிராணன் | கம்பீரம் |
| பிரதேசம் | உழவுத் தொழில் | வித்தியாசம் |
| ஜில்லா | சம்பந்தமான | முசுப்பு |
| உமி | அவசியம் | அலேதாடி |
| தவிடு | கொண்டாடு | பிடரி மயிர் |
| பொட்டு | தங்கும் | குளம்பு |
| பிண்ணுக்கு | பூட்டு | பேதம் |
| பருத்தி | வணிகர் | மந்தம் |
| தீனி | சுமை | துறை |
| ஏர் | பாதுகாக்க | சீவ இம்சை |

வீட்டில் ஆடுமாடு குதிரை கழுதைகளே வளர்க்கிருர்கள். நமக்கு அதிகமாகப் பயன் படக்கூடியது எருது.

எருதுகள் வைக்கோல், புல், உமி, தவிடு, பொட்டு, பிண்ணுக்கு, பருத்திக்கொட்டை முதலியவைகளேத் தின்னும்.

எருதுகள் வண்டி இழுப்பதற்கும் ஏர் உழுவதற்கும் கவலே அடிப்பதற்கும் செக்கு

ஆடுவதற்கும் பயன்படுகின்றன. பயிர் வேலை செய்யும் நம் நாட்டுக் குடியானவர்களுக்கு எருதுகள் உயிர் போன்றவை. உழவுத் தொழில் சம்பந்தமான எந்தக் காரியத்துக்கும் எருது வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை பொங்கலுக்கு மறுநாளாகிய மாட்டுப் பொங்கலன்று, குடியானவர்கள் தங்கள் எருதுகளைப் பூசித்துக் கொண்டாடுவார்கள்.

எருதுகள் எல்லாம் எல்லா வேலைகளையும் ஒரே திறமையுடன் செய்யா. வண்டி இழுப்பதில் சில எருதுகள் திறமையாக இருக்கும்; ஆனால் அவை ஏர் இழுக்கவோ கவலை இழுக்கவோ தயங்கும். அவ்விதமே நன்றாகக் கவலை இழுக்கக்கூடிய எருதுகள் வண்டியில் பூட்டப்பட்டால் சுறுசுறுப்பாக இருக்க மாட்டா.

சில இடங்களில் வணிகர்கள் எருதுகளின் மேல் சுமைகளை ஏற்றிக்கொண்டு போவார்கள். இம் மாடுகளுக்குப் பொதி மாடுகள் என்று பெயர்.

மாடுகளை வளர்ப்பவர்கள் இவற்றைச் சரியாய்ப் பாதுகாக்கவேண்டும். பலமான வியாதிகள் வந்துவிட்டால் எருதுகள் பிழைப்பது எளிதன்று. கோமாரி முதலிய தொத்து நோய்கள் அவ்வப்போது கிராமங்களில் உண்டாகி எருதுகளைக் கொல்வது உண்டு. அந்தச்

சமயங்களில் உரியவர்கள் எருதுகளுக்கு நல்ல சிகிச்சை செய்து அவற்றைக் காப்பாற்ற வேண்டும்.

நம் தேசத்தில், மிகப்பயனுள்ள விலங்குகள் வரிசையில், எருதுகளுக்குப் பிறகு குதிரையைச் சொல்லவேண்டும். குதிரை கம்பீரமும் அழகும் உள்ள விலங்கு. அது எருதைவிட விலை உள்ளது.

உருவத்தில் எருதுக்கும் குதிரைக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு. எருதுக்கு முசுப்பும் அலைதாடியும் சிறப்பாக இருந்தால் குதிரைக்குப் பிடரி மயிர் சிறப்பாக இருக்கும். எருதுக்குக் கொம்புகள் உண்டு. குதிரைக்குக் கொம்பு கிடையாது. எருதின் குளம்பு பிளவுபட்டது. குதிரையின் குளம்பு பிளவுபடாதது.



குதிரை, வண்டி இழுப்பதற்கும் ஏறிச் சவாரி செய்வதற்கும் நம் தேசத்தில் பயன்படுகிறது. இங்கிலாந்து முதலிய தேசங்களில் குதிரைகள் ஏர் உழுவதற்கும் குடியானவர்களால் உபயோகப் படுத்தப்படுகின்றன.

மேலும் பொதி மாடுபோலவும் அவைகள் பயன்படுகின்றன.

குதிரை புல், கொள்ளு, நன்ருகக் காய்ந்து பக்குவமான வைக்கோல் முதலியவற்றைத் தின்னும். தின்னுவதில் கூட எருதுக்கும் குதிரைக்கும் வேறுபாடு உண்டு. எருது முதலில் தீனியை உட்கொண்டு பிறகு அதை மறுபடியும் வாய்க்குக் கொண்டுவந்து அசைபோடும். ஆனுல், குதிரை முதலில் தின்னும்போதே நன்ருக மென்று தின்றுவிடும்.

குதிரை எருதைவிடச் சற்றுக் கூர்மையான அறிவை உடையது. அது புதுப் பழக்கங்களை விரைவில் பிடித்துக்கொள்ளும். இதனுல்தான் சர்க்கஸ்களில் குதிரைகளைப் பழக்கி வேடிக்கை காட்டுகிருர்கள்.

கழுதை மிகவும் மந்தமான விலங்கு. நம் நாட்டில் கழுதைகள் பெரும்பாலும் வண்ணுர்களால் வளர்க்கப்படுகின்றன. தினந்தோறும் வீட்டிலிருந்து துறைக்கு அழுக்குத் துணிகளைக் கொண்டு போவதற்கும்



துறையிலிருந்து வெளுத்த துணி மூட்டைகளை வீட்டிற்குக் கொண்டு வரவும் கழுதைகள் வண்ணுர்களுக்கு மிகவும் அவசியம்.

எருதையும் குதிரையையும் நன்றாகத் தீனி வைத்து வளர்ப்பதுபோல் கழுதையை வளர்ப்பது இல்லை. வேலையில்லாத வேளையில் கழுதையை முன் கால்களைச் சேர்த்துக் கட்டி விட்டுவிட்டால் அது மேய்ந்து பசியாற்றிக் கொள்ளும்.

கழுதை எப்பொழுதும் சுத்தமான தண்ணீரைக் குடிக்கவே விரும்பும். அது காகிதங்களைத் தின்னும்.

கழுதையைச் சிறு பிள்ளைகள் துன்புறுத்துகிறார்கள். அவ்வாறு செய்வது சீவ இம்சையாகும்.

### கேள்விகள்

1. நல்ல ஜாதி எருதுகள் எங்கே கிடைக்கும்?
2. எருதின் தீனி என்ன?
3. எருதுகள் எந்தெந்த வேலைகளுக்குப் பயன்படும்?
4. எருதுகளுக்கு வரக்கூடிய நோயின் பெயர் என்ன?
5. எருதுக்கும் குதிரைக்கும் உள்ள வேறுபாடு என்ன?
6. குதிரை எந்த வேலைக்குப் பயன்படும்?
7. கழுதைகளை அதிகமாக வளர்ப்பவர்கள் யார்?

### பயிற்சி 14

1. பாதுகாக்கவேண்டும், சிகிச்சை, தொத்துநோய், கொண்டாடுவார்கள், பிராணன்—இவற்றில் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு சொந்த வாக்கியம் எழுது.

2. எருதின் உபயோகத்தைப் பற்றி ஏழு வாக்கியங்கள் எழுது.

3. இங்கிலாந்தில் குதிரையை உபயோகப்படுத்தும் விதத்தைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

# 11. காட்டு விலங்குகள்

| | | |
|---|---|---|
| முதன்மை | உறுதி | கஜம் |
| ஆரண்யம் | பிரயோகம் | பிரதமம் |
| மிருகேந்திரன் | சுபாவம் | சால் |
| அடர்ந்த | மூட்டு | அமையாத |
| கர்ஜித்தால் | ஒற்றை | துதிக்கை |
| அலறி | மாமிசபக்ஷணி | துதிபிக்கை |
| சிதறி | அன்று | புகல்வார் |
| பற்றி | சாகபக்ஷணி | அவயவம் |
| புசிக்கும் | பூண்டு | தந்தம் |
| கொடுமை | கிழங்கு | திமில் |
| பதுங்கி | உட்கொள்ளும் | பாலைவனம் |
| கொடியவிலங்கு | பொருள் | ஈசல் |
| பொந்து | தலைமை | சடைசடையாக |
| அஜாக்கிரதை | ஸ்தானம் | பிடரி மயிர் |
| குக்கிராமம் | வேழம் | வீரமுள்ள |

காட்டு மிருகங்களில் முதன்மையானதாகக் கருதப்படுவது சிங்கமே. ஆரண்யவாசிகளான விலங்குகளுக்கெல்லாம் சிங்கம் அரசன். அதனால் அதற்கு மிருகேந்திரன் என்றும் மிருகராஜன் என்றும் பெயர்கள் ஏற்பட்டன. ஆண் சிங்கத்துக்கு அடர்ந்த பிடரி மயிர் உண்டு. பெண் சிங்கத்திற்கு அது கிடையாது. சிங்கம் வீரமுள்ள விலங்கு. அது கர்ஜித்தால் வனத்தில் உள்ள மிருகங்கள் யாவும் அலறி அங்கும் இங்கும்



சிதறி ஓடும். அப்போது சிங்கம் பாய்ந்து வந்து ஏதாவது ஒன்றைப் பற்றிப் புசிக்கும்.

சிங்கத்துக்கு அடுத்ததாகப் புலியைப் பற்றிப் பேசலாம். உருவத்தில் புலி பூனையைப்போல இருக்கும். ஆனால் குணத்தில் மிக



வும் கொடுமையானது. பூனை அளவில் சிறியது. ஆனால் புலியோ மிகவும் பெரியது. புலிக்குப் பிடரி மயிர் இல்லை. அதன் தேகத்தில் கருநிறமான கோடுகள் உண்டு. புலி பதுங்கி மறைந்திருந்து சிறு விலங்குகளைக் கொன்று தின்னும். சிங்கத்தை வீரமுள்ள விலங்கு என்று கூறினால் புலியைக் கொடிய விலங்கு என்று கூறவேண்டும். சிங்கம் பசி எடுத்தால் தான் மற்ற விலங்குகளைக் கொன்று தின்னும். புலியோ தன் எதிரில் வரும் விலங்குகளைப் பசி எடுத்தாலும் எடுக்காவிட்டாலும் பாய்ந்து கொல்லும்.

புலிக்குப் பிறகு சிறுத்தையைப் பற்றிப் பேச வேண்டும். சிறுத்தை புலியைப் போலவே இருக்கும். அதன் உடம்பில் புள்ளி

கள் நிறைய உண்டு. சில காடுகளில் கறுப்புச் சிறுத்தைகள் உண்டு. சிறுத்தை மரப் பொந்துகளிலும் மரத்தின் கிளைகளிலும் பதுங்கி நின்று அஜாக்கிரதையாக இருக்கும் சிறு விலங்குகளின்மேல் பாய்ந்து கொன்று தின்னும். காடுகளை அடுத்துள்ள குக்கிராமங் களுக்குள் சிறுத்தை இரவில் நுழைந்து ஆடு, கோழி, முதலியவற்றைப் பிடித்துக்கொண்டு போய்விடும்.

காண்டாமிருகம் யானைக்கு அடுத்தபடியாகப் பலத்தில் பெரியது. அதற்கு நிமிர்ந்து



கூராக நிற்கும் காதுகள் உண்டு. அதன் மூக்கின்மேல் ஒரு வலுவான கொம்பு உண்டு. அதன் தோல் மிகவும் உறுதியுடையது. ஒரே ஒரு முறை கத்தியால் வெட்டினாலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தாலும் அது சாகாது. காண்டா மிருகம் மிகவும் முரட்டுச் சுபாவம் உடையது. கோபம் மூட்டப்பட்

டால் அது பெரிய சிங்கத்தையும் தன் ஒற்றைக் கொம்பால் தாக்கிக் குத்திக்கொன்றே விடும். அது புலி, சிங்கம் சிறுத்தை முதலியவற்றைப்போல் மாமிசபக்ஷணி அன்று. யானையைப்போல அது சாக பக்ஷணிதான். அது முள், பூண்டு, இலை, கிழங்கு முதலிய பொருள்களையே உட்கொள்ளும்.

எல்லா விலங்குகளிலும் பலத்தில் முதலிடம் பெறுவது யானைதான். யானையை வேழம் என்று கூறலாம். பலத்தால் மாத்திரமின்றி உருவத்தின் அளவாலும் முதல் இடம் பெறுவது யானையே. இதற்கு முறங்களை ஒத்த காதுகளும் தூண்களைப் போன்ற கால்களும், பெரிய உலக்கை போன்ற தும்பிக்கையும் உண்டு. எந்தப் பிராணிக்கும் அமையாத தும்பிக்கை என்னும் உறுப்பு யானைக்கு அமைந்திருக்கின்றது. தும்பிக்கைக்குத் துதிக்கை என்றும் பெயர் உண்டு. இந்த அவயவம் முகத்திலிருந்து நீண்டு தொங்கும். யானைக்கு இரண்டு கொம்புகள் உண்டு. இவற்றுக்குத் தந்தங்கள் என்று பெயர். இவை



அதன் வாயிலிருந்து நீண்டு துதிக்கையின்

இரு பக்கலிலும் வளைந்து நிற்கும். யானை தன் தும்பிக்கையால், பெரிய மரக்கிளைகளை உடைத்து இலைகளைத் தின்னும்.

ஒட்டகம் உயரமான விலங்கு. அதற்கு நீண்ட கழுத்து உண்டு. அதன் முதுகில் மூட்டையைப் போன்ற ஓர் அவயவம் உண்டு. அதற்குத் திமில் என்று பெயர். ஒட்டகம் மணற் காடுகளில் வாசம் செய்யும். இது வெயிலுக்குப் பயப்படாது. இதைப் பாலைவனப் பிரதேசங்களிலுள்ள மனிதர்கள் பழக்கி உபயோகிக்கிருர்கள். இதன்மேல் பளுவுள்ள சுமைகளை ஏற்றிக்கொண்டு சவாரி செய்து வனங்களைக் கடப்பதும் உண்டு. அதனுல் இதற்கு வனுந்தரக் கப்பல் என்றும் பெயர் உண்டு. ஒட்டகம் சாகபக்ஷணி. ஒரு முறை அது தண்ணீர் குடித்துவிட்டால் ஒரு வாரத்திற்கு மறுபடியும் நீர் பருக வேண்டிய அவசியமிராது.



ஒட்டகத்தைப்போல் உள்ள மற்ருெரு விலங்கு ஒட்டைச் சிவிங்கியாகும். இதன் கழுத்து மிகவும் நீளமானது. இது சரியாக

நிமிர்ந்து நின்ருல் மூன்று ஆள் உயரம் இருக்கும். இதன் தேகத்தில் புள்ளிகள் நிறைய உண்டு. இதுவும் சாகபக்ஷணியே.

கரடியை நீங்கள் பார்த்திருக்கலாம். அதுவும் காட்டில் வாழும் துஷ்ட விலங்கே. அதற்குக் கனத்த உடல் உண்டு. அதன் உடலில் மயிர் சடை சடையாக அடர்ந்து இருக்கும். கரடி பலமுள்ள விலங்கு. அது நின்று கொண்டே எதிரியைக் கட்டிப்பிடித்துச் சண்டை செய்யும். நம் நாட்டுக்கரடி கருமை நிறமானது. குளிர் மிகுந்த வடதேசங்களில் இருக்கும் கரடி வெண்மை நிறமாக இருக்கும். கரடி கீரை, கிழங்கு முதலியவற்றையும், ஈசல் எறும்பு முதலியவற்றையும் தின்னும்.



காட்டு விலங்குகள் இன்னும் பல உள. அவற்றைப் பற்றி வேறு வகுப்புகளில் நீங்கள் படிக்கலாம்.

### கேள்விகள்

1. சிங்கத்துக்கும் புலிக்கும் உள்ள குண வேறுபாடு என்ன ?

2. ஆண் சிங்கத்திற்கும் பெண் சிங்கத்திற்கும் என்ன வித்தியாசம் ?

3. சாகபக்ஷணிகளாக இரண்டு காட்டு விலங்குகளின் பெயரைச் சொல்லு ?

4. சிறுத்தை என்ன செய்யும் ?

5. காண்டா மிருகத்தைப்பற்றி உனக்கு என்ன தெரியும் ?

6. தும்பிக்கைக்கு வேறு பெயர் என்ன ?

7. வணுந்தரக் கப்பல் என்றால் என்ன ? ஏன் அப் பெயர் வந்தது.

8. ஒட்டகத்தைப்போன்ற மற்றொரு மிருகம் எது ? அது எப்படியிருக்கும் ?

9. கரடி எப்படிச் சண்டை செய்யும் ?

10. கரடியின் தீனி என்ன ?

## பயிற்சி 15

1. யானையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது ?

2. திமில், அவயவம், பருகு, தலைமை ஸ்தானம், அமையாத, உறுதியுடைய, பிரயோகம், துப்பாக்கி, அஜாக்கிரதையாக இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

3. இந்தப் பாடத்தில் வந்துள்ள வினைச்சொற்களைப் பொறுக்கி எழுது.

4 வேறுபாடு—வேறொரு சொல் எழுது.

5. இந்தப் பாடத்தில் வந்துள்ளமிருகங்களின் பெயர்களை ஒரு வரிசையாகவும் இடங்களின் பெயர்களை ஒரு வரிசையாகவும் எழுது.

6. பிரதம இடம்—இதை வேறு சொற்கள் எழுது.

7. யானைக்கு வேறு இரண்டு சொற்கள் எழுது.

8. உறுப்புக்கு வேறு ஒரு சொல் எழுது.

## பயிற்சி 16

கீழ்வரும் சொற்களில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எதிர்ச் சொல் எழுது:—

| | | | |
|---|---|---|---|
| பெரிய | ________ | தீங்கு | ________ |
| சாகபக்ஷணி | ________ | அதிகம் | ________ |
| இரவு | ________ | கீழே | ________ |
| மறைந்து | ________ | அசுத்தமான | ________ |
| அஜாக்கிரதை | ________ | பலம் | ________ |
| உண்டு | ________ | நியாயம் | ________ |
| நல்ல குணம் | ________ | ஏழை | ________ |
| இன்பம் | ________ | எளியவர் | ________ |
| மந்தமான | ________ | பின்புறம் | ________ |
| வேகமாக | ________ | காலை | ________ |
| பிறந்தான் | ________ | ஏறினான் | ________ |
| முன்னே | ________ | பிரிந்தான் | ________ |
| ஆத்திரம் | ________ | ஆரம்பம் | ________ |
| மகிழ்ச்சி | ________ | பகிரங்கமாக | ________ |
| விழித்தது | ________ | வெளியே | ________ |

# 12. சிங்கமும் நாயும்

| | | |
|---|---|---|
| மாநகரம் | இடுக்கிக்கொண்டு | காவற்காரன் |
| காட்சி | மல்லாந்து | தூண்டி |
| தோற்றம் | இறைச்சி | இணங்கவில்லை |
| களிக்க | உச்சிவேளை | நகர்ந்து |
| கட்டணம் | ருசி | குவளை |
| பிரவேசம் | இரக்கம் | சாந்தி |
| பாலன் | திக்கற்ற | இன்றி |
| இசைந்தான் | பரிதாபமான | தாரைதாரையாய் |
| நுழைவுப்பணம் | இளக்கிவிட்டது | வடிந்து |

இங்கிலாந்து தேசத்தில் லண்டன் மாநகரத்தில் இருக்கும் மிருகக் காட்சி சாலையில் முன்பு ஓர் ஆண் சிங்கம் அடைக்கப்பட்டிருந்தது. அச்சிங்கம் அடர்ந்த பிடரி மயிரோடு கூடியதாய்ச் சிறந்த தோற்றம் உடையதாய் இருந்தது. ஆகையால் அதைக்கண்டு களிக்க மக்கள் பலர் திரள் திரளாக வந்தனர்.

மிருகக் காட்சிச் சாலைக்குள் சென்று பார்ப்பதற்கு ஒவ்வொருவரும் கட்டணம் க்கட்டவேண்டும். கட்டணம் கட்டக் கையில் காசு இல்லாதவர்கள் அங்குள்ள மிருகங்களுக்குத் தீனியாகச் சிறிய விலங்குகளைக் கொண்டு வந்தால், அவர்களுக்குப் பிரவேசக் கட்டணம் அவசியமில்லை.

ஒரு நாள் அந்த மிருகக் காட்சிச் சாலைக்கு ஒரு சிறுவன் வந்தான். அவனிடத்தில் கட்டணக் காசு இல்லை. அவன் ஒரு நாய்க்

குட்டியை விலங்குகளுக்குத் தீனியாகத் தர இசைந்தான். எனவே, அவன் இலவசமாக நுழைவுப் பணம் இல்லாமல் உள்ளே விடப் பட்டான்.



உள்ளே சென்ற சிறுவன் சிங்கத்தின் கூட்டருகில் வந்து நாய்க்குட்டியை அச்சிங் கத்துக்கு இரையாகக் கூட்டினுள் போட்டு விட்டான். சிங்கத்தைக் கண்ட நாய்க்குட்டி, குலை நடுங்கி, பயந்து, வாலை இடுக்கிக் கொண்டு, நாக்கை நீட்டிக்கொண்டு, மல் லாந்து, அசைவற்றுப் படுத்துவிட்டது. நாள் தோறும் இறைச்சித் துண்டைத் தின்னும் மிருகேந்திரனுக்கு ஓர் உயிருள்ள நாய்

கிடைத்தால் மகிழ்ச்சி இல்லாமலா போகும்? மேலும் நல்ல பசி எடுக்கும் உச்சி வேளையில் உருசியுள்ள தீனி கிடைத்தது அதிர்ஷ்டம் அல்லவா? எனவே நாயைக் கிழித்துத் தின்ன எண்ணிச் சிங்கம் அதனருகில் வந்தது. வந்த சிங்கம் பாதி உயிர்போனது போல் மல்லாந்து கிடந்த நாயைப் பார்த்து இரக்கம் கொண்டது. அது தன் பசியை மறந்தது. திக்கற்ற நாய் தன்னைப் பார்க்கும் பரிதாபமான பார்வை கொடிய பசியோடிருந்த அந்தச் சிங்கத்தின் மனத்தை இளக்கிவிட்டது. நாயைத் தொடாமல் சிங்கம் தொலைவாகச் சென்று படுத்துக் கொண்டது.

இவற்றை எல்லாம் கண்ட காவற்காரன் ஒரு பெரிய இறைச்சித் துண்டைச் சிங்கத்துக்குத் தீனியாகப் போட்டான். ஆனல் மிருகராஜன் அதையும் தொடவில்லை. காவற்காரன் அதை எவ்வளவோ தூண்டியும் அது இறைச்சியைத் தின்ன இணங்கவில்லை. இவ்வாறு இரண்டுமணி நேரம் கழிந்தது. சிங்கத்தின் செய்கையைப் பார்த்த நாய் சிறிது சிறிதாக அச்சம் நீங்கிப் பசி தாங்காமல் சற்று நகர்ந்து வந்து இறைச்சித் துண்டைக் கடித்துத் தின்னத் தொடங்கிற்று. இதைக் கண்ட சிங்கம் மெதுவாக எழுந்து நாய்க்குப் பயம் காட்டா

மல் மெல்ல மெல்ல வந்து தானும் இறைச்சி யின் ஒரு பக்கத்தைக் கடித்துத் தின்னத் தொடங்கிற்று. நாய் தன் பசி தீர்ந்த பிறகு ஒரு குவளையில் இருந்த நீரை நக்கி நக்கி அருந்தி, தன் தாகத்தையும் சாந்தி செய்து கொண்டு படுத்துவிட்டது. சிங்கமும் இறைச் சியைத் தின்று தண்ணீர் குடித்துவிட்டு நாயின் பக்கத்தில் வந்து மெதுவாகப் படுத் துக்கொண்டது.

இவ்வாறு நாள்தோறும் நடந்து கொண்டு வந்தது. சில நாட்களில் நாய்க் குட்டி அச்சம் சற்றும் இன்றிச் சிங்கத்துடன் விளையாட ஆரம்பித்துவிட்டது. நாயின் விளை யாட்டைக் கண்டு சிங்கம் சந்தோஷம் அடைந்தது. சாதாரணமாக நாம் வீட்டில் வளர்க்கும் நாய் நம்மேல் குதிப்பதும் நம் முகத்தை நக்குவதும்போல இந்த நாய்க் குட்டியும் அந்தச் சிங்கத்துடன் பழகி வந்தது.

இவ்வாறு சில மாதங்கள் கழித்தபின் ஒரு நாள் அந்த நாய் நோயுற்று இறந்துவிட் டது. இறந்த நாயை வெளிப்படுத்த காவற் காரன் வந்தான். ஆனால் சிங்கம் அந்த நாய்க் குட்டியைத் தன் அருகில் இழுத்து வைத்துக் கொண்டது. காவற்காரன் பேசாமல் போய் விட்டான். நாய் எழுந்து தன்னுடன் விளை

எழுந்து தன்னுடன் விளையாடும் என்று அந்தச் சிங்கம் எண்ணி எண்ணி ஏமாந்தது. கடைசியில் நாய் இறந்துவிட்டது என்று தெரிந்துகொண்டு, சிங்கம் அழ ஆரம்பித்து விட்டது. அதன் கண்களில் நீர் தாரை தாரையாய் வடிந்தது. ஆறும் நாள் அதே ஏக்கத்தில் சிங்கம் உயிரும் நீங்கியது.

## கேள்விகள்

1. மிருகக் காட்சிச் சாலைக்குள் எவ்விதம் போவது?

2. நாய்க்குட்டி சிங்கத்தின் கூட்டுக்குள் எவ்விதம் போக நேர்ந்தது?

3. சிங்கத்துக்கும் நாய்க்குட்டிக்கும் எவ்விதம் பழக்கம் ஏற்பட்டது?

## பயிற்சி 17

1. பிடரி மயிர், தோற்றம், கட்டணம், பரிதாபமான, இளக்கிவிட்டது, காவற்காரன், இணங்கவில்லை, ஏக்கத்தில், இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

2. தொடங்கிற்று, பருகி, அச்சம், எண்ணி, இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அதே அர்த்தமுடைய வேறு ஒவ்வொரு சொல் எழுது.

3. நாய் இறந்த பிறகு சிங்கம் அடைந்த வருத்தத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

4. பாதி உயிர்போனது போல,
தாகசாந்தி செய்துகொண்டு,
பரிதாபமான பார்வை,
நுழைவுப்பணம் இல்லாமல்,
சிறந்த தோற்றம் உடையதாய்...

இவற்றில் ஒவ்வொரு தொடரையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது :—

## பயிற்சி 18

கீழ்வரும் சொற்களில் ஒவ்வொன்றின் எதிரிலும் அது ஒருமையா, பன்மையா என்பதை எழுது :—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | போனாய் | ——— | 10. | நக்கிற்று | ——— |
| 2. | குதிரை | ——— | 11. | நின்றன | ——— |
| 3. | பட்டணம் | ——— | 12. | மாதங்கள் | ——— |
| 4. | கும்பிட்டார்கள் | ——— | 13. | இறைச்சி | ——— |
| 5. | மறைந்தன | ——— | 14. | மிருகேந்திரன் | ——— |
| 6. | எருது | ——— | 15. | திமில் | ——— |
| 7. | இறங்கினான் | ——— | 16. | அவயவம் | ——— |
| 8. | பார்த்தீர்கள் | ——— | 17. | சுமைகள் | ——— |
| 9. | விலங்குகள் | ——— | 18. | வனாந்தரம் | ——— |

# 13. ஆறு

கல்லும் மலையுங் குதித்து வந்தேன் ; பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்.
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்-பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன் ;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்-மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.
ஆயிரம் காலால் நடந்து வந்தேன்-நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்து வந்தேன்.
நேய முறப் புன்செய்க் காட்டிலும்-அங்கங்கு
நீரை இறைத்து நெடுக வந்தேன்.
அல்லும் பகலும் அலைந்து வந்தேன்-எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்.
நில்லும் ; எனக்கு இனி நேரமில்லை-இன்னும்
நீண்ட வழி போக வேண்டுமம்மா !

**தேசிக விநாயகம் பிள்ளை**

# 14. பாதை ஒழுங்கு

| | | |
|---|---|---|
| கும்பல் | சாலை | தொடரும் |
| நிதானித்து | வியர்வை | பொழிகிறது |
| கடந்து | அசுத்தமான | உடை |
| நெஞ்சு | ஏழை | அணியாமல் |
| சிந்தித்து | எவ்விதத்திலும் | மோட்டார் |

**சுந்தரம் :**—அப்பா, பார்த்தீர்களா? அதோ அங்கே பலர் கும்பலாக நிற்கிறார்கள்!

**தந்தை :**—சுந்தரம், அங்கே ஒரு சிறுவன் வீதியின் இப்புறமிருந்து அப்புறம் ஓடி ஒரு மோட்டார் வண்டியில் அகப்பட்டுக் கொண்டான். அதை வேடிக்கை பார்க்கவே மனிதர்கள் அங்கே கூட்டமாக நிற்கிறார்கள்.

**சுந்தரம் :**—பாவம்! அவன் எப்படி அப்பா அகப்பட்டுக்கொண்டான்? அந்த மோட்டார் வண்டிக்காரனைத் தான் தண்டிக்க வேண்டும் அப்பா!

**தந்தை :**—மோட்டார் ஓட்டி என்ன செய்வான்? மோட்டார் அதிக வேகமாகப் போகும்போது இவன் ஏன் குறுக்கே போனான்? ஓரமாகத்தானே போயிருக்க வேண்டும்! தெருவின் இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்துக்குப் போக வேண்டுமானால், நின்று நிதானித்து

வண்டி வராத சமயம் பார்த்தல்லவா கடந்து போகவேண்டும்?

**சுந்தரம் :**—சரிதான் அப்பா. இந்தப் பையன் தான் சிறுவன்! அவசரமாகப் போய் மாட்டிக் கொண்டான். பெரியவர்கள் கூட வண்டியில் அகப்பட்டுக் கொள் கிறார்களே? அது ஏன் அப்பா!

**தந்தை :**—சுந்தரம், நீ கேட்பது நியாயமான கேள்விதான். வழியில் நடக்கும்போது கவனிப்புடன் நடப்பதை விட்டு, ஏதோ



நெஞ்சில் நினைத்துக்கொண்டே நடப் பது சிலருக்குப் பழக்கம். அப்படிப்பட் டவர்கள் வண்டியில் அகப்பட்டுக்

கொள்ளுவார்கள். எதையோ சிந்தித்துக் கொண்டே வழி நடந்தால் பின்னால் வரும் வண்டியும் எதிரில் வரும் வண்டியும் தெரியா. வண்டியின் மேலேயே அவர்களுக்குக் கவனம் இராது. ஆகையால், அவர்கள் சில சமயங்களில் வண்டிகளில் அகப்பட்டுக் கொள்வதில் என்ன ஆச்சரியம்?

**சுந்தரம்** :—சரிதான் அப்பா. அதோ அந்தப் பையன் காலில் ஏதோ கட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறானே, அது என்ன அப்பா?

**தந்தை** :—சாலையின் ஓரத்தில் காலில் செருப்பு இல்லாமல் நடந்திருப்பான். ஆணியோ கண்ணாடியோ காலில் குத்தியிருக்கும். அதற்காகத்தான் வைத்தியரிடம் கட்டுக் கட்டிக் கொண்டிருப்பான். வீதியில் போவதாக இருந்தால், காலில் செருப்பு இல்லாமல் போகக்கூடாது. செருப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் தரையைக் கவனித்து நடக்கவேண்டும். அவ்விதம் நடந்தால்தான் அசுத்தமான சாணம் முதலியவற்றை மிதிக்காமல், ஆணி, கண்ணாடி, எலும்பு, முதலியவற்றின்மேல் கால் வைக்காமல் போகலாம்.

எவ்வளவு ஏழையாக இருந்தாலும் எவ் விதத்திலும் ஒரு ஜதை செருப்பை வாங் கிக் காலில் போட்டுக் கொள்ள வேண் டும். செருப்பில்லாத காலால் நோயாளி யின் எச்சிலை மிதித்தால் மிதிப்பவருக் கும் நோய் தொடரும்.

**சுந்தரம்** :—தெரிந்து கொண்டேன் அப்பா. ஏன் அப்பா இவன் உடம்பில் இவ்வளவு வியர்வை சிந்துகிறது?

**தந்தை** :—இந்த வெயிலில் இவன் குடை பிடித்துக் கொள்ளாமல் போகிறான். அவ்வாறு போகலாமா? நாம் குடை பிடித்துக் கொண்டு போவதால் நமக்கு வியர்வை கொட்டவில்லை. அவன் உடம் பில் நேராக வெயில் படுவதால் வியர்வை அதிகமாகப் பொழிகிறது. மேலும் அவன் உடம்பில் யாதொரு உடையும் அணியாமல் இருக்கிறான். நமக்கு வியர்வை வந்தால் நம் ஆடை இந்த வியர் வையை இழுத்துக் கொள்ளும். அவ னுக்கு உடை இல்லாமையால் வரும் வியர்வை நீர் ஆறாக வழிகிறது. எப் போதும் வெளியில் போவதாக இருந் தால் கையில் குடை எடுத்துக்கொண்டு போக வேண்டும். குடை இருந்தால் நாம்

வெயிலுக்கும் மழைக்கும் பயப்பட வேண்டிய நிலைமை இல்லை.

**சுந்தரம்** :—சரி அப்பா, நேரமாகிறது. வீட்டுக்குப் போகலாம் வாருங்கள்.

## பயிற்சி 19

1. குடையின் உபயோகத்தைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

2. தெருவுக்கு வேறு இரண்டு சொற்கள் எழுது.

3. நிதானித்து, கடந்து, தொடரும்—இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

4. தெருவில் நடக்க வேண்டிய விதத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

# 15. குமணன்

| | | |
|---|---|---|
| நூற்றாண்டு | சூழ்ச்சிகள் | குடிகொண்டு |
| நேர்மாறான | படைத்தவன் | மொழிந்து |
| ஆர்வம் | வள்ளல் | கொடையாளி |
| கானகம் | இளவல் | மன்னிக்குமாறு |
| தலைவன் | வெகுமானம் | தேற்றினார் |
| சகோதரன் | பொறாமை | ஒழித்து |

பல நூற்றாண்டுகளுக்கு முன்னே நம் தமிழ் நாட்டில் குமணன் என்ற ஒரு மன்னன் வாழ்ந்திருந்தான். அவன் முதிர மலைக்குத் தலைவன். அவனிடத்தில் நற்குணங்கள் யாவும் நிரம்பி இருந்தன. குமணன் கல்வியில் ஆர்வம் உடையவன்; கூர்மையான அறிவு படைத்தவன். இல்லை என்று கேட்கும் ஏழைகளுக்கு இல்லை என்று கூறாமல் அவர்கள் கேட்பதைக் கொடுக்கும் மேன்மையான குணம் படைத்தவன் அவ்வள்ளல். ஆகையால் குமணன் கொடையாளி என்று புகழ் பெற்றான்.

குமணனுக்கு ஓர் இளவல் இருந்தான். அவன் பெயர் இளங்குமணன் என்பது. அவன் தன் சகோதரனுக்கு நேர்மாறான குணங்கள் உடையவன். தன் தமையன் வள்ளல் என்று எல்லோராலும் புகழப்படுவதைக் கண்ட இளங்குமணன் பொறாமை கொண்டான்; தன் தமையனைக் கொல்வதற்

கும் பல சூழ்ச்சிகளைச் செய்தான். ஆனால் அவை பலிக்கவில்லை. அது கண்ட குமணன் தன் இளையானே அரசு ஆளட்டும் என்று எண்ணி, நாட்டை விட்டுக் காட்டுக்குப் போய்விட்டான்.

குமணன் வனத்திற்குச் சென்றபின் இளங் குமணனே மன்னனானன். ஆனால், அவனைக் குடிகள் சற்றும் விரும்பவில்லை.



இதன்பின் தன் தமயனை ஒழித்துவிட வழி தேடினான் இளங்குமணன். ஆகையினால் "எவன் குமணனுடைய தலையை வெட்டிக் கொண்டு வருகிறானே அவனுக்குப் பத்தாயிரம் பொன் பரிசு அளிப்பேன்" என்று அவன் பறை சாற்றினான்.

வனத்தில் வாழ்ந்த குமணன் ஓர் அமைதியான இடத்தில் குடிசை அமைத்துக்கொண்டு அதில் வசித்து வந்தான். காய்களும் கனிகளும் கிழங்குகளும் அவனுக்கு உணவாயின. இரவிலும் பகலிலும் அவன் ஈசனையே நினைத்து வாழ்ந்தான். குடிகள் அவனைக்கண்டு, இளங்குமணன் செய்துவரும் கொடுமைகளை அவனிடம் முறையிட்டு வந்தனர். குமணன் அவர்களுக்கு ஆறுதல் சொல்லி வந்தான்.

ஒருநாள் சாத்தனார் என்னும் பெரும் புலவர் ஒருவர் குமணனைத் தேடி வந்தார். அவர் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததால் அரசனை நாடி ஏதாவது பரிசில் பெற்றுச் செல்லலாம் என்று எண்ணி வந்தார். ஆனால் புலவருக்குப் பரிசாக அளிக்க அவனிடம் ஒரு பொருளும் இல்லை. குமணன் புலவரை நோக்கி, "புலவரே! தலையைக் கொண்டு வருபவருக்குப் பத்தாயிரம் பொன் தருவதாக என் தம்பி பறைசாற்றியுள்ளான். ஆகையால், நீர் எனது தலையைக் கொண்டுபோய் உமது வறுமையை நீக்கிக் கொள்ளும்" என்றான். அது கேட்ட புலவர் உடல் துடித்தார்; நெஞ்சம் பதைத்தார். "அரசே! எனக்கு வேண்டும்போது உமது தலையைப் பெற்றுக் கொள்ளுகிறேன்" என மொழிந்து, அரசனைவிட்டு அகன்றார்.

புலவர் ஒரு சிற்பியிடம் சென்று, அரசன் தலைபோலச் செவ்வாழை மரத்தின் அடிக் கிழங்கினுற் செய்வித்து எடுத்துச் சென்று, இளங்குமரனைக் கண்டு, "இதோ உன் தமையன் தலை!" என்ருர். தமையன்



தலையைக் கண்டதும் இளங்குமரனுக்கு அளவற்ற வருத்தம் உண்டாயிற்று. அவன் "ஐயோ! என்ன காரியம் செய்தேன்" என்று அலறி அழுதான். அரசன் படும் துயரத்தைக் கண்ட புலவர் மனம்பொருமல்,

உண்மையைக் கூறி அவனைத் தேற்றினார். இளங் குமணன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, புலவரோடு கானகத்துக்குச் சென்றான்; தன் தமையன் காலில் விழுந்து, பிழை பொறுக்கும்படி வேண்டி, அவனை அழைத்து வந்து முடி சூடும்படி செய்தான்; தன் தமையனுக்கு அடங்கி ஒற்றுமையுடன் வாழ்ந்தான்.

### கேள்விகள்

1. குமணனிடம் நிறைந்திருந்த நற்குணம் என்ன?
2. இளங் குமணன் ஏன் தன் தமையன்மேல் பொறாமை கொண்டான்?
3. குமணன் ஏன் நாட்டை விட்டுக் காட்டுக்குப் போனான்?
4. இளங்குமணன் பறை அறைந்து என்ன தெரிவித்தான்?
5. காட்டில் குமணன் எவ்வாறு காலம் கழித்தான்?
6. சாத்தனார் குமணனிடம் எதற்காக வந்தார்?
7. சாத்தனார் செய்த உபாயம் என்ன?

### பயிற்சி 20

குமணன் குணத்தைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

2. மீண்டும், தேற்றினான், நேர்மாறான, பொறாமை பரிசில்—இவற்றில் ஒவ்வொன்றையும் ஒரு சொந்த வாக்கியத்தில் எழுதுக.

# 16. தமிழ் மொழி

| | | |
|---|---|---|
| சுவை | வளம் | பொழியும் |
| தளரா | வழங்கும் | பள்ளியர் |
| ஏற்று | தெள்ளியர் | புதியன |
| வெள்ளையர் | உள்ளம் | தனித்து |

மொழியில் சிறந்ததும் தமிழ்மொழியே
முதலில் பிறந்ததும் தமிழ்மொழியே
பொழியும் செந்தேன் பழம்போலே
வழியும் சுவைசேர் தமிழ்மொழியே.
தனித்து வழங்கும் வளம் நிறைந்தே
தளராப் பெருமை தாய்மொழியே.
புதியன கலந்து பலம்பெருகி
விதிபல பெருக்கும் தமிழ்மொழியே.
வள்ளுவர் வகுத்த குறள்கொண்டே
பள்ளியர் படிக்கும் தமிழ்மொழியே.
வெள்ளையர் நூல்பல உளம் ஏற்றத்
தெள்ளிய்ரும் புகழ் தமிழ்மொழியே.

## சொற்பொருள்

சுவை - உருசி, வளம் - செழிப்பு, பொழியும் - பெய்யும், வழியும் - நிறைந்து வெளிவிழும், விளங்கும் - தெரியும், திரிந்து - மாறி, வகுத்த - பிரித்த, பள்ளியர் - பள்ளிக்கூடப் பிள்ளைகள், வெள்ளையர் - வெள்ளைக்காரர்கள், உளம் - மனம், ஏற்று - வாங்கி, தெள்ளியர் - அறிவு தெளிந்தவர்.

# 17. நாகனும் செல்லேயும்

| | | |
|---|---|---|
| நாகரிகம் | காலாட்படை | அமர்ந்தபடி |
| வாணிபம் | சேதம் | மடிந்தான் |
| கடவுள் பக்தி | விளைத்தான் | குறிவைத்து |
| செல்வம் | இடசாரி | தாமதிக்காமல் |
| வீரக்கழல் | வலசாரி | வீழ்த்தினன் |
| ஏந்தி | சுழற்றி | சேனை |
| இல்லறம் | ஆவி | உன்னினன் |
| பறைசாற்றினன் | பதின்மடங்கு | திடசித்தம் |
| இறைவன் | உவகை | ஈந்து |
| போர்க்கோலம் | இழந்து | புத்தாடை |
| முதியவன் | பாய்ந்தன | துணிவு |
| விடைபெற்று | பராக்கிரமம் | போர்முனை |
| வீரம் | துரகம் | அடைந்தான் |

முன் காலத்தில் நம் தமிழ்நாடு சீரும் சிறப்பும் நிறைந்து பேரும் புகழும் பெருகி விளங்கி இருந்தது. அக்காலத்தில் தமிழர்களே உலகத்தில் நாகரிகம் மிகுந்த மக்களாக வாழ்ந்தார்கள். கல்வியில் சிறந்தவர்களும் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்களும் நியாயமாக வாணிபம் செய்பவர்களும் கடவுள் பக்தியில் மிகுந்தவர்களும் வீரமும் புகழும் மிக்கவர்களும் தமிழர்களாகவே இருந்தனர்.

அக்காலத்தில் மறவர் பெருங்குடி என்ற பெருமை பொருந்திய ஒரூர் நம் தமிழ்



நாட்டில் இருந்தது. அவ்வூரில் வாழ்ந்திருந்த மக்கள் யாவரும் வீரம் நிறைந்த போர் வீரர் களாக இருந்தார்கள். அன்றியும் ஒவ்வோர்

ஆண் மகனும் தன் காலில் வீரக்கழல் அணிந்திருப்பான். அவ்வூர்ப் பெண் மக்களும வீரமுடையவர்கள். ஆண்மக்களைப் போர்புரியுமாறு தூண்டுவதில் அந்தப் பெண்மக்களுக்கு விருப்பம் மிகுதி. சமயம் வந்தால் அவர்கள் தாங்களே வாள் ஏந்திப் போருக்குப் புறப்பட்டு விடுவார்கள்.

இத்தன்மையுடைய மக்கள் வாழ்ந்திருந்த மறவர் பெருங்குடியில் முன்னொரு காலத்தில் **செள்ளை** என்ற ஒரு வீரப்பெண் வசித்து வந்தாள். அவள் தன் கணவனுடனும் மாமனுருடனும் தன் மைந்தன் நாகனுடனும் இல்லறம் நடத்தி வந்தாள். அந்நாளில், ஒருக்கால், அவ்வூரின் மேல்பகைவன் ஒருவன் படை எடுத்தான். அவன் பெருவலி மிகுந்தவன். எனவே அவனுடன் போர்புரிய அவ்வூர் அரசன் ஒரு வீட்டுக்கு ஓர் ஆண் மகன் வீதம் போர்க் கோலத்துடன் வந்து படையில் கலந்து கொள்ளவேண்டும் என்று பறை சாற்றினான்.

அது கேட்டுச் செள்ளையின் வீட்டுப் பங்காக அவள் மாமனுராகிய முதியவன் போர்க்கோலம் தாங்கிப் போனான். இரு திறத்தார்க்கும் போர் பலமாக நடந்தது. அப் போரின் முதல் நாளிலேயே அம்முதியவன் இறந்துவிட்டான். அச் செய்தியை

அறிந்த செள்ளேயின் கணவன் தன் மனைவி மைந்தரிடம் விடை பெற்றுக் கொண்டு போர்க்களம் சென்றான்.

சென்றவன் தன் கூறிய வாளினால் திற மையாகப் போர்புரிந்து எதிரியின் நால் வகைப் படைகட்கும் பெருஞ்சேதம் விளை வித்தான். அவன் இடசாரி வலசாரி வாளைக் கறகற என்று சுழற்றி வெட்டியதனால் பல குதிரைகள் சிரங்களை இழந்தும் கால்களை இழந்தும் மாய்ந்தன. இவனது பராக் கிரமச் செயல்களைக் கண்ட பகைப் படையி லிருந்த ஒரு குதிரைவீரன் தன் துரகத்தின் மேல் அமர்ந்தபடியே ஒரு கூரியவேலை அவ் வீரன் மார்பின் மேல் குறி வைத்து வீசினான். அவ் வீரனும் அதனால் மடிந்தான்.

தன் கணவன் உயிர் துறந்த செய்தியைத் தெரிந்த செள்ளை அடங்காக் கோபங்கொண் டாள். இனி யாரைத் தன் வீட்டிலிருந்து போருக்கு அனுப்புவது என்று அவள் எண் ணினாள். உடனே தன் சிறு மைந்தனை அனுப் புதலே முறை என்று திடசித்தங்கொண்டு நாகனை அழைத்து, அவனுக்குப் புத்தாடை அணிவித்து, அவன் கையில் தன் தந்தையின் கூர்வாளை ஈந்து, புத்திமதி கூறி வாழ்த்தி அனுப்பினாள்.

நாகனே ஆண்டில் இளையவன்; எனினும் புலிக்குப் பிறந்த குட்டி பூனை ஆகுமா? வீரத் தந்தைக்கும் வீரத் தாய்க்கும் பிறந்த சூரனு கையால், தீரம் குன்றாதவனாய் என்றும் சாவு உண்டு என்னும் எண்ணத்தால் துணிவுடன் போர் முனையை அடைந்தான்; சற்றும் தாம திக்காமல் படைகளின் நடுவில் புகுந்தான். இப்புறம் அப்புறம் பம்பரம்போல் சுழன்று கைவாளை வீசினான்; சிலரை வெட்டி வீழ்த் தினான். ஆயினும் அவன் சிறுவன்தானே! ஒரு பெரிய சேனையின் நடுவில் அவன் என்ன செய்யக் கூடும்? எதிரிகளில் ஒருவன் சிறுவன் மார்பில் வேலால் ஆழக் குத்திவிட்டான். அக் கணமே நாகன் இறந்து விழுந்தான்.

நாகன் என்னும் தங்களூர்ச் சிறுவன் ஒரு வன் போர் முனைக்கு வந்து திறமையாகப் போரிட்டு மடிந்தான் என்ற செய்தி படை வீரர்களுக்கு எட்டிற்று. உடனே அவர்களுக் குப் பெருஞ்சினம் மூண்டெழுந்தது. சிறு வனைக் கொன்றவர்களைப் பழி வாங்குவோம் என்று வீர மொழி கூறிக்கொண்டு அவர்கள் முன்னினும் பன்மடங்கு திறமையாகப் போர் புரிந்து மாற்றானைப் புறங்கண்டு ஓடச் செய்து வெற்றி பெற்றார்கள்.

போரில் இவ்விதம் வெற்றி பெற்றதையும், அவ்வெற்றிக்கு இறந்துவிட்ட தன் மகன் நாகனே முக்கிய காரணம் என்பதையும் செள்ளை அறிந்து மகிழ்ச்சி அடைந்தாள். அப்போது படைவீரர்களில் ஒருவன் செள்ளையை நோக்கி "உன் மைந்தன் முதுகில் அடிபட்டு இறந்தான்" என்று கூறினன். இதைக் கேட்டதும் அந்த வீரத்தாய்க்குப் பெருங்கோபம் உண்டாயிற்று. "என் மகன் வீரத்துடன் எதிர்த்துச் சண்டை செய்து மார்பில் காயம்பட்டு இறக்கவில்லையா? பயந்து ஓடும்போது முதுகில் அடிபட்டு இறந்தானு? அப்படியானல் அவனுக்குப் பால் கொடுத்த இந்த மார்பை அறுத்து எறிந்து விடுவேன்" என்று சொல்லிச் கையில் ஒரு வாளுடன் போர்க்களம் சென்ருள். பிணங்களில் தன் மைந்தன் உடலைத் தேடினுள். கடைசியில் நாகன் உடம்பைக் கண்டு தடவிப் பார்த்தாள். தன் அருமை மைந்தன் மார்பில் ஈட்டி குத்தப்பட்டு இறந்தான் என்பதை அறிந்தாள். அறிந்ததும் பெரிதும் உவகை அடைந்தாள்.

பிள்ளைகளே, பார்த்தீர்களா நாகனுடைய வீரத்தை! நம் பண்டைத் தமிழ மக்கள் எவ்வளவு வீரத்துடன் வாழ்ந்தார்களோ அவ்வளவு வீரத்துடன் நாம் இப்போது இருக்கிறேமா?

## கேள்விகள்

1. நாகன் இருந்த ஊரின் பெயர் என்ன ?

2. வீரக்கழல் யார் அணிவது ?

3. மறவர் பெருங்குடிப் பெண்கள் எப்படிப்பட்டவர்கள் ?

4. செள்ளை நாகனை எவ்விதம் போருக்கு அனுப்பினுள் ?

## பயிற்சி 2

1. போர்க்கோலம், போர்முனை, காலாட்படை, நாகரிகம், வாணிபம், பராக்கிரமம், ஏத்தி, சேதம், மடிந்தன, மாய்ந்தன, மாற்றுன்—இவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

2. பாராக்கிரமம், ஈந்து, அமர்ந்தபடியே, இறைவன், சிரம், உன்னினுள்—இவற்றில் ஒவ்வொன்றுக்கும் அதே அர்த்தமுடைய வேறு ஒவ்வொரு சொல் எழுது.

3. முன் காலத்தில் இருந்த தமிழர்களின் பெருமைகளைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

4. செள்ளையின் கணவன் செய்த சண்டையைப்பற்றி எழுது.

5. நாகன் உண்மை வீரன் என்று செள்ளை அறிந்த விதத்தைப்பற்றி விளக்கி எழுது.

6. கொடுங்கோல் மன்னன், மனம்போகும், போக்கு, நம்பாத இயல்பு, கோபத்துக்கு ஆளானுன், மரண தண்டனை, கோபச் சிரிப்பு, காலதாமதம் செய்யாமல், நெஞ்சங்கலங்கி—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

7. இந்தக் கதையை மிகவும் சுருக்கமாக உன் சொந்த வார்த்தைகளால் எழுது.

# 18. கண்ணகி சிலம்பு

| | | | |
|---|---|---|---|
| விதிவசம் | உதித்தது | தலைவிரிகோலம் | முத்து |
| ஏழை | பழுதுபார்க்க | இராஜ்யம் | மாணிக்கம் |
| பிழைப்பது | இனிப்பு | தர்மநெறி | மோதி |
| திகைத்தார் | சிங்காதனம் | மணவாளன் | ஆணவம் |
| அளித்த | வீற்றிருந்த | குலம் | பாதகன் |
| ஆபரணம் | ஆத்திரம் | பதி | மோசம் |
| சிலம்பு | கட்டளை | நிரூபிக்கிறேன் | கற்று |
| உள்ளம் | சிரச்சேதம் | ஈந்தான் | பட்டினம் |

தமிழ் நாட்டின் துறைமுகப் பட்டினங்களில் ஒன்று காவிரிப்பூம் பட்டினம் அதில் மாநாய்கன் என்ற வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் கண்ணகி என்ற அழகான பெண் ஒருத்தி இருந்தாள். இந்தக் கண்ணகியை அவ்வூரிலிருந்த மாசாத்துவான் என்ற வணிகனின் செல்வக் குமாரனான கோவலன் என்பவனுக்குத் திருமணம் செய்து வைத்தார்கள்.

கோவலனோ விதிவசத்தால் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவி என்னும் ஒரு பெண்ணோடு வசித்துத் தன் பொருள் எல்லாவற்றையும் அவளுக்குக் கொடுத்து ஏழையானான். ஏழையான பிறகு, தன் மனைவி கண்ணகியிடம் வந்து சேர்ந்தான். பிறகு, அவர்கள் இருவரும் இனிப் பிழைப்பது எப்படி என்றறியாமல் திகைத்தார்கள்.

அப்போது கண்ணகி தன் கணவனை நோக்கி, "என் தந்தை எனக்கு அளித்த ஆபரணங்களில் இப்போது என்னிடம் மிகுந்திருப்பவை என் கால் சிலம்பு இரண்டே. அவற்றில் ஒன்றை விற்றுப் பொருளாக்கித் தாங்கள் வர்த்தகம் செய்தால் நாம் மீண்டும் பழைய நிலைமைக்கு வரமுடியும்" என்று சொன்னாள். அதைக்கேட்ட கோவலன் சிலம்பை விற்க மதுரையே தகுந்த இடம் என்று எண்ணி அவளையும் அழைத்துக்கொண்டு மதுரைக்குப் போனான்.

மதுரையில் கண்ணகியை மாதரி என்னும் இடைச்சி வீட்டில் விட்டு விட்டுக் கோவலன் சிலம்பைக் கையில் எடுத்துக் கொண்டு, அரசவீதியில் விற்கப்போனான். எதிரில் அரசனுடைய தட்டான் வந்துகொண்டிருந்தான். கோவலன் சிலம்பைத் தூக்கிப் பிடித்துச் "சிலம்பு வாங்குவாரில்லையா? சிலம்பு வாங்குவாரில்லையா?" என்று கூவிக்கொண்டு போவதைக் கண்ட தட்டான் அவன் அருகில் வந்து, சிலம்பை வாங்கிப் பார்த்தான்.

தட்டானுடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் உதித்தது. மதுரையரசி தன்னிடம் பழுது பார்க்கக் கொடுத்துள்ள சிலம்பைத்

தானே அபகரித்துக் கொள்ளலாம். கோவலன் கையில் இருப்பதே அரசியின் சிலம்பு என்று பொய் சொல்லிவிடலாம். கோவலனைத் திருடனாக்கி விட்டு அச்சிலம்பை மன்னன் மனைவிக்குத் தந்து விடலாம் என்று அவன் எண்ணினான்.

அப்போது கோவலன் தட்டானைப் பார்த்து "ஐயா! இச்சிலம்பை நீரே விற்றுக் கொடும்" என்று கூறினான். பழம் நழுவிப் பாலில் விழுந்தால் தின்பதற்கு மிகவும் இனிப்பாக இருக்குமல்லவா? அதுபோலத் தட்டானுக்கு மிகவும் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. உடனே, அவன் கோவலனை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குப் போய் வெளியிலேயே அவனை நிறுத்தி விட்டுத் தான் மாத்திரம் உள்ளே சென்றான்.

சென்றவன் சிங்காதனத்தில் வீற்றிருந்த பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கித் தண்டனிட்டு 'அரசே, பழுது பார்க்க நான் வாங்கிச் சென்றிருந்த அரசியின் சிலம்புகளில் ஒன்றை ஒருவன் திருடிக்கொண்டு போய் விட்டான். அவனை நான் என் திறமையால் கண்டு பிடித்துக்கொண்டு வந்திருக்கிறேன். அவன் அரண்மனைக்கு வெளியில் நின்று கொண்டிருக்கிறான்' என்று கூறினான். மன்னன் ஊழ்வலியால் அறிவு கலங்கினான். அரசி

யின் சிலம்பை ஒருவன் திருடுவதோ என்று பெருஞ் சினங்கொண்டான். ஆகையால் சிறிதும் ஆராய்ந்து பாராமல் ஆத்திரத்துடன் "சரி, அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வா" என்று கூறிவிட்டான்.

வேந்தன் கட்டளையின்படியே கொலையாளிகள் கோவலனைச் சிரச்சேதம் செய்து விட்டார்கள். தட்டான் சிலம்பைக் கொண்டு போய் அரசியிடம் சேர்த்துவிட்டான்.



கோவலன் கொலையுண்ட செய்தி மாதரியின் இல்லத்தில் தங்கியிருந்த கண்ணகியின் காதுக்கு எட்டியது. அவளுக்குக் கணவன் மடிந்த வருத்தமும் அரசு நெறி தவறியதே என்ற பெருங் கோபமும் உண்டாயின.

அவள் உடனே தலைவிரி கோலமாய்ச் சென்று அரசன் சபையை அடைந்து "ஏ! வேந்தே! உன் இராஜ்யத்தில் நீதி கிடையாதா? தரும நெறியில் நடப்பது உனக்கு வழக்க மில்லையோ? தீர விசாரியாமல் ஒரு குற்றமும் அறியாத என் மணவாளனைக் கொன்றாயே! உன் குலம் விளங்குமா? உன் நாடு ஓங்குமா?" என்று உடல் பதைபதைக்க, கண்களில் இரத்தம் தெறிக்க உரத்துக் கூவினாள். பாண்டியன் அவளை நோக்கிப் "பெண்ணே! உன் பதி திருடன் அல்லன் என்று எவ்விதம் சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

உடனே கண்ணகி அவனைப் பார்த்து "ஏ! மன்னா! என் கையில் இதோ ஒரு சிலம்பே இருக்கிறது. மற்றொன்று என் பதியிட மிருந்து இப்போது உன் மனைவியிடம் சேர்ந் திருக்கிறது. அதைக் கொண்டுவரச் சொல். அது உன் மனைவியின் சிலம்பன்று என்று நிரூபிக்கிறேன்," என்று கூற, அரசன் அச்சிலம்பை வரவழைத்து அவள் கையில் ஈந்தான். கண்ணகி அதைக் கையில் வைத்துக் கொண்டுமன்னனை நோக்கி "உன் மனைவியின் சிலம்புக்குள் என்ன இருக்கிறது?" என்று கேட்டாள். வேந்தன் "என் மனைவியின் சிலம்பில் முத்துக்கள் இருக்கின்றன" என்று சொன்னான்.

உடனே கண்ணகி தன் கையில் இருந்த சிலம்பைத் தரைமீது மோதி அடித்தாள். சிலம்பு உடைந்து அதனுள்ளிருந்த மாணிக்கங்கள் சிதறின. பிறகு அவள் தன் கையில் இருந்த சிலம்பைத் தரைமீது மோதி உடைத்தாள். அதனுள்ளிருந்தும் மாணிக்கங்கள் சிதறின. கண்ணகி அடக்கமுடியாத கோபத்துடன் அரசனைப் பார்த்து "ஏ! அநீதி நிறைந்த அரசனே! பார். நிதானித்து விசாரித்து, ஆராய்ந்து அறியாமல் ஆணவத்தால், அரசன் என்னும் கருவத்தால், விளைவதை அறியாமலே என் நாதனைக் கொல்லுமாறு உத்தரவிட்டாயல்லவா? ஏ! பாதகா! இப்போது என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டாள். ஆனால், கண்ணகி கேட்ட கேள்விகள் அரசன் காதில் விழவில்லை. ஏனென்றால் சிலம்பிலிருந்து முத்து சிதறாமல் மாணிக்கம் சிதறியபோதே உண்மையை உணர்ந்த வேந்தன் "ஐயோ! மோசம் போனேனே. ஆராயாமல் அநீதி செய்தேனே" என்று எண்ணினான்; எண்ணியதும் அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிட்டது. அரசன் இறந்ததைக் கண்டவுடன் அரசியும் அவ்விடத்திலேயே அதே நொடியில் உயிர் துறந்தாள். கண்ணகி அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

## கேள்விகள்

1. கோவலன் ஏன் ஏழையானான்?
2. மறுபடியும் சம்பாதிப்பதற்குக் கண்ணகி என்ன யோசனை கூறினாள்?
3. மதுரையில் கோவலனும் கண்ணகியும் எங்கே தங்கினார்கள்?
4. தட்டான் செய்த சூழ்ச்சி என்ன?
5. கோவலன் இறந்ததை அறிந்த கண்ணகி என்ன செய்தாள்?
6. அரசனும் அரசியும் எவ்விதம் இறந்தார்கள்?

## பயிற்சி 22

1. கோவலன் சிலம்பு விற்பதைக் கண்ட தட்டானுடைய மனத்தில் ஏற்பட்ட எண்ணத்தைப் பற்றி நன்கு விளங்குமாறு எழுது.
2. தட்டான் கோவலனை ஏமாற்றிய விதத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
3. அரசனுக்கும் கண்ணகிக்கும் நடந்த சம்பாஷணையை உன் சொந்த வார்த்தைகளால் எழுது.
4. சிலம்பு அரசியின் சிலம்பன்று என்று கண்ணகி நிரூபித்த விதத்தைப்பற்றி விரிவாய் எழுது.
5. கதையை மிகவும் சுருக்கமாக உன் சொந்த வார்த்தைகளால் எழுது.
6. தலைவிரிகோலம், தருமநெறி, சிங்காதனம், ஆணவம்—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.
7. முதல் பாராவில் முதல் வாக்கியத்தை இரண்டாகப் பிரித்து எழுது.
8. இரண்டாம் பாராவின் முதல் வாக்கியத்தை நான்காகப் பிரித்து எழுது.
9. மூன்றும் பாராவின் முதல் வாக்கியத்தை மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

# 19. சிங்கக்குட்டி தேசிங்கு

| | | |
|---|---|---|
| ஏறக்குறைய | துடுக்கு | லகான் |
| இளமை | அவமானம் | உரம் |
| வித்தை | வெட்கம் | பட்டம் |
| சிலம்பம் | வாலிபப்பருவம் | மரியாதை |
| குதிரையேற்றம் | தர்பார் | மலர்கள் |
| ஒத்திருந்தான் | பறைசாற்று | ஆத்திரம் |

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் செஞ்சிக்கோட்டையில் சிரோப்சிங் என்னும் அரசர் அரசாட்சி செய்து வந்தார். அவருக்கு ஒரே மகன் இருந்தான். அந்த மகன் தான் தேசிங்கு என்பவன். தேசிங்கு இளமையிலேயே வில்வித்தை, வாள்வித்தை, சிலம்ப வித்தை, குதிரை யேற்றம் முதலிய சண்டைப் பழக்கங்களில் தேர்ந்தவனுன். அவன் தைரியத்திலும் துணிவிலும் சிங்கக்குட்டியை ஒத்திருந்தான். பெரியவர்களும் செய்யப் பின்வாங்கும் காரியங்களை அவன் துணிந்து திறமையாகச் செய்து முடிப்பான்.

அக்காலத்தில் டில்லியில் நவாபாக ஷாஆலம் என்பவர் இருந்தார். அவரிடத்தில் ஒரு பெரிய குதிரை இருந்தது. அந்தக் குதிரை எவர்க்கும் அடங்காமல் முரட்டுக் குணமுடையதாய் இருந்தது. அதன் துடுக்கை அடக்கி அதன் மேல் ஏறிச் சவாரி செய்பவருக்கு வெகுமானம் தருவதாக நவாப்

பறைசாற்றியிருந்தார். அந்த வெகுமானத்தைப் பெற ஆவல்கொண்டு பல அரசர்களும் வீரர்களும் டில்லிக்குச் சென்று அக்



குதிரையை அடக்க முயன்று, இயலாமல் அவமானம் அடைந்தார்கள். அவ்வாறு சென்று அவமானப் பட்டவர்களில் சிரோப்சிங்கும் ஒருவர். அவர் அந்த அவமானத்தோடு தன் நாட்டுக்கு வர வெட்கப்பட்டு டில்லியிலேயே தங்கிவிட்டார்.

தேசிங்கு நல்ல வாலிபப் பருவம் அடைந்த பிறகு ஒருநாள் தன் தாயார் மூலம் தன் தகப்பனுருக்கு ஏற்பட்ட அவமானத்தை அறிந்தான். அவனுக்குத் தந்தையை அழைத்துவர வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. உடனே அவன் குதிரையை அடக்கிச் சவாரிசெய்து, தந்தையை அழைத்துக் கொண்டுவரத் தன் அன்னையிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, தன் உயிரான நண்பன் மூகம்மதுகான் என்பவனேடு புறப்பட்டான்.

டில்லிக்கு விரைந்து சென்று பாதுஷாவின் தர்பாருக்குப் போய்த் தன் தீர்மானத்தைத் தெரிவித்தான். பாதுஷா "தம்பீ! நீ மிகவும் சிறியவன். உன்னுல் இந்தக் காரியம் செய்ய முடியாது. நீ சுகமாக உன் நாட்டுக்குப் போய்விடு" என்று கூறியும் தேசிங்கு கேட்கவில்லை. ஆகையால், நவாப் குதிரையைக் கொண்டுவந்து சிறுவன் முன் நிறுத்தும்படி கட்டளையிட்டார்.

காவலர் குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினர்கள். உடனே முகம்மதுகான் பாய்ந்து சென்று அந்தக் குதிரைக்கு லகான் போட்டான். தேசிங்கு கடவுளை நினைத்துக் குதிரைமேல் சிங்கக்குட்டிபோல் பாய்ந்து ஏறினன்.

ஏறியதும் அந்தக் குதிரைக்கு ஆத்திரம் உண்டாயிற்று. அது துள்ளிக் குதித்துப் பாய்ந்து ஓடிப் பாலனைக் கீழே தள்ள ஏதேதோ தந்திரம் செய்து பார்த்தது. ஆனல் தேசிங்கோ பிடித்த பிடியை விடவில்லை. தைரியத்தைக் கைவிடாமல், குதிரையின்மேல் கவிழ்ந்து படுத்துக்கொண்டான். குதிரையோ சுழன்று சுழன்று பாய்ந்து பாய்ந்து தாவித் தாவிக் குதித்துக் குதித்து ஓடி ஓடிக் கடைசியில் மூச்சுவாங்க, நாக்கு உலர, கால் நடுங்கப் பலவீனம் அடைந்து

தன் துடுக்கு அடங்கி நின்றுவிட்டது. அதைத் தேசிங்கு நடத்திவந்து பாதுஷாவின் எதிரில் நிறுத்தினான். பாதுஷாவும் சபையோர்களும் கண்டுகளித்தார்கள். ஸிரோப்சிங் மைந்தனை வாரி எடுத்து அணைத்துத் தழுவி முத்தமிட்டார். நவாப் சிறுவனுக்கு இராஜா என்னும் பட்டம் கொடுத்தார். அவனை இராஜா தேசிங்கு என்று அழைக்கும்படி பறைசாற்றினார். அவனுக்கு வெகுமானமும் வேறு பல பரிசுகளும் தந்து, அவனையும் அவன் தந்தையையும் செஞ்சிக் கோட்டைக்கு மரியாதைகளுடன் அனுப்பினார்.

## கேள்விகள்

1. தேசிங்கின் தந்தை பெயர் என்ன ?
2. தேசிங்கு எங்கே பிறந்தவன் ?
3. தேசிங்கு எந்தெந்த வித்தையில் தேர்ந்தவன் ?
4. டில்லி பாதுஷாவின் பெயர் என்ன ?
5. ஸிரோப்சிங் ஏன் டில்லியிலேயே தங்கிவிட்டான் ?
6. தேசிங்கு எப்படித் தன் தந்தையைச் செஞ்சிக்கு அழைத்து வந்தான் ?

## பயிற்சி 23

1. தேசிங்கின் குதிரைச் சவாரியை உன் வார்த்தைகளால் விரிவாக எழுது.

2. மல்லர்கள், வாலிபப்பருவம், தர்பார், குதிரையேற்றம், மரியாதை—ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சொந்த வாக்கியத்தில் வைத்து எழுது.

3. தேசிங்கின் கதையைச் சுருக்கமாக எழுது.

# 20. தேசிங்கின் குதிரைச் சவாரி

பாராசாரியைச் சலாம் வாங்கிப் பாய்ந் தேறினனும்.
புலிக்குட்டி போலப் பாய்ந்தவன் புரவி ஏறினனும்.
ஏறினவுடனே பாராசாரி என்ன செய்கிறது பார்!
தட்தடவென்று தவிக்கிறது பார் அந்தக் குதிரை.
கிடுகிடுவென்று கிளம்புகிறது பார் அந்தக் குதிரை.
லகானிழுத்துக் கையில் பிடித்தான் பாலன் தேசிங்கு.
தடடின தட்டில் குதிரை கிளம்பித் தரையில் நில்லாமல்.
ஆகாய மார்க்கம் வந்து பாய்கிறது அந்த மேகக் குதிரை.
சூரியன்போலத் துலங்குகிறது பார் சொர்ன மேகக் குதிரை.
சிமிட்டா கொடுத்த வேகத்தாலே சீறிப் பாய்கிறதாம்.
கோபம் வந்து மூண்டுவிட்டது குதிரைக்காறனும்.
காடு மலைகள் செடிகளெல்லாம் கலங்கி நடுங்கிடவே
குன்று மலைகள் தாண்டிக் குதிரை குதித்துப் போகிறதாம்.
ஆறு குளங்கள் மடுக்களெல்லாம் அதிர நடுங்கிடவே
குதிரை பாயும் வேகத்தாலே குழந்தை தேசிங்கு
குலுங்க நகைத்துச் சிமிட்டா கொடுத்தான்
குதிரைக்காறனும்;
ஊரைச் சேர்ந்த காடுமலைகள் ஒடுங்கி நடுங்கும்பார்.
குன்றிலிருக்கும் சிங்கம், யானை குலுங்க நடுங்கும் பார்.
தேசத்திலிருக்கும் ஜனக்கூட்டங்கள் திரண்டு நடுங்கும் பார்.
குதிரைபோகும் வேகத்தாலே பூமி குலுங்கும் பார்.
பாராசாரி மனங்கலங்கிப் பார்த்து பார்த்து நிமிர்ந்தது பார்.
என்னுயிர் வாங்க இந்தப்பாலன் எங்கே பிறந்தானே?
என்றெழும்பிப் பாராசாரியும் வேகமாய்ப் பாய்கிறதாம்.
லகானிழுத்துச் சிமிட்டா கொடுத்தான் பாலன் தேசிங்கு.
இடதுகாலுக்கு இரண்டு சிமிட்டா இடுக்கிக்
கொடுத்தானும்.
சிமிட்டா கொடுத்த வேகத்தாலே திகைத்து நின்றது பார்.
இடித்த இடியில் மனங்கலங்கி இடத்தில் நின்றது பார்.

---

# 21. வாழ்த்துப் பாக்கள்

## பிள்ளையார்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் வேந்தனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## கலைமகள்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி.

## சிவபெருமான்

முத்திநெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே!

## முருகன்

மூவிரு முகங்கள் போற்றி; முகம் பொழி கருணை போற்றி;
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி; காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி; அன்னான்
சேவலும் மயிலும் போற்றி; திருக்கைவேல் போற்றி போற்றி

## திருமால்

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!

THIRU

# VALLUVAR VACHAKAM

## (BOOK V)

CONNEMARA PUBLIC LIBRARY
12 NOV 1957
MADRAS

## CLASS V

Pandit M. VADIVELAN

Revised and Edited by

Vidwan S. V. Varadaraja Ayyangar, M.O.L.,
Vivekananda College, Mylapore, Madras-4.

(Revised Edition)

54874

M. D. NAGABHUSHANAM & SON,
108, Corporation Fruit Market, Madras-1.

*Rights Reserved*] 1955 [*Price As.* 0—9—0

Reprint — 1939
" — 1952
" — 1953
" — 1955

R.B. 780
2-55

71058
26 C 211

Approved by the Text Book Committee, Madras for class use; Vide Consolidated List, Fort St. George Gazette, Part I-B Page 32, dated 7th May, 1952.

Rajan Electric Press, Madras-1.

12 NOV 1957
MADRAS

# முகவுரை

கல்விச் சாலைகளில் கற்கும் மாணவர்களுக்குத் தாய்மொழியில் தேர்ச்சி உண்டாவதற்கு ஏற்ற முறையில் ஒரு நூதன பாடத் திட்டம் 1939-ஆம் வருஷம் சென்னை அரசியல் கல்வித் துறையினரால் வெளியிடப்பட்டது. அதை முற்றுந் தழுவி எழுதப்பட்ட வாசகங்களுள் இந்த '**திருவள்ளுவர் வாசக**' வரிசையும் ஒன்றாகும். திருவள்ளுவர் வாசக புத்தகங்கள் படிப்படியாக மொழிப் பயிற்சி உண்டாவதற்கு ஏற்றவாறு எழுதப்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பாடத்தின் தலைப்பிலும் அப்பாடத்தில் பயின்று வரும் புதுப் பதங்கள் தடித்த எழுத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. பாடங்களின் இறுதியில் கேள்விகளும் பயிற்சிகளும் இலக்கண விளக்கமும் அமைக்கப்பெற்றுள்ளன. இன்னும் மாணவர்களுக்குப் பொது அறிவை வளர்க்கத் தக்கவாறு பாடங்கள் சேர்த்து எழுதப்பெற்றுள்ளன.

இப் புத்தகங்களைப் பின்னும் நன்கு அமைப்பதற்கு ஏற்றவைகளை அறிஞர் அறிவிப்பின், அவற்றைப் போற்றி அடுத்த பதிப்பில் கைக்கொள்ளலாகும். இப் புத்தகங்களை ஆதரித்து எம்மை ஊக்குமாறு பெரிதும் வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

**ஆசிரியர்.**

12 NOV 1957

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கோவூர் கிழார் | ... | 1 |
| 2. | இராஜாராம் மோகன்ராய் | ... | 8 |
| 3. | உவமைகள் | ... | 16 |
| 4. | நட்பின் பெருமை—I | ... | 18 |
| 5. | பழமொழிகள் | ... | 23 |
| 6. | நட்பின் பெருமை—II | ... | 25 |
| 7. | பத்திரிகைச் செய்திகள் | ... | 33 |
| 8. | சேரன் செங்குட்டுவன்—I | ... | 39 |
| 9. | சேரன் செங்குட்டுவன்—II | ... | 43 |
| 10. | தமிழகம் | ... | 49 |
| 11. | திமிங்கிலம் | ... | 56 |
| 12. | திருவள்ளுவர் | ... | 62 |
| 13. | வீடு கட்டுதல் | ... | 65 |
| 14. | கடிதங்கள் | ... | 70 |
| 15. | காற்று | ... | 76 |
| 16. | உழவன் சிறப்பு (பாட்டு) | ... | 83 |
| 17. | பச்சையப்ப முதலியார் | ... | 84 |
| 18. | படிக்காசுத் தம்பிரான் | ... | 92 |
| 19. | அபாயத்திற்கு ஓர் உபாயம் | ... | 99 |
| | **செய்யுட் பகுதி :** | | |
| 20. | வாக்குண்டாம் | ... | 101 |
| 21. | நல்வழி | ... | 103 |
| 22. | நன்னெறி | ... | 105 |
| 23. | நீதிநெறி விளக்கம் | ... | 108 |
| 24. | திருக்குறள் | ... | 109 |
| 25. | நன்மதிமாலை | ... | 110 |
| 26. | பல்சுவைப் பாக்கள் | ... | 111 |

CONNEMARA PUBLIC LIBRARY
12 NOV 1957
MADRAS

# திருவள்ளுவர் வாசகம்

---

## ஐந்தாம் புத்தகம்

---

## 1. கோவூர் கிழார்

| | | |
|---|---|---|
| இராச்சியம் | ஏறக்குறைய | தாயத்தார் |
| பேரன்பு | நற்குணங்கள் | அவமானம் |
| பேரூக்கம் | பங்காளிகள் | வேற்றரசர் |
| ஆராய்ச்சி | உறவினர் | திறமை |
| எண்ணூறு | முற்றுகை | சிறுர்கள் |
| செந்தமிழ் | சுற்றத்தார் | மனநிலை |

தமிழ் நாடு முற்காலத்தில் சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பிரிவுகளாக இருந்தது. இவைகளை முறையே சேரர், சோழர், பாண்டியர் என்னும் தமி ழரசர் ஆட்சி செய்தனர். இம்மூவேந்தருள் பாண்டியர் மரபில் உதித்த மன்னர்கள் தமிழ் மொழியினிடத்துப்பேரன்பும் அதனை வளர்ப் பதில் பேரூக்கமும் கொண்டிருந்தனர். பாண் டிய நாட்டின் தலைநகரான மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கே தமிழ்ப் புலவர்கள் கூடி நூல்களை இயற்றியும் ஆராய்ந்தும் தமிழை வளர்த் தார்கள்.

இத்தகைய தமிழ்ச்சங்கம் நடைபெற்ற காலத்தைச் **சங்ககாலம்** என்று கூறுவது வழக்கம். அது சற்று ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகும். இச் சங்க காலத்தில் வாழ்ந்திருந்த செந்தமிழ்ப் புலவருள் கோவூர் கிழார் என்பவர் ஒருவர். இவர் கோவூர் என்னும் ஊரினர். வேளாளர் குலத்தினரை அக்காலத்தில் கிழார் என்று அழைப்பது முறை. இவரும் வேளாளர் ஆதலின் அவ்வாறே அழைக்கப் பெற்றனர்.

கோவூர் கிழார் நிறைந்த கல்வியும் தெளிந்த அறிவும் கவிபாடும் திறமையும் உடையவர். நல்லொழுக்கத்திற்கு இவர் உறைவிடமானவர். எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் உடையவர். பிறர் துன்பத்தை எப்படியும் நீக்குவார். நீதியை எடுத்துரைத்து, நல்வழிப்படுத்தும் குணம் இவரிடம் இயல்பாகவே பொருந்தியிருந்தது. நற்குணங்கள் யாவும் இவரிடம் பொருந்தி இருந்தமையால், அக்காலத்து அரசர்கள் இவரைப் பெரிதும் மதித்து வந்தனர்.

அக்காலத்தில் சோழநாடு இரண்டாகப் பிரிந்திருந்தது. அவற்றுள் ஒன்றை **நலங்கிள்ளி** என்பவன் ஆண்டு வந்தான். அவன் காவிரிப்பூம் பட்டினத்தில் உறைந்தான். மற்றொரு பகுதியை **நெடுங்கிள்ளி** என்பவன்

ஆட்சி புரிந்தான். அவன் உறையூரில் வாழ்ந் தான். இவர்கள் இருவரும் ஒரே குலத்தில் பிறந்தவர்கள்; பங்காளிகள். உறவினராயி ருந்தும் இவர்களிடம் ஒற்றுமை என்பது சிறி தும் இல்லை. ஒருவரை ஒருவர் பகைத்தனர்.

நலங்கிள்ளி படை பலம் மிகுதியும் உடையவன். அவன் ஒரு சமயம் நெடுங் கிள்ளியோடு போர்புரிவதற்காக உறையூரின் மீது படையெடுத்துச் சென்றான்; சேனையை ஏவிக் கோட்டையை முற்றுகையிட்டான். நெடுங்கிள்ளி கோட்டையினுள்ளே அகப்பட் டிருந்தான்.

இச்செய்தி கோவூர் கிழாருக்கு எட்டி யது. போரினால் விளையும் உயிர்க்கேடு, பொருட்கேடுகளையும் மற்றும் பல தீங்குகளை யும் அவர் எண்ணி வருந்தினார். 'ஒரு குலத்தில் பிறந்தவரும் தாயத்தாருமாகிய இவர்கள் ஒற்றுமையுடன் ஆட்சி புரிந்தால், நாடு எவ் வளவு நலம்பெறும்' என்று எண்ணினார். எவ்வாறேனும் அப்போரை நிறுத்த வேண் டும் என்ற துணிவுடன் விரைந்து வந்து உறை யூரை யடைந்து, முற்றுகையிட்டிருந்த நலங் கிள்ளியை அவர் கண்டார்.

"சோழர் குல திலகரே! நீர் பெரும்படை யுடையவர்; போர் புரிவதில் அளவற்ற திறமை வாய்ந்தவர். ஆனால், உம்மால் முற்

றுகையிடப்பட்டுள்ள பகையரசர் இன்னுர் என்பதை யான் கூறவும் வேண்டுமோ? அவர் வேற்று நாட்டினர் அல்லர்; பாண்டிய ரும் அல்லர்; உங்கள் சோழர் மரபிலேயே உதித்தவர். போரில் வெற்றியும் தோல்வியும் இன்னுருக்குத்தான் உண்டாகும் என்று உறுதி கூறுதல் இயலாது. நீரே வெற்றி பெற்ருலும், சேர பாண்டிய மன்னர்கள், நலங்கிள்ளி வென்ருன் என்ருே **நெடுங்கிள்ளி** தோற்ருன் என்ருே கூறமாட்டார்கள். சோழ மன்னர் போரில் தோல்வி யடைந்தார் என்றே கூறுவர். ஆதலின், உமது செயல் உமது குலத்திற்கே இழிவை உண்டாக்கும். ஒரு குலத்தில் பிறந்த உங்களுக்குள் ஒற்றுமை இல்லாததைக் கண்டு வேற்றரசர் உங்கள் நாட்டின்மீது படையெடுத்தலும் கூடும். ஆதலின் உமது குடிக்கும் நாட்டிற்கும் நலந் தருவது எதுவோ, அதனை ஆராய்ந்து செய் வீராக'' என மொழிந்தார்.

புலவர் இவ்வாறு திறமையாகக் கூறிய நன் மொழிகளைக் கேட்ட நலங்கிள்ளியின் மனம் உருகிவிட்டது. அவர் கூறியவை யாவும் நியாயமானவைகளே என்பதையும் அவன் உணர்ந்தான்; தான் தொடங்கிய போரை நிறுத்தினுன்; புலவரைப் பணிந்து விடை கொண்டு மீண்டு சென்ருன்.

கோவூர் கிழார் காலத்தில் **மலையமான் திருமுடிக்காரி** என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் தென்பெண்ணை யாற்றின் கரையிலுள்ள திருக்கோவலூரிலிருந்து அரசாட்சி புரிந்தான். அவன் சிறந்த வள்ளல். திருமுடிக்காரி கல்வி வாணரிடம் விருப்பம் உடையவன். போர் புரிவதில் அவனுக்கு மிகுந்த திறமை உண்டு. அக்காலத்தில் தமிழ் நாட்டு வேந்தர்களுக்குள் போர் உண்டானுல், போர் புரியும் இருதிறத்தாரும் மலையமானைத் தமக்குத் துணைபுரியும்படி வேண்டுவது வழக்கம்.

அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்டு வந்த **கிள்ளிவளவன்** என்னும் வேந்தனுக்குப் பகை பட்ட வேறு ஓர் அரசனுக்கு மலையமான் உதவி புரிந்தான். அதனுல் கிள்ளி வளவனுக்கு மலையமானிடத்துப் பகைமை ஏற்பட்டது. காரியின் குலத்தையே அழித்து விடவேண்டும் என்று கிள்ளிவளவன் நினைத்தான்; சென்று மலையமான் மக்கள் இருவரையும் பிடித்துவந்தான். காரியின் மக்கள் இருவரையும் தனது யானையை ஏவிக் கொன்று விடத் துணிந்தான்.

இதனைக் கோவூர் கிழார் அறிந்து, உடனே அங்கே சென்ருர். வளவன் அவரை வரவேற்று இருக்கையளித்து உபசரித்தான். புலவர் தாம் எதுவும் அறியாதவர் போலவே

இருந்து, அங்கே நின்று கொண்டிருந்த சிறுர் களைப்பற்றி விசாரித்தார். வளவன் அவர்கள் இன்னுர் என்பதையும், தான் அவர்களைக் கொலைசெய்யக் கருதி இருப்பதையும் புலவரிடம் கூறினுன். அது கேட்ட புலவர் நயமாகப் பின்வருமாறு கூறினுர்.

“காவிரி நாடனே! ஒரு புருவைக் காக்கும் பொருட்டு தன் உடம்பிலுள்ள தசையை அரிந்து பருந்திற்குக்கொடுத்த சிபிச் சக்ரவர்த்தியின் குலத்தில் உதித்தவன் நீ. ஜீவகாருண்யம் என்பது சோழர்குலத்து அரசர்க்குரிய பிறவிக் குணம். உமக்குமுன் பாக நிற்பவரோ பாலர்கள். நன்மை தீமை களை ஆராயும் அறிவு நிரம்பப் பெருதவர்கள். இவர்கள் யானையைக் கண்டதும் பயந்து அழுதார்கள். இளம்பருவ முள்ளவர்கள். இவர்களுக்குத் தந்தையான மலையமானே புலவர் வறுமையப் போக்கிக் காப்பவன். இவற்றைநீ ஆராய்ந்து பார்த்து, பின்பு உனது விருப்பம் எதுவோ அதனைச் செய்” என்ருர்.

இங்ஙனம் புலவர் கூறிய இனிய மொழி கள் மன்னன் மன நிலையை மாற்றிவிட்டன. அவன் அச்சிறுவர்கள்மீது இரங்கி அவர்களைக் கொல்லாமல் விடுதலை செய்தான். கோவூர் கிழார் இவ்வாருகச் சமயம் வாய்த்த போதெல்லாம் பிறர்க்கு நன்மை புரிவதி

லேயே கருத்துடையவராக இருந்தார். சேர சோழ பாண்டிய மன்னரும் மற்ற சிற்றரசர்களும் இவர் இன்மொழியை மதித்து வந்தனர். தமக்கு இவ்வளவு செல்வாக்கு இருந்த போதிலும் புலவர் அதனைத் தன் நலத்திற்காக ஒருபோதும் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட உண்மைப் புலவர் பலரைத் தமிழ்நாடு பெற்றிருந்ததால், அதில் பொருஞ் செல்வத்தோடு அறிவுச் செல்வமும் பொலிந்து விளங்கிற்று.

## கேள்விகள்

1. சங்க காலம் என்பது எது? எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது?
2. கிழார் என்பது எச்சாதியினருக்கு வழங்கும் பெயர்?
3. கோவூர் கிழாரிடம் பொருந்தியிருந்த நற்குணங்கள் யாவை?
4. சோழ நாட்டைக் கோவூர் கிழார் காலத்தில் அரசாண்ட மன்னன் யாவன்?
5. சோழருக்குள் உண்டான போரைப் புலவர் எங்ஙனம் நிறுத்தினர்?
6. காரியின் புதல்வரைப் புலவர் காத்த விதம் யாது?

## பயிற்சி

1. ஆர்வம், பேரன்பு, ஆராய்ச்சி, சாதுர்யம், சிறுர்கள் - ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.
2. நீதி, நற்குணம், பெரும்படை, ஒற்றுமை, தோற்றுன் - எதிர்ப்பதம் கூறு.

## இலக்கணம்

தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் **உயிர் எழுத்து, மெய் மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆயுத எழுத்து**- என நான்கு வகைப்படும்.

1. **உயிரெழுத்து** - அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ (12)

2. **மெய்யெழுத்து** - க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் (18)

3. **உயிர் மெய்யெழுத்து.** க, கா - என்பவை போல் உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்துக்கள். (216)

4. **ஆய்த எழுத்து.** மூன்று புள்ளி வடிவமான எழுத்து ஃ (1) ஆகமொத்தம் 247-எழுத்துக்கள்.

---

# இராஜாராம் மோகன்ராய்

| | | |
|---|---|---|
| உத்தியோகம் | இடையூறு | உடன்கட்டை |
| ஆங்கிலம் | பேரவா | பாராளுமன்றம் |
| பாடலிபுரம் | தூண்டுதல் | பிரதிநிதி |
| விக்கிரகம் | நாலாண்டுகள் | வயித்தியர் |
| அஞ்சாமல் | பத்தாண்டுகள் | வேலைக்காரர் |
| அறியாமை | சமாஜம் | கிளர்ச்சி |

கல்கத்தாவுக்கு அருகிலுள்ள **இராதா நகரத்தில்** ஒரு சிறு ஜமீன்தார் வாழ்ந்து வந்தார். அவர் பெயர் **இராம காந்த ராய்.** அவர் மூர்ஷிதாபாத்து நவாப்பிடம் உத்தியோகம் பார்த்து வந்தார். அவருடைய மனைவியாரின் பெயர் **தரணி தேவி** அவ்வம்மையார் நற்குணமும் நல்லொழுக்கமும் பெருந்தன்மையும் வாய்ந்தவர். அவ்விருவருக்கும் 1744-ஆம் ஆண்டில் இராம் மோகனர் பிறந்தார்

அக்காலத்தில் தான் ஆங்கிலேயருடைய அரசாட்சி இந்தியாவில் நிலைபெற்றது. முதலாவது கவர்னர் ஜெனரலான **வாரன் ஹேஸ்டிங்ஸ்** என்பவரின் ஆட்சி தொடங்கிற்று. அரசாங்கத்தில் வேலை பெற விரும்புவார் எவரும் இக்காலத்தில் ஆங்கிலம்

பயில்வது போல அக்காலத்தில் பாரசீகம், அராபி ஆகிய மொழிகளைப் பயின்று வந்தனர். இராம் மோகனரும் தமது ஊரிலேயே வங்காளி மொழியும் பாரசீக மொழியும் சிறிது பயின்ருர்.

பின்னர் இராம் மோகனர் தமது ஒன்பதாம் ஆண்டில் அரசாங்க மொழியைப் பயிலும் பொருட்டு பாட்னு என வழங்கும் பாடலிபுரத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் தமது நுண்ணறிவினுல் பாரசீக மொழியையும் அராபி மொழியையும் நன்ருகக் கற்ருர்.

இராம் மோகனராய் பின்பு, வடமொழியைக் கற்கும் பொருட்டுத் தமது பன்னிரண்டாவது வயதில் காசி மாநகருக்குச் சென்ருர்; அங்கே நான்கு ஆண்டுகள் தங்கி, வடமொழியிலுள்ள வேதம், புராணம் முதலிய எல்லாக் கலைகளையும் நன்ருகக் கற்ருர்.



இராஜாராம் மோகனராய்

இராம் மோகனர் தமது சீர்த்திருத்தக் கொள்கைக்காகத் தாய் தந்தையரையும் பகைத்துக்கொண்டு, பதினறு வயதுள்ள

இளம் பருவத்திலேயே வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது.

இராம்மோகனர் வீட்டை விட்டு நீங்கிய பின் இமயமலையைக் கடந்து திபேத்து நாட்டை யடைந்தார். திபேத்து நாட்டுப் பிரயாணம் மிகவும் கடினமானது. அப்பிர யாணத்தில் அவர் எத்தனையோ இடையூறு களை அடைந்தார். புத்தமதக் கொள்கைகளை உணரவேண்டும் என்னும் விருப்பத்தால் அவர் திபேத்துக்குச் சென்றார்.

அப்பொழுது திபேத்து நாட்டில் புத்த மதம் சீர்குலைந்த நிலையில் இருந்தது. இராம் மோகனர் புத்தமதத்தின் உண்மையான கொள்கைகளை உணர்ந்து அந்நாட்டினர்க்குக் 'கடவுள் ஒருவரே' என்னும் தமது முடிவைப் போதிக்கத் தொடங்கினார். அப்பொழுது, உண்மை யுணராத மூடர் பலர், இவர் மீது சீற்றங்கொண்டு, இவரைக் கொல்ல முயன்றனர். இவர் அதற்கு அஞ்சவில்லை. ஆயினும் நண்பர் சிலருடைய தூண்டுதலாலும், சில பெண்மக்களுடைய உதவியினாலும், அந்நாட்டை விட்டு வெளியேறினார்.

இவ்வாறு இவர் பல துன்பங்களை அடைந்து நாலாண்டுகள் கழித்தார். பிறகு இவர் தந்தையான இராம க்ாந்தராய், மைந்தர் பிரிவை ஆற்றுமல், மீண்டும் இவரைத்

தமது இல்லத்திற்கு அழைத்துக்கொண்டார். தமது தந்தையாரின் அழைப்பிற்கிணங்கி வீட்டை யடைந்த இராம் மோகனர், தமது தந்தையாருடன் தங்கி, ஆங்கிலம் பயில்வதிலும் வடமொழி நூல்களை ஆராய்வதிலும் காலம் கழித்தார். அக்காலத்தில் இவர் கணவனிறந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கத்தைக் கண்டித்து வந்தார்.

பிறகு, 1800-முதல் 1813-ஆம் ஆண்டு வரையில் இவர் அரசாங்க உத்தியோகங்கள் சிலவற்றில் அமர்ந்திருந்தார். பின்னர் கலெக்டருடைய திவான் என்னும் சிரஸ்தேதார் உத்தியோகத்தில் பத்தாண்டுகள் இருந்தார். இதற்கிடையில் இவருடைய தந்தையாரும் சகோதரர்களும் இறந்துவிட்டமையால், அளவற்ற செல்வம் இவருக்குக் கிடைத்தது. ஆனால், அச்செல்வம் முழுவதும் பல வகை வழக்குகளில் அழிந்துவிட்டது. இவர் தமது முயற்சியினால் மாதம் ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கத்தக்க நிலம் வாங்குவதற்கு வேண்டிய செல்வத்தை ஈட்டினார். இவர் திவானாக இருந்த காலத்தில் இவரைப் பொதுமக்கள் 'திவான்ஜி' என்று அழைப்பது வழக்கம். பிறகு டில்லிச் சக்கரவர்த்தி இவருக்கு 'இராஜா' என்னும் பட்டம் கொடுத்தார். அதுமுதல் இவருடைய பெயர்

இராஜா ராம்மோகனராய் என்று வழங்கியது. பிறகு இவர் தமது நாற்பதாவது வயதில் 1814-ஆம் ஆண்டில், உத்தியோகத்தினின்றும் நீங்கிக் கல்கத்தா நகருக்குச் சென்றார்.

இராம்மோகனரின் கொள்கை காரணமாக, அவருடைய அன்னையார் அவர்மீது வெறுப்புக்கொண்டார். அவர் இறக்க ஓராண்டிற்கு முன்பு தலயாத்திரை செய்யப் புறப்பட்டபோது, தமது வெறுப்பை இராம்மோகனரிடம் வெளிப்படையாகக் கூறினார். ஆயினும் அவர் தமது தாயாரிடம் சிறிதும் வெறுப்படையாமல், அவர் இறக்கும் வரையிலும் அவருக்குச் செய்யவேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்துவந்தார்.

இராம்மோகனர் தமது உத்தியோகத்தை விட்டு நீங்கியது இளைப்பாறும் பொருட்டன்று; பொது நலத்தொண்டு செய்வதற்காகவேயாம். அக்காலத்தில் வங்காள இராஜதானியின் நிலைமை மிகவும் சீர்கேடு அடைந்திருந்தது. கணவன் இறந்துவிட்டால் மனைவியும் உடன் கட்டை ஏற வேண்டும் என்னும் வழக்கம் இருந்தது. சில பெண்கள் இறப்பதற்குத் துணியாவிட்டாலும், அவர்களைக் கட்டாயப்படுத்திக் கணவனுடன் வைத்துக் கொளுத்தப்

பட்டார்கள். பெண்கள் கல்வி கற்ப தில்லை. "பெண்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும்; விதவைகளுக்குக் கல்வி புகட்டிக் காப்பாற்றவேண்டும்; உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும்" என்ற நோக்கங்களுடன் அவர் உழைத்தார். கடவுள் ஒருவரே என்பதைப் பற்றி அவர் நூல்கள் வெளியிட்டார். வட மொழியில் உள்ள உபநிஷத்துக்கள் சில வற்றை ஆங்கிலத்தில் வெளியிட்டார். அராபி மொழி பயின்று, முகமதிய நூல்களையும் கற்றறிந்தார். அவர் **பிரம்ம சமாஜம்** என்னும் ஒரு மதச்சபையை ஏற்படுத்தினார்.

அப்பொழுது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாயிருந்த பெண்டிங் பிரபு அவர் களின் முயற்சியால் பத்து ஆண்டுகளுக்குள் உடன்கட்டையேறும் வ்ழக்கத்தை ஒழிப் பதற்காக ஒரு சட்டம் செய்யப்பட்டிருந்தது. அச்சட்டம் மத விரோதமானது என்று பலர் கிளர்ச்சி செய்தனர். இச் சட்டத்தை நடை முறைக்குக் கொண்டுவரலாகாது என்று பலர் இங்கிலாந்திலுள்ள பாராளு மன்றத் தாருக்கு விண்ணப்பஞ் செய்திருந்தார்கள். இராம் மோகனர் அச்சட்டத்தை உறுதி யுடன் ஆதரித்து, அதன் நன்மையைப் பல ருக்கும் கூறிவந்தார். இச்சமயத்தில் இவ

ருக்கு, இராஜா என்னும் பட்டம் அளித்த டில்லிச் சக்கரவர்த்தி, தம் குறைகள் சில வற்றைப் பாராளுமன்றத்தாருக்குத் தெரி விக்கும் பொருட்டு, இவரைத் தமது பிரதி நிதியாக இங்கிலாந்திற்கு அனுப்பினர்.

அப்பொழுது கப்பலேறிக் கடல் தாண்டிச் செல்லுதல் மத விரோதமானது என்று கருதப்பட்டுவந்தது. அக்காலத்தில் இராம் மோகனர் அஞ்சாமல் கடல்கடந்து ஆங்கில நாடு சென்றார்; அங்குச் சதி நிறுத் தச் சட்டம் நிறைவேற உதவி செய்தார்.

இவர் ஆங்கில நாட்டிற் பலவிடங்களைப் பார்த்துவிட்டு, பிரான்ஸ் நாட்டிற்குச் சென்று 1833-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றார்; இவர் அவ்விடத்தில் இருந்த போது குளிர் தாங்கமுடியாமல் தவித்தார். பிரிஸ்டல் நகரில் இவருக்குச் சுரநோய் கண்டு, அதனல் மிகவும் மெலிவடைந்தார். தக்க வயித்தியர் இவருடைய நோயைத் தணிக்கும் பொருட்டுப் பெரிதும் முயன்றார். ஆயினும் இவர் கி. பி. 1833-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27-ஆம் நாளன்று உயிர் நீத்தார். அப்பொழுது இவர் குமாரரான இராஜாராம் ராய் என்பவரும் இரு வேலைக் காரர்களுமே இவருடன் இருந்தனர். முதலில் இவருடைய உடல் ஒரு தோட்டத்தில்

அடக்கம் செய்யப்பட்டிருந்தது ; பத்தாண்டுகளுக்குப் பிறகு **துவாரகநாத் தாகூர்** என்னும் இவருடைய நண்பரால் பிரிஸ்டல் நகரத்தின் அண்மையில் பெயர்த்து அடக்கஞ் செய்யப்பெற்றது.

இராஜாராம் மோகன்ராய் நமது நாட்டு நன்மையின் பொருட்டு உழைத்தார். அவரைப்போல நாமும் நம் நாட்டு நன்மைக்காக உழைப்போமாக.

### கேள்விகள்

1. இராம் மோகனரின் இளமைப் பருவத்தைப் பற்றி எழுது.
2. அவர் திபெத்துக்குச் சென்ற பிரயாணத்தைப் பற்றிச் சொல்லு.
3. அவர் செய்த உத்தியோகங்கள் எவை ?
4. இராம் மோகனர் செய்த பொதுநலக் காரியங்கள் எவை ?
5. அவர் இங்கிலாந்துக்குச் சென்றது ஏன் ?
6. அவருடைய உயர்ந்த குணங்களைப்பற்றி எழுது.

### பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க.

(1) இராம் மோனர்———மொழியும்———மொழியும் பயின்று வந்தார்.

(2) இராம்மோகனர்———மலையைக் கடந்து———காட்டை———

2. பணியாற்றினர், தலையிட்டார், எண்ணற்ற, கருமமே கண்ணுயிருந்து, கிளர்ச்சி, பட்டம் பெற்று-ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

### இலக்கணம்

**சுட்டெழுத்து :** அ, இ, உ, என்னும் மூன்று எழுத்துக்களும் சொல்லின் முதலில் நின்று ஒன்றைச் சுட்டிக் காட்டும்பொழுது சுட்டெழுத்து எனப்படும்.

(உ - ம்.) **அவன், இவன், அம்மனிதன், இப்புத்தகம்**
(உகரம் செய்யுளிலேயே வரும்.)

———

## 3. உவமைகள்

1. அச்சில்லாத தேர்போல
2. அடியற்ற மரம்போல
3. அடுத்தது காட்டும் பளிங்குபோல
4. அதிகாரி வீட்டில் திருடித் தலையாரி வீட்டில் வைத்ததுபோல
5. அத்திப் பூத்தாற்போல
6. அவசர கோலம் அள்ளித் தெளித்தது போல
7. ஆகாயத்திற் கட்டிய கோட்டைபோல
8. ஆடு தேடியபோது கரடி அகப்பட்டது போல
9. ஆந்தை விழிக்கிறதுபோல
10. ஆலையில் அகப்பட்ட கரும்புபோல
11. ஆற்றில் கரைத்த புளிபோல
12. ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்தது போல
13. இஞ்சி தின்ற குரங்கு போல
14. இருதலைக் கொள்ளி எறும்புபோல
15. இலவு காத்த கிளிபோல
16. உடுக்கை இழந்தவன் கைபோல
17. உடும்புப் பிடிபோல
18. உருத்திராக்ஷப் பூனைபோல
19. ஊமை கண்ட கனவுபோல
20. எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளினது போல

21. எலியும் பூனையும் போல
22. எறும்புப் புற்றில் பாம்பு புகுந்தது போல
23. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல
24. கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போல
25. கருடனைக் கண்ட பாம்புபோல
26. கரும்பு தின்னக் கூலி கேட்டாற்போல
27. கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தாற்போல
28. கிளியை வளர்த்து பூனைக்குக் கொடுத்தது போல
29. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல
30. குரைக்கிற நாய்க்கு எலும்புபோட்டது போல
31. சிவபூஜையில் கரடி புகுந்தாற்போல
32. சூரியனைக் கண்ட பனிபோல
33. திருடனைத் தேள் கொட்டியதுபோல
34. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல

### பயிற்சி

இப்பாடத்தில் வந்துள்ள இந்த உவமைகளுள் எவையேனும் ஐந்தை அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

### இலக்கணம்

**வினாவெழுத்து:** எ, யா என்பவை சொல்லின் முதலிலும் ஆ, ஓ, என்பவை சொல்லின் இறுதியிலும் நின்று வினாப்பொருள் தருவதுண்டு. அவை வினாவெழுத்து எனப்படும்.

(உ - ம்.) எவன், எவள், எவர், எது, எவை.
யாவன், யாவள், யாவர், யாது, யாவை.
வந்தானோ, சென்றானோ,

**மெய்யெழுத்து:** (வன்மையான ஓசையுடைய) வல்லினம், (மெலிந்த ஓசையுடைய) மெல்லினம் (நடுத்தர ஓசையுடைய), இடையினம் என மூன்று வகைப்படும்:—

க், ச், ட், த், ப், ற்-வல்லினம்
ங், ஞ், ண், ந், ம், ன்-மெல்லினம்
ய், ர், ல், வ், ழ், ள்-இடையினம்

---

# 4. நட்பின் பெருமை—I

| | | |
|---|---|---|
| லகுபதனன் | வைகறை | சுபாவம் |
| பயங்கரம் | நித்தியாதானம் | விசுவாசம் |
| பரிவாரம் | நற்குணம் | பச்சாதாபம் |
| விபரீதம் | துர்க்குணம் | குரோதம் |
| சித்திரக்கிரீவன் | தித்திப்பு | பலவீனம் |
| நாலண்டை | சுகதுக்கம் | யத்தனம் |
| பேராசை | துஷ்டர்கள் | வேதாந்தம் |

கோதாவரிக் கரையில் ஒரு பெரிய வன்னி மரத்தில் **லகுபதனன்** என்னும் காகம் வாழ்ந்தது. ஒரு நாள் விடியற்காலத்தில் அங்கே ஒரு வேடன் வந்தான். லகுபதனன் அவனைப் பார்த்துப் பயப்பட்டு, 'இவன் என்ன பண்ணுவானோ' என்று இரைத்தேடப் போகாமல் இருந்தது. இதற்குள்ளே அவ் வேடன் வலையை விரித்து தானியங்களைத் தெளித்து, ஒரு செடி மறைவிற் பதுங்கிக் கொண்டிருந்தான்.

பிறகு, தன் பரிவாரத்தோடு அந்த மரத்தில் வந்திறங்கின. **சித்திரக்கிரீவன்** என்னும் புரு அரசு அங்கே இறைந்திருந்த தானியத்தைப் பார்த்தது. அது தன்னுடன் வந்த புருக்களுடனே, "மனிதர் இல்லாத இந்தக் காட்டில் தானியம் எப்படி வரும்? யார் இதைப் போட்டார்கள் என்று தெரிந்து கொள்ளாமல் இதை உண்ணலாகாது; ஏனென்ருல், ஒரு பிராமணன் பொற்காப்புக்கு ஆசைப்பட்டு, புலியினுல் எப்படி மரணமடைந்தானே, அப்படி நமக்குத் துன்பம் வருமென்று தோன்றுகிறது" என்றது.

புருக்கள் அதைக் கேட்டு, "அதெப்படி? அரசே!" என, சித்திரக்கிரீவன் சொல்கின்றது.

ஒரு கிழப்புலி பலக்குறைவால் உணவு தேட முடியாமல் ஓர் ஏரியில் நீராடி, கையில் தருப்பையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தது. அப்போது ஒரு பிராமணன் அந்த வழியில் வந்தான்.

புலி அவனைப் பார்த்து, "ஓ பிராமணு! இந்தப் பொன் காப்பை நீ பெற்றுக்கொள்," என்றது.

இதைக் கேட்டு அந்தப் பிராமணன் இந்தக் காப்பு நமக்கு வலியக் கிடைக்கின்றது; ஆனுல், மரணத்துக்கு இடமாகிய புலி

யின் அருகில் போகலாகாது. ஆகையால், 'காப்பில் ஆசை வைக்கலாகாது என்போமானால், மரணத்துக்கு நான்கு புறமும் வழி. ஆதலால், இதைக் குறித்து முதன்மையாக முயற்சி பண்ணவேண்டும்' எனத் தனக்குள்ளே உறுதி செய்துகொண்டு, புலியைப் பார்த்து, "ஐயா புலியாரே! காப்பு எங்கே இருக்கிறது?" என்றான்.

புலி கையில் வைத்துக்கொண்டு, "இதோ பார்." எனக் காப்பைக் காண்பித்தது.

**பிராமணன்** : உன்னிடத்தில் எனக்கு எப்படி நம்பிக்கை உண்டாகும்?

**புலி** : நான் வைகறையில் மூழ்குகிறேன். நாளும் தருமம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். நகமும் பல்லும் போன கிழவனாயிருக்கிறேன்; இப்போது என்னிடத்தில் நம்பிக்கையில்லையா? இந்தச் சிறந்த பொருளை உனக்குக் கொடுக்க விரும்புகிறேன். இதனால் என்னிடத்தில் நற்குணம் இருக்கிறதென்று அறியவில்லையா?

**பிராமணன்** : இது மெய்தான். ஆனாலும் புலி மனிதரை அடித்துத் தின்கிறதென்று எல்லோரும் சொல்கிறார்களே!

**புலி** : நான் தருமசாஸ்திரமும் அறிந்திருக்கிறேன்; தன் பிராணன் தனக்கு எப்படித் தித்திப்போ, அப்படியே எல்லோருக்கும்

இருக்குமென்று அறிந்து, சாதுக்கள் பிராணி களிடத்தில் அன்போடு இருக்கின்ருர்கள். தன்னைப் போலவே இன்ப துன்பங் களைப் பிறரிடத்தில் நினைக்கிருர்கள். நீ மிகவும் தரித்திரன். ஆகையால் இதை உனக்குக் கொடுக்க விரும்புகிறேன்; சாஸ்திரமும் இப்படியே உரைக்கின்றது. ஏழைக்கே கொடுக்க வேண்டும்; செல் வம் உள்ளவனுக்குக் கொடுக்கலாகாது. ஏனென்ருல் மருந்து நோயாளிக்கு எப்படிக் குணம் கொடுக்குமோ, அப்படியே நோயில் லாதவனுக்குக் கொடுக்குமா? ஆதலால், நீ இந்த ஏரியிலே முழுகி வந்து, காப்பை வாங் கிக்கொண்டு போ'' என்றது.

பிராமணன் புலியின் பேச்சை நம்பி, ஏரியில் இறங்கினவுடனே, உளையிற் புதைந்து, காலை எடுத்துக்கொண்டு வரக் கூடாமல் திகைத்தான்.

புலி அவனைப் பார்த்து, "பிராமணா! பயப்படாதே; நான் உன்னைச் சேற்றினின் றும் விடுவிக்கிறேன்; சற்று இரு'' என்று சொல்லிக் கொண்டு மெல்லெனப் போய் அவனைப் பிடித்துக் கொண்டது.

அப்போது பிராமணன் 'துஷ்டர்கள் வேதம் கற்றிருந்தாலும் தருமசாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்கள் வார்த்தையில்

நம்பிக்கை வைக்கலாகாது. எவன் சுபாவம் எப்படியோ, அது எப்போதும் போகாது. பேராசையினுல் இந்த விலங்கினிடத்தில் விசுவாசம் வைத்து மோசம் போனேம்' என்று இப்படி எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், அந்தப் புலி அவனைக் கொன்று தின்றது.

ஆதலால், "ஆலோசனை செய்து ஏதொன்று செய்யத்தக்கதோ அதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் யாதொரு தீங்கும் நேரிடாது," என்று சித்திரக்கிரீவன் சொல்லிற்று. அந்த வார்த்தையைக் கேட்டு ஒரு புரு மிகவும் கர்வத்தோடு, "இப்படி ஆலோசித்தால் ஓர் இரையும் நமக்கு அகப்படாது. வெட்கப்படுகிறவன், பொருமையுள்ளவன், மகிழ்ச்சி கொள்ளாதவன், பகை உள்ளவன், தீராச் சந்தேகம் உள்ளவன், பிறர் பொருளாற் சீவிக்கிறவன் இந்த ஆறுபேரும் துக்கத்தையே அடைவார்கள்," என்றது.

இதைக் கேட்டுப் புருக்களெல்லாம் தானியத்தைத் தின்னும்பொருட்டு இறங்கிப்போய் வலையில் அகப்பட்டன. புரு அரசன் அதைப் பார்த்து, "எவரும் என் சொல்லைக் கேளாமற் போனுர்கள்; இப்போது நான் ஒன்றியாயிருந்து பயனில்லை" என்று சொல்லி, தானும் வலையில் அகப்பட்டது.

### கேள்விகள்

1. பொற்காப்புக்கு ஆசைபட்டுப் புலி வாயில் அகப் பட்டது எப்படி ?

2. இக்கதையை எது எவற்றிற்கு எதற்காகக் கூறி யது?

3. கர்வங்கொண்ட புறு கூறியது என்ன ?

4. புறு அரசனின் சிறந்த குணம் எதனுல் தெரிகி றது.

5. இக்கதையால் நீங்கள் தெரிந்துகொள்வது என்ன?

### பயிற்சி

1. பேராசை, வைகறை, இன்பதுன்பம் - இவைகளே அமைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

2. நற்குணம் × துர்க்குணம் - இவைபோன்ற எதிர் மொழிகள் இரண்டு சொல்லு.

3. தித்திப்பு மற்றச் சுவைகளின் பெயர்களேக் கூறு.

## 5. பழமொழிகள்

| | | |
|---|---|---|
| மிஞ்சினுல் | அமுதம் | சங்கடம் |
| பதம் | காணி | முதன்மை |

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அஞ்சிலே வளேயாதது ஐம்பதில் வளேயுமா ?
3. அடாது செய்பவன் படாது படுவான்.
4. அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும்.
5. அடியாத மாடு படியாது.
6. அரசன் எவ்வழி கடவுள் அவ்வழி.
7. அவன் அன்றி ஓரணுவும அசையாது.
8. அழுத பிள்ளே பால் குடிக்கும்.
9. அளவுக்கு மிஞ்சினுல் அமுதமும் நஞ்சு.
10. ஆசை வெட்கம் அறியாது.

11. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
12. இளம் கன்று பயமறியாது.
13. இன்று இருப்பவர் நாளைக்கு இல்லை.
14. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
15. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் வேண்டும்.
16. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
17. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
18. கூழானாலும் குளித்துக் குடி.
19. கல்வி அழகே அழகு.
20. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
21. காணி ஆசை கோணி கேடு.
22. கெடுவான் கேடு நினைப்பான்.
23. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
24. தருமம் தலை காக்கும்.
25. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**பயிற்சி**

எவையேனும் மூன்று பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

**இலக்கணம்**

ஓரெழுத்தோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்தோ பொருளை உணர்த்தினால் சொல் எனப்படும். அச்சொல் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும்.

1. பெயர்ச்சொல்: புத்தகம், நாற்காலி, வீடு, மரம்.
2. வினைச்சொல் : வந்தான், நடந்தான், செல்வார்.
3. இடைச்சொல்: மற்று (ஒரு முறை சொல்லு.)
4. உரிச்சொல் : மிக (வழங்கினான்.)

# 6. நட்பின் பெருமை—II

| | | |
|---|---|---|
| இகழ்ச்சி | துக்கம் | இரணியகன் |
| உபாயம் | புத்திசாலி | பகைவன் |
| ஒருமிக்க | நண்பன் | பட்டினி |
| புருவரசன் | ஆசைகள் | உதவி |
| கண்டகி | திறமை | தீமை |
| புண்ணியவான் | நட்பின் பயன் | உறைந்தன. |

புருக்கள் வலையில் சிக்கிக்கொண்டதைப் பார்த்து, வேடன் அவ்விடத்திற்கு வந்தான். அவனைக் கண்ட புருக்கள் சித்திரக்ரீவனைப் பார்த்து, "நாங்கள் மூடன் புத்தியைக் கேட்டு உன்னை இகழ்ச்சி செய்தோம்; அதனால் இத் துன்பம் அடைந்தோம்" என்றன.

அப்போது சித்திரக்கிரீவன், "இப்போது அதைச் சொல்லிப் பயனென்ன? இதற்கு ஓர் உபாயம் இருக்கிறது; எல்லோரும் வலையோடு ஒருமிக்கப் பறந்து, வேறிடத்திற்குப் போக வேண்டும்; அப்படிச் செய்தால்தான் உயிர் பிழைக்கலாம்" என்றது.

அதைக் கேட்டவுடனே எல்லாப் புருக் களும் வலையோடு விரைவில் பறந்து போயின. அதை வேடன் பார்த்து வியப்புக்கொண்டு, 'இவைகள் ஒரே மனதாய் வலையைக்கொண்டு போயின. ஆயினும், அவைகளில் ஒன்றுக் கொன்று சண்டை நேரிடும்: அப்போது என் கையில் அகப்படும், என்று நினைத்துக்

கொண்டு, அவைகளின் பின்னே ஓடினன். புறாக்கள் நெடுந்தொலைவு பறந்து கண்ணுக்கு மறைந்து விட்டன. இதைப் பார்த்திருந்த **லகுபதனன்** என்னும் காகம் அந்தப் புறாக் களின் பின்னே பறந்து போயிற்று.



புறாவரசன் தன் கூட்டத்தைப் பாாதது "**கண்டகி** நதிதீரத்தில் இருக்குஞ்சித்திரவனத் தில் என் நண்பனுன **இரணியகன்** என்னும் எலி அரசன் இருக்கிருன். அவன் நம்மை வலையிலிருந்து விடுவிப்பான். அங்கே செல் லுங்கள்," என்று சொல்லிற்று.

அதைக் கேட்டு அப்படியே அவை விரைந்து பறந்து சென்று எலி அரசன் வளை

யருகே இறங்கின. ஏதாவது இன்னல் நேரிடு மென்பதைக் குறித்துத் தன் வளைக்கு நூறு வழி செய்துகொண்டு உள்ளே இருந்த எலி அரசன், புறுக்கள் இறங்கிய ஒலியைக் கேட்டு அஞ்சி அடங்கி இருந்தது.

சித்திரக்கிரீவன் "நண்பா இரணியகனே, எங்களோடு ஏன் பேசவில்லை" என்றது.

உடனே தன் நண்பனுடைய குரலை யறிந்து மகிழ்வோடு வலையினின்றும் வெளி வந்து, "நான் புண்ணியவான்; ஆகையால் சித்திரக்கிரீவன் என்னும் மித்திரன் என் வீட்டிற்கு வந்தான். இவ்வுலகத்தில் மனம் ஒத்த நண்பரோடு பேசிப் பழகுவதைக் காட்டிலும் வேறு மகிழ்ச்சி ஏது?" என்று எலி பாராட்டிற்று.

பிறகு, அதனுடைய துன்பத்தைப் பார்த்து மிக வருந்தி, "மித்திரா! நீ எல்லா ரைக்காட்டிலும் சமர்த்தனல்லவோ? உனக்கு இப்படிப்பட்ட இடறு எப்படி நேரிட்டது?" என்று எலி கேட்டது.

சித்திரக்கிரீவன், "எந்தக் காலத்தில் எது நடக்குமோ அது நடக்கும்; விதிவலிது; அதன் முன் எவருடைய திறமையும் பலிக் காது?" என்றது

இரணியகன், "இந்தப் பேச்சு மெய்யே; நூறு நாழிகை தூரத்திலிருந்தே எதையும் தெரிந்துகொள்ளுகிற நீ, இன்றைக்கு வேடன் வலையைப் பாராமல் சிக்கிக்கொண்டனையே! புத்திசாலிகளுக்கு வறுமை வருதல் விதியின் வல்லமையே அல்லாது வேறன்று" என்று சொல்லிச் சித்திரக்கிரீவன் கட்டுண்டிருக்கிற வலைக்கயிற்றை அறுக்கத் தொடங்கிற்று.

அப்போது சித்திரக்கிரீவன், "மித்திரா! முன்னே என்னுடனுள்ளவர்களை விடுவித்துப் பிறகு என்னை விடுவி" என்றது.

இரணியகன், "என் பல் மிகவும் மெல்லியது. அதற்குப் பலமும் கொஞ்சம்; ஆகையால் இத்தனை கயிறுகள் எப்படி அறுபடும்? உன் தளையை அறுத்துப் பின் என் சாமர்த்தியத்திற்குத் தகுந்தபடி அவர்களுடைய தளையையும் அறுப்பேன்" என்றது.

சித்திரக்கிரீவன் "கூடாது: முன்னே இவர்களுடைய பாசத்தை அறு" என்றது.

இரணியகன், "தன்னைக் காப்பாற்றிக் கொண்டு தன் பரிவாரங்களைக் காப்பாற்ற வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடாகிய இவைகளுக்கு உயிரே முக்கிய காரணம் ஆகையால், அதனைக்காப்பாற்றினால் எல்லாவற்றையும் காப்பாற்றினாற் போல் ஆகிறது" எனக்கூறியது.

சித்திரக்கிரீவன், "இந்த நீதி சரிதான்; ஆயினும் இப்படிப்பட்ட வேதனையினின்றும் காப்பாற்றுவதற்கு அல்லவோ இவர்கள் என்னை அரசனாகக் கொண்டிருக்கிறார்கள்; ஆகையால் என் பிராணனிடத்தில் இச்சையை விட்டு இவர்களைப் பிழைப்பி" என்றது.

"இரணியகன், நீ மிக நல்லவன்; அடுத்தவர்களைக் கைவிடாதவன், தலைவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிற சேவகனும், சேவகனிடத்தில் அன்பாயிருக்கிற தலைவனும் பெருமையுடையவர்கள்" என்று சொல்லி, பறவைகளின் பாசங்களை முதலில் அறுத்துச் சித்திரக்கிரீவனுடைய கட்டையும் விடுவித்தது.

பிறகு, ஒன்றுக்கொன்று தழுவிக் கொண்டு அன்பு மொழிகள் பேசின. சித்திரக்கிரீவன் தன் கூட்டத்தோடு திரும்பிப் போயிற்று.

லகுபதனன் என்னுங் காகம் இவற்றையெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு இரணியகனை நோக்கி, "பாக்கியவானாய் இருக்கிறாய். ஆகையால் நானும் உன் நேசத்தை விரும்புகிறேன். நீ தயை செய்து என்னை நண்பனாகக் கொள்ள வேண்டும்" என்று வேண்டிற்று.

அப்போது இரணியகன், "நீ யார்?" என்று வினவியது.

லகுபதனன், "நான் லகுபதனன் என்கிற காக்கை" என்று கூறிற்று.

இரணியகன், "உனக்கும் எனக்கும் வெகு தூரம். உலகத்தில் சமானமானவர்களுக்கே சிநேகம் உண்டாகிறது. நான் உனக்கு இரை; நீ என்னைத் தின்கிறவன். இப்படி இருக்கையில் நமக்குள் நட்பு எப்படி அமையும்? இது தீமைக்கே காரணன்" என்று சொல்லிற்று.

லகுபலதன் "உன்னைத் தின்றால் எனக்குப் போதுமா? நீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவனைப்போல் சுகமடைவேனென்று உன் நட்பை விரும்புகிறேன்" என்றது.

பின்னும் இரணியகன், "நீ எனக்குப் பகைவன்; உன்னுடனே நான் சிநேகம் பண்ணுகிற தில்லை. ஏனென்றால் சத்துரு அனுகூலமாக இருந்தாலும், அவனோடு நேசிக்கலாகாது. தண்ணீர்வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும், ஆகையால், எது தக்கதோ அதைச் செய்யவேண்டும். தண்ணீரில் வண்டியும், நிலத்தில் கப்பலும் செல்லுமா? ஆதலால், பகைவர்களிடத்தில் நம்பிக்கை வைக்கலாகாது" என்று சொல்லிற்று.

லகுபதனன், "நான் உன்னுடனே நட்பு கொள்வேன். இல்லையானால் பட்டினியாய்

இருந்து இங்கேயே உயிரை விடுவேன். நெருப்பின் வெப்பத்தினுல் பொன் முதலியவை உருகி ஒன்ருகின்றன. யாதேனும் ஒரு காரணத்தால் விலங்குகளும் பறவைகளும் நட்பை அடைகின்றன. பயத்தினுலாகிலும் ஆசையினுலாகிலும் மூடர்களுக்குள் சினேகம் உண்டாகிறது. ஆனுல், நல்லவர்களுடைய நட்போ கண்ட போதே காரணமின்றி ஏற்படுகிறது. மண் பானை சீக்கிரமாய் உடைகிறது; பிறகு பொருந்துகிறதில்லை. பொன்குடம் சீக்கிரத்தில் உடையாது; உடைந்தாலும் சேரும். இப்படியே நல்லவர் கெட்டவர்களுடைய நேசமும் இருக்கிறது'' என்றது.

இதைக் கேட்டு இரணியகன், உன் வார்த்தையால் நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆதலால், உனக்கும் எனக்கும் நேசம் இருக்கட்டும். இனிமேல் நாமிருவரும் ஒரு மனதாய் இருக்க வேண்டும். நன்மை செய்கிறவன், நண்பன் என்றும், தீமை பண்ணுகிறவன் பகைவன் என்றும் அறிந்து மனக்கலக்கம் இல்லாமல் நடக்கவேண்டும்,'' என்று சொல்லிற்று.

இப்படிப் பேசி முடித்து இரணியகன் லகுபதனனுக்குச் சிறிது உணவு கொடுத்துத் தன் வளையிற் புகுந்தது.

காகமும் எலியினிடத்தில் விடைபெற்றுக் கொண்டு தன்னிடத்திற்குப் போயிற்று. அன்று முதல் அவை மிகவும் நட்பாய் ஒன்றுக்கொன்று உதவி புரிந்து கொண்டு பல வகையிலும் ஒற்றுமையாய் உறைந்தன.

## கேள்விகள்

1. புறாக்கள் வேடன் வலையினின்று எவ்வாறு தப்பின ?

2. சித்திரக்கிரீவனுடைய நற்குணம் எவற்றால் விளங்குகிறது ?

3. லகுபதனனுக்கும் இரணியகனுக்கும் எப்படி நட்பு ஏற்பட்டது ?

4. இப்பாடத்திலுள்ள நீதி மொழிகளை எடுத்தெழுது.

5. 'தண்ணீர் வெந்நீரானாலும் அடுப்பை அவிக்கும்' இடம் கூறு.

## பயிற்சி

1. உபகாரம் × அபகாரம் - இதுபோல் எதிர்மொழிகள் இரண்டு சொல்லு.

2. புண்ணியவான் பாக்கியசாலி - வான் சாலி என்று முடியும் வேறு இரண்டு சொற்கள் கூறு.

3. இரணியகனுக்கும் லகுபதனனுக்கும் நடந்த சம்பாஷணையைச் சுருக்கி எழுது.

## இலக்கணம்

நான்குவகைச் சொற்களும் பொருந்தி வரும்படி இரண்டு சிறு வாக்கியங்கள் எழுது.

# 7. பத்திரிகைச் செய்திகள்

| | | |
|---|---|---|
| பிரசங்கம் | குடும்பங்கள் | பெரியதனக்காரர் |
| மண்டபம் | கால்நடை | வேண்டுகோள் |
| அரைக்கால் | பட்டினி | இறையாமங்கலம் |
| நிரபராதி | தாலுகா | கொஞ்சநஞ்சம் |
| பிரார்த்தனை | பேரம்பாக்கம் | பஞ்சாலை |
| அவசியம் | பலிஜகுலம் | சுற்றுப்பயணம் |

(இது 28-8-'39-ஆந் தேதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

## நகரச் செய்திகள்

**பொதுக் கூட்டம்** :—நாளை மாலை 5-30 மணிக்குத் திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, கங்கைகொண்டான் மண்டபத்தில் தொத்து நோய்களைப் பற்றி ஒரு பிரசங்கம் நடைபெறும்.

**ஸ்ரீ சரஸ்வதி கான சபா, வில்லிவிவாக்கம்** : நாளை மாலை 5-மணிக்குப் பெருமாள் கோவில் சந்நிதித் தெரு சத்திரத்தில் ஸ்ரீமான் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, பாட்டு; விசுவநாத சர்மா, பிடில்; வேணு நாயகர், மிருதங்கம். முதலியவர்கள் அடங்கிய சங்கீதக் கச்சேரி நடைபெறும்.

**சென்னை ஹிந்து மகா சபை** : இதனுதரவில் நாளை மாலை 5-30 மணிக்கு அரண்மனைக் காரத் தெரு கோகலே ஹாலில் ஒரு கூட்டம் நடக்கும். டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, ஹிந்து மகா சபை நோக்கங்கள் பற்றிப்

பேசுவார். டாக்டர் வி. டி. நிம்கர் தலைமை வகிப்பார்.

**மகாபாரதப் பிரசங்கம் :** சென்னை, சூளை பட்டாளம், ஸ்டராஹான்ஸ் ரோட்டில் அமைந்திருக்கும் ஸ்ரீ வேணுகோபால பக்த ஜன சபையில் பாகவத சிரோமணி அனக் காவூர் துரைசாமி நாயகர் மாணவர் ஸ்ரீமான் ஆ. த. வெங்கடேச முதலியாரால் நாளை மாலை 7-மணிக்கு மேல் மகாபாரதப் பிரசங்கம் நடைபெறும்.

(இது 30-8-'39ஆந் தேதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

ஆண்டவனைப் பிரார்த்திப்போம்

## சென்னை மேயர் வேண்டுகோள்

சென்னை, ஆகஸ்டு, 30-சென்னைக் கார்ப் பொரேஷன் மேயர் ஸ்ரீமான் கே. வேங்கட சுவாமி நாயுடு ஓர் அறிக்கை விடுத்துள்ளார். அதில் அவர் தெரிவிப்பதாவது :—

இன்று உலகம் மகத்தான நெருக்கடியி லிருக்கிறது. எங்கும் யுத்த மேகங்கள் தோன்றியிருக்கின்றன. கோடிக்கணக்காக வுள்ள நிரபராதிகளான சகோதர சகோதரி களின் உயிர்களுக்கு ஆபத்தேற்படவிருக் கிறது. இந்த உலகயுத்தம் ஏற்படாதிருக்க வேண்டுமென்று நாமெல்லோரும் பிரார்த் தனை செய்வோம்.

சென்னையில் தண்ணீர்க் கஷ்டத்தை எப்படி நிவர்த்திப்பது என்ற பிரச்சினை நம் முன் நிற்கிறது. சென்னைக்கு நூறு மைல்களுக்கப் பாலுள்ள இடங்களிலெல்லாம் மழை பெய்கிறது. எதிர்பார்ப்பதைக்காட்டிலும் அதிகப் பலனைப் பிரார்த்தனையின் மூலம் பெறலாம் என்று டெனிஸன் பிரபு தெரிவித்தார். இந்த வேண்டுகோள் சில சிரேஷ்டர்களின் ஆதரவைப் பெறும். அவர்கள் பிரார்த்தனை நன்மையைத் தரும். ஆகவே, சென்னைவாசிகள் எல்லோரும் உடனே நிவாரணம் கிட்டுவதற்காகப் பிரார்த்தனை செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## செங்கற்பட்டு ஜில்லாவில் பஞ்சக் கொடுமை

(இது 2-8-'39-ஆந் தேதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

சென்னை, ஜுலை 31—திவான் பகதூர் கே. தெய்வசிகாமணி முதலியார், எம். எல். ஸி. பின்வருமாறு எழுதுகிறார் :—

செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ பெரும்பூதூர். திருவள்ளூர் தாலுக்காக்களில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு இப்போது தான் திரும்பினேன். பல கிராமங்களுக்கு உள்ளே சென்று பார்த்தேன். குடிகளுடைய தற்கால நிலைமையை நேரில் கண்டேன்; அடியோடு மழையே இல்லாமற் போனதால்

குடிகள் ஆதரவு அற்றவர்களாய் இருக்கிறார்கள். கடன் வாங்கிப் பிழைக்கவும் வழி இல்லாமல் இருக்கிறது. கடன் கொடுக்கக்கூடியவர்களும் கொடுக்கப் பின் வாங்குகிறார்கள். பல குடும்பங்கள் பட்டினி யாய்க் கிடப்பதைப் பார்த்தேன். கால்நடைகளுக்கும் தீனி கிடைக்கவில்லை; இதுவரையில் மழையே இல்லாமையினால், பச்சைப் புல்லைக் கண்ணால் பார்க்கவும் முடியவில்லை. கையிலிருந்த கொஞ்ச நஞ்ச வைக்கோலையும் பசியாற்ற மாட்டாமல் விற்று விட்டிருக்கிறார்கள். இப்போது ஜனங்களும் கால்நடைகளும் படும்பாடு கொஞ்சமன்று.

## இரண்டு நாட்களாகப் பட்டினி

பிஞ்சிவாக்கம் என்ற கிராமத்திலே ஒரு சக்கிலியப் பெண் இரண்டு நாட்களாகத் தன்னுடைய குழந்தைகளோடு பட்டினியாகக் கிடக்கிறாள்; ஒரு ஜதை செருப்பை இரண்டு அணா விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறாள்; வாங்குவார் இல்லை. அதே ஊரிலே பலிஜகுலத்துப் பெண் ஒருத்தி சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆயின. குடி செட்டிப் பாளையம் கிராமத்தில் ஒருவர் அன்றைய் தினம் பசியை ஆற்றிக்கொள்ளக் கையில் ஒன்றும் இல்லாது இருப்பதைக் காண வருத்தமாயிருந்தது. பேரம்பாக்கம் கிராமத்தில் பசி

தாங்கமுடியாமல் புளியங்கொட்டையை வேக் வைத்துத் தின்பதைப் பார்த்தேன். இந்த ஆதித்திராவிடர்கள் கூடிச்சென்று சாப்பாட் டுக்குத் தானியம் கொடுக்கிறீர்களா? இல் லையா? என்று ஊர் பெரிய தனக்காரர்களைக் கேட்டதாகத் தெரிந்தது. இருளஞ்சேரி கிரா மச் சேரிக்குள் போனேன். ஒரு நாள் முழு வதும் பட்டினியாயிருந்தது. மறுநாள் கிடைத்த அரைக்கால்படி அரிசியைக் கஞ்சி காய்ச்சி ஒரு தாயும் நாலு குழந்தைகளும் அவர்கள் பாட்டியுடன் ஆவலோடு சாப் பிட்டுக்கொண்டு இருந்தார்கள். இம்மாதிரி யான பட்டினிக் குடும்பங்கள் இன்னும் எத் தனையோ இருக்கின்றன. இறையா மங்கலத் திலிருந்து மப்பேடு கிராமத்திற்கு வந்து கொண்டிருந்தபோது, இருபதுபேர் கூட்ட மாய்ப் போய்க் கொண்டிருப்பதைப் பார்த் தேன். ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு சின்ன மூட்டை உப்பு இருந்தது. பொன் னேரி தாலுக்காவிலுள்ள சத்தியவேடு என் னும் கிராமத்திலிருந்து அதைக்கொண்டு வரு கிறார்களாம்; கிராமம் கிராமமாகச் சுற்றியும், நான் அவர்களைப் பார்த்தபோது விற்பனை யெல்லாம் மிகவும் சொற்பமாகத்தான் இருந்தது.

### பஞ்சக் கொடுமை

ஜில்லாவில் உள்ள முக்கியஸ்தர்க ளும், ஜில்லா உத்தியோகஸ்தர்களும் அப்

போதைக்குப்போது கலெக்டா தலைமையில் கூடி ஜில்லாவிலுள்ள குடிகளது நன்மையைப் பற்றி ஆலோசிக்கும் கூட்டம் சென்ற பிப்ர வரி மாதத்தில் கூடியபோது, அப்போது ஏற் பட்டிருந்த பஞ்ச நிலைமையைப் பற்றித் தெரி வித்தேன். அது காரணமாகச் சில ரோட்டு வேலைகளும் உத்தரவு செய்யப்பட்டு நடந்து வருகின்றன. ஆனால், இப்போது ஏற்பட் டுள்ள பஞ்ச நிலைமை மிகவும் கடுமையாக இருப்பதால் அந்த வேலைகள் போதா.

பொன்னேரி தாலுகா, ஸ்ரீ பெரும்பூதூர் தாலுகா, திருவள்ளூர் தாலுகா இவற்றிலே ஜனங்கள் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ சூரிய நாராயண ராவைப் பார்த்துப் பேச நேர்ந்தது. அவர் முன்பு கலெக்டராயிருந்த ஜனுப் இ. எம். கானுடன், ஜில்லாவைச் சுற்றிப் பார்த்து இருக்கிறார். பஞ்சம் ஏற்பட்டிருப்பதையும் உடனே ஜனங்களுடைய கஷ்டத்தை நீக்க ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியத்தை யும் அவரும் ஒப்புக்கொண்டார்.

### கேள்விகள்

1. ஒரு பத்திரிகையிலிருந்து ஏதேனும் ஒரு நகரச் செய்தியை எடுத்துக் கூறு.

2. பிரார்த்தனையைப் பற்றி டெனிஸன் யாது கூறி யுள்ளார்?

3. பஞ்சக் கொடுமைகளைப்பற்றிச் சுருக்கிச் சொல்லு.

### பயிற்சி

1. பின்வரும் தொடர்களைத் திருத்தி எழுது.

| | |
|---|---|
| ராமன் நடக்கிறது | மனிதர்கள் பேசுகின்றன |
| குதிரை ஓடுகிறான் | சீதை சாப்பிட்டது |
| பறவைகள் பறக்கிறார்கள் | கழுதை தூங்கினார். |

### இலக்கணம்

#### அறுவகைப் பெயர்கள்

1. **பொருட் பெயர் :** ஒரு பொருளுக்குப் பெயராக வருவது : அரசன், அடுப்பு, பெட்டி, வாழை.

2. **இடப் பெயர் :** ஓர் இடத்தின் பெயராக வருவது: தஞ்சாவூர், வீடு, பள்ளிக்கூடம், தோட்டம்.

3. **காலப் பெயர் :** ஒரு காலத்தின் பெயரைக் குறிப்பது : சித்திரை, கிழமை, நாழிகை.

4. **சினைப் பெயர் :** ஓர் உறுப்பின் பெயராக வருவது : கால், தலை, கிளை, பூ, பழம்.

5. **குணப் பெயர் :** ஒரு குணத்தை உணர்த்துவது: உண்மை, சிவப்பு, அன்பு.

6. **தொழில் பெயர் :** ஒரு தொழிலுக்குப் பெயராய் வருவது : ஓட்டம், ஆட்டம், தின்னல்.

---

# 8. சேரன் - செங்குட்டுவன் - I

| | | |
|---|---|---|
| **அத்தாணி** | **சோதிடன்** | **இளையவன்** |
| **அமைச்சர்** | **வீரக்கல்** | **பரிதவிக்கும்** |
| **நிமித்திகன்** | **நீர்ப்படை** | **அரசியல்** |
| **அரசவை** | **மூத்தவன்** | **அரசுரிமை** |

வஞ்சிமா நகரத்திலிருந்து சேர நாட்டை ஆட்சி புரிந்தவர் சேரர். அவர்களுள்

**இயமவரம்பன் நெடுஞ்சேரலாதன்** மிகச் சிறந்த வீரன். இவன் மனைவி நெடுங்தேர்ச் சோழன் மகள் **நற்சோணை** என்பவள். இவர்களுக்குச் **செங்குட்டுவன், இளங்கோ** என இரு மக்கள் பிறந்தனர். இவ்விருவரும் இளமையிலேயே அரசர்க்குரிய கல்வி அனைத்தையும் நன்கு பயின்று அறிஞராகவும் வீரராகவும் விளங்கினர்.

ஒருநாள் சேரலாதன் அத்தாணியில் அமைச்சர், அறிஞர், நட்பினர் அனைவரும் சூழ அரசவையில் வீற்றிருந்தான். அப்போது நிமித்திகன் ஒருவன் அரசவையையணுகி மன்னனையும் அவன் மக்களையும் வாழ்த்தினன். பின்னர் அச்சோதிடன் மக்களிருவரையும் உச்சி முதல் உள்ளங்கால் வரை உற்று நோக்கினன். உடனே அவன் மன்னனை நோக்கி, "அரசே! தங்களுக்குப் பின் அரசாளும் அதிருஷ்டம் இளங்கோவுக்கே உளது" என்றான். இளங்கோ உடனே அங்கிருந்த யாவரும் வியக்கும்படி அந்நிமித்திகனைச் சினந்து நோக்கி, "ஏ! அறிவற்ற நிமித்திக! நீ கூறியது சிறிதும் பொருத்தமற்றது. மூத்தவன் இருக்க இளையவன் அரசாளுதல் முறையாமோ? அத்தகைய முறையற்ற செயலை யானோ செய்வன்? அங்ஙனஞ் செய்யேன். இப்பொழுதே நினது மொழி பொய்யாகுமாறு செய்கிறேன்; பார்" என்று கூறி துறவிக்

கோலங் கொண்டான். அது முதல் யாவரும் அவரை இளங்கோவடிகள் என அழைக்க லாயினர்.

இளங்கோவடிகள் இங்ஙனம் துறவறம் பூண்டதைக் கண்ட செங்குட்டுவன், அவரை நோக்கி, "என் பொருட்டு அரசியல் இன்பத்தை வெறுத்துத் துறவு பூண்ட நின் தகுதியை மிகவும் பாராட்டுகிறேன். ஆனால், நான் நின்னை வேண்டிக்கொள்வது ஒன்று உண்டு. அதாவது, நீ ஒருபொழுதும், இவ் வஞ்சிமா நகரத்தை விட்டு நீங்காதிருத்தல் வேண்டும் என்பதே" என்றனன். இளங் கோவடிகளும் செங்குட்டுவன் விரும்பியதற்கு இணங்க, வஞ்சிமாநகரின் கீழ்ப்பாலுள்ள வாயிற் கோட்டம் என்னும் மடத்தில் வசித்து வரலானார்.

சிலநாள் கடந்து நெடுஞ் சேரலாதனுக்கும் சோழன் **பெருநற்கிள்ளி**க்கும் பெரும்போர் மூண்டது. அப்போரில் அம் மன்னர்களிருவரும் உயிர் நீத்தனர். நெடுஞ் சேரலாதன் போர்க்களத்தில் மடிந்ததை யறிந்த நற்சோணை உடனே போர்க்களத்தை அடைந்து நெடுஞ்சேரலாதனுடன் உயிர் நீத்தாள். பின்னர் செங்குட்டுவன் அரச னைவுடன், வீரர்களுக்கும், கற்புடை மகளிர்க்கும் கல்நடும் அக்கால முறைப்படி, தன்

தாய் நற்சோணைக்கும் **வீரக்கல்** நாட்ட முடிவு செய்தான். உடனே அதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லைக் கங்கையில் நீராட்டும் பொருட்டு வடநாடு நோக்கிச் சென்றான். அப்பொழுது அங்கிருந்த ஆரிய மன்னர் பலரும் ஒன்றுகூடி வந்து செங்குட்டுவனை எதிர்த்தனர். செங்குட்டுவன் ஒரு சிறிதும் அஞ்சாது, அவர்களோடு போர் செய்து அவர்களைத் தோல்வியுறச் செய்தான்.

**அறுகை** என்னும் பெரிய சிற்றரசன் ஒருவன் செங்குட்டுவனுக்கு நண்பனாக இருந்தான். அக்காலத்துப் பாண்டிய மன்னனுக்குப் படைத் தலைவனாயிருந்த **மோகூர்ப் பழையன்** என்பவன் அறுகைமீது சினங் கொண்டிருந்தான். அதனால் அவ்விருவருக்கும் அடிக்கடி போர் மூண்டது. அப்போர்களில் அறுகையே தோல்வியும் துன்பமும் அடைய நேர்ந்தது. அதுகண்ட செங்குட்டுவன் தனது நண்பனான அறுகையின் பொருட்டு மோகூர்ப் பழையனுடன் போர் புரிந்து, அவனைத் தோற்கடித்தான்.

### கேள்விகள்

1. சேரர் எங்கிருந்து ஆட்சி புரிந்தனர்?
2. நெடுஞ் சேரலாதன் மக்களிருவர் யாவர்?
3. இளங்கோ அடிகளானது எப்படி?
4. நற்சோணை என்பவள் யாவள்?

### பயிற்சி

அத்தாணி, வியக்கும்படி, கடந்து, அஞ்சாது : இச் சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுது.

### இலக்கணம்

பெயர்ச்சொல் ஒவ்வொன்றும் திணை, பால், எண், இடம் என்பவைகளை ஏற்கும். திணை இருவகைப்படும். அவை உயர் திணை அஃறிணை என்பன. மக்களும் தேவரும் உயர்திணை. மற்ற அனைத்தும் அஃறிணை. இப் பாடத்திலிருந்து ஒவ்வொரு திணைக்கும் ஐந்து பெயர்களை எடுத்தெழுது.

---

# 9. சேரன் - செங்குட்டுவன் - II

| | | |
|---|---|---|
| திரைப்பொருள் | காவிரி | நகையாடினர் |
| கொணர்ந்து | இமயம் | தாமதம் |
| விமானம் | பொதியம் | உவகை |
| விண் | நீர்ப்படை | ஆரவாரித்து |
| எரி | நிமித்திகன் | கடுந்துயர் |
| கங்கை | சினம் | விழா |

இக்காலத்தில் செங்குட்டுவன் மாமனாகிய சோழமன்னன் இறந்துவிட, அவன் மகன் சிறுவனாக இருந்ததால், தாயத்தாராகிய மற்ற மன்னர்கள் அவனுடைய அரசியலைக் கைப்பற்றிக் கொண்டனர். உடனே, தனது அம்மான் மகன் பட்டமின்றிப் பரதவிக்குஞ் செய்தியைக் கேட்டுச் சேர நாடு சென்றான்; செங்குட்டுவன், தனது மாமனின் அரசியலைக் கைப்பற்றிய மன்னவர்களுடன் பொருது,

வென்று, தன் மாமன் மகனுக்கே அந்நாட்டு அரசுரிமையை அளித்தான்.

ஒருநாள் செங்குட்டுவன் **செங்குன்று** என்னும் மலையை அடைந்தான். அம்மலைக் குறவர்கள் அனைவரும், அரசனுக்குத் திரைப் பொருள் பல கொணர்ந்து அரசனிடங் கொடுத்து வணங்கி நின்று, அம்மலையில் அவர்கள் கண்ட அதிசயம் ஒன்றைக் கூறத் தொடங்கினர்; "அரசே, இம்மலையில் கற்புடைய மங்கையொருத்தி வந்து ஒரு வேங்கை மரத்தினடியில் நின்றாள்; அப்பொழுதே விண்ணிலிருந்து கடவுளர் பலர் வந்தனர்; அவளுடைய கணவனை அவளுக்குக் காட்டி அப்பொழுதே கணவனுடன் அவளை விமானத்திலேற்றி விண்ணுலகிற்கு அழைத்துச் சென்றனர்" என்று கூறினர்.

குன்றவர் கூறியபொழுது அங்கிருந்த அருந் தமிழ்ப் புலவர் **சாத்தனார்** என்பவர், வேந்தனது உள்ளக் குறிப்பினை உணர்ந்தார். "இச் செங்குன்றிற்கு வந்து தன் கணவனுடன் விண் புகுந்தவள் கற்புடைக் கண்ணகியே யாவாள். அவள் காவிரிப்பூம் பட்டினத்துக் கோவலன் மனைவி. பாண்டியன் நெடுஞ்செழியனால் கோவலன் கள்வனென்று கருதப் பட்டுக் கொல்லப்பட்டான். அதனால் சின மூண்ட கண்ணகி, பாண்டியன் அவைக்களம் புகுந்து வழக்காடி, பாண்டியனை அரசுக்

கட்டிலிலேயே இறக்கச் செய்தாள். பின்னும் சினம் அடங்காமல் மதுரையையும் எரியூட்டினுள். அதன் பின்னே இம்மலையை அடைந்து, தன் கணவனுடன் விண்ணுலகம் சென்ருள். யான் மதுரையிலிருந்தபோது இந்த நிகழ்ச்சியை அறிந்தேன்'' என்று கூறினுர்.

செங்குட்டுவன் மனைவியான வேண்மாள், கற்புக் கடவுளாகிய கண்ணகிக்குச் சேர நாட்டில் சிலையமைத்துக் கோயில் கட்ட வேண்டும் என்று விரும்பினுள். மன்னன் அவள் விருப்பத்தை நிறைவேற்ற எண்ணி அயலிலுள்ள அமைச்சர்களை நோக்கினன். அவர்கள் அரசனைப் பார்த்து "வேந்தே, பத்தினிப் பெண்களுக்குச் சிலை அமைக்க வேண்டுமாயின், பொதிய மலையிலேனும், இமயமலையிலேனும் கற்கொண்டு அமைத்தல் வேண்டும். பொதிய மலையில் கொள்ளப் படும் கல்லைக் காவிரியிலும் இமயமலையில் கொள்ளும் கல்லைக் கங்கையிலும் நீர்ப்படை செய்து கொணர்ந்து நாட்டி, விழாவெடுத்து வழிபடலே முறையாகும்'' எனப் புகன்றனர்.

அதுகேட்ட செங்குட்டுவன், "பொதிய மலையிற் கல்லெடுத்துக் காவிரியில் நீர்ப்படை செய்தால் எம்போன்ற மன்னருக்குப் புகழன்று. ஆதலின் வடநாடு சென்று இமயத்திற் கல்கொண்டு கங்கையில் நீராட்டிக் கொணர்தலே ஏற்கும்'' என்று

கூறினுன். அச்சமயம் வடநாட்டிலிருந்து அங்கு வந்த முனிவர் சிலர் அரசனை அடைந்து ஆசி கூறி, "அரசே! வடநாட்டில் நடந்த விருந்து ஒன்றில், ஆரிய அரசன் பாலகுமாரன் பிள்ளைகளாகிய **கனகன், விசயன்** ஆகிய இருவரும் தமிழரசர்களின் வீரத்தை மிகவும் இகழ்ந்து கூறி நகையாடினர்" என்று கூறினர். அது கேட்ட அரசன் பெருஞ் சினங் கொண்டு, "அமைச்சர்களே! நமது படையை இப்பொழுதே போருக்குப் புறப்படச் செய்யுங்கள்" என்ருன். உடனே நிமித்திகன், "அரசே! நினக்கு வெற்றி கிடைக்கும் நேரம் இதுவேயாகும். ஆதலால், காலதாமதம் இன்றிப் போருக்குப் புறப்படவேண்டும்" எனப் புகன்ருன். அரசனும் போருக்கு எழுந்தான்.

பின்னர் நிமித்திகன் கூறிய நல்ல வேளையில், மன்னனது வெற்றி வாளையும் வெண்கொற்றக் குடையையும் யானைமீது ஏற்றினர். படைகளும் நெடுநாளாகப் போர்க்களம் காணுமையால், போர் என்ற பெயரைக் கேட்டவுடன் அளவுகடந்த உவகை கொண்டு ஆரவாரித்து எழுந்தன.

அப்பால் செங்குட்டுவன் மறுநாட் காலையில் துயிலெழுந்து செய்யவேண்டிய கடமை

களைச் செய்து போர்க்கோலங் கொண்டான்; உடனே தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமான் திருவடி பணிந்து யானையின் மீதேறிச் சென்றான்.

முன்னரே நகரின் வெளியே அரசன் வரவை ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்த படைகளும் மகிழ்ச்சியுடன் மன்னனோடு கூடி வட நாடு நோக்கிப் புறப்பட்டன. செங்குட்டுவன் கங்கையைக் கடந்து, உத்தர கோசலத்தை அடைந்தான். செங்குட்டுவன் வரவறிந்து அந்நாட்டரசரான கனகவிசயர் தம் நட்பாளரான வேந்தர்களுடன் கூடி அவனை எதிர்த்தனர். தமிழ்நாட்டு வீரர் அனைவரும் அஞ்சாது போர் செய்தனர். கனகவிசயர் தோல்வியுற்று, ஐம்பது தேர் வீரர்களுடன் சிறைப்பட்டனர்.

அதன்பின் செங்குட்டுவன் சில வீரரை இமயமலைக்கு அனுப்பிக் கல்கொணரச் செய்தான். அக்கல்லைக் கனகவிசயர்களின் தலை மீதேற்றிக் கங்கையில் நீர்ப்படை செய்து, படை வீட்டை அடைந்தான்; பிறகு செங்குட்டுவன், தனது நண்பினராகிய கன்னர் நூற்றுவருக்கும் மற்றைய நண்பர்களுக்கும் முகமன் கூறிப் பரிசளித்து, வஞ்சிமா நகரை

நோக்கிப் புறப்பட்டான். சேனைகளும் செங்குட்டுவனும் சேர நாட்டை நெருங்கினர்.

அரசனும் வெற்றி முரசொலிக்க, வீரர் புடைசூழ நகருக்குள் நுழைந்தான். ஆடவர் பெண்கள் அனைவரும் கூடி நின்று மன்னனை வாழ்த்திக் கண்ணேறு கழித்தனர்.

பின்னர், செங்குட்டுவன் கனகவிசயர் கடுந்துயருடன் சுமந்து வந்த கல்லை நன்னாளில் கண்ணகிக்கென அமைத்த கோயிலில் நாட்டி விழா நடத்திக் களித்தான்.

### கேள்விகள்

1. செங்குன்றின் குறவர்கள் சேரனுக்குக் கூறியது யாது?
2. செங்குட்டுவன் ஏன் இமயமலை சென்றான்?
3. கனகன், விசயன் என்பவர் யார்?
4. நிமித்திகனுடைய வேலை யாது?

### பயிற்சி

1. கண்ணகி மதுரையில் நிகழ்த்திய செயல்களைப் பத்து வரியில் எழுது.

### இலக்கணம்

மலை; வேங்கை, கணவன், கள்வன், நாடு, மன்னன், யானை, கனகன் இச் சொற்களுக்குத் திணை கூறுக.

# 10. தமிழகம்

| | | |
|---|---|---|
| நாணயங்கள் | கலிங்கம் | மண்டலம் |
| சிவன்கோயில் | பௌத்தர் | விசாரணை |
| சைவசமயம் | பராக்கிரமம் | நிலப்படை |
| துறைமுகம் | கற்றூண் | மதவாதம் |
| தலைநகரம் | பிரதிநிதி | வெப்புநோய் |
| பண்டங்கள் | பாசுரங்கள் | முகத்துவாரம் |

திருவேங்கட மலைக்குத் தெற்கே கன்னியா குமரி வரையிலுமுள்ள நாட்டிற்குப் பண்டைக்கால முதல் **தமிழகம்** என்று பெயர். இந்நாட்டில் வழங்கி வந்த மொழி **தமிழ்**. முற்காலத்தில் இங்கே மூன்று ஆட்சி செழித்திருந்தன. அவை **சேர, சோழ, பாண்டிய**ருடைய ஆட்சிகள் ஆகும். தமிழகத்தினுள் சேரநாடு மேற்கிலும், பாண்டியநாடு தெற்கிலும், சோழநாடு வடக்கிலும் இருந்தன.

**சேரர் ஆட்சி :—** சேரநாடு கேரளமென்றும் அழைககப்படும். தற்காலத்திய கொச்சி, மலையாளம், சேலம், கோயமுத்தூர், திருவாங்கூர் முதலியவை அந்நாட்டில் அடங்கியிருந்தன. அதன் தலைநகரம் **வஞ்சிமாநகரம். சேரன் செங்குட்டுவன்** ; அவன் மிகத் திறமைசாலி. அவனுடைய தம்பி **இளங்கோவடிகள்** என்பவர். இவர் **சிலப்பதிகாரம்** என்னும் அழகிய **தமிழ்** நூலைச் செய்திருக்கிறார். இவர்களைப்பற்றி முன் பாடத்தில் நீங்கள் படித்தீர்கள்.

**பாண்டியர் ஆட்சி** :—மதுரை, திருநெல்வேலி இராமநாதபுரம் என்ற மூன்று ஜில்லாக்களும் பாண்டிய நாட்டில் அடங்கியிருந்தன. இதன் பண்டைத் தலைநகரம் திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரபரணிநதி முகத்துவாரத்திலிருந்த **கொற்கை** என்பது. அங்கே முத்துக் குளிப்பதும் முத்து வாணிபமும் மிக நடந்து வந்தன. அது ஒரு பெரிய துறைமுகப்பட்டினமாயும் விளங்கிற்று. பின்னால் **மதுரை** தலைநகரமாக்கப்பட்டது. பண்டைக் காலத்தில் பாண்டியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் பெரு வர்த்தகம் நடந்து வந்தது. மதுரைக்கு அண்மையில் பண்டை ஆட்சியின் பொன் நாணயங்களும் சில்லரைச் செப்பு நாணயங்களும் அகப்பட்டிருக்கின்றன. பாண்டியர்கள் அமைத்திருந்த **தமிழ்ச் சங்கத்தில்,** பெரும் புலவர்களிலிருந்து **தமிழை** ஆராய்ந்தனர். அவர்களால் செய்யப்பட்ட நூல்கள் முழுதும் போற்றத்தக்கன. மதுரையில் புகழ்பெற்ற சிவன் கோயில் ஒன்றுள்ளது.

பாண்டியருள் முதன்மையானவன் **சுந்தரபாண்டியன்.** அவன் ஜைன மதத்தைச் சேர்ந்தவன். அவன் காலத்தில் சீர்காழியிலிருந்த திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரைக்கு வந்தார். அப்பொழுது சுந்தர

பாண்டியனுக்கு ஏற்பட்டிருந்த தீராத வெப்பு நோயைத் தீர்த்து, அவரைச் சைவ சமயத்தில் சேர்த்தார்.

பாண்டியர்களுக்கும், மற்றைத் தமிழரசர்களுக்கும், இலங்கை அரசர்களுக்கும் அடிக்கடி போர் நிகழ்வதுண்டு. பின்னல் பாண்டியர்களின் பலம் குன்றிப்போகவே, அவர்கள் ராஜ்யம் **விஜயநகர** ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. விஜயநகர ராஜ்ய அழிந்த பிறகு நாயக்க அரசர்கள் மதுரையில் அரசாண்டனர். அவர்களுள் **திருமலை**



**நாயக்கர்** சிறந்தவர். அவர் மதுரையில் தம் பெயரால் ஓர் அழகிய மஹாலையும், ஒரு

தெப்பக் குளத்தையும், புது மண்டபத்தையும் கட்டி வைத்திருக்கிறார்.

**சோழர் ஆட்சி:**—சோழநாடு காவிரி நதிக் கரையில் உள்ளது. வடக்கே நெல்லூரிலிருந்து தெற்கே புதுக்கோட்டைவரை அது பரவியிருந்ததாகத் தெரிகிறது. அதன் தலைநகரம் **திருச்சிராப்பள்ளிக்குச்** சமீபத்திலுள்ள **உறையூர்.** காவிரிநதி கடலோடு கலக்கும் இடத்திலுள்ள **காவிரிப்பூம்பட்டினம்** சோழ நாட்டின் துறைமுகம். இப் பட்டினம் பின்னால் தலைநகராக்கப்பட்டது. முற்காலத்தில் இங்கே வியாபாரம் மிகச் சிறப்பாய் நடந்து வந்தது. ஏராளமான கப்பல்கள் இங்கிருந்து பண்டங்களை ஏற்றிக்கொண்டு பர்மா, மலேயா, இலங்கை முதலிய இடங்களுக்குச் சென்று வியாபாரம் செய்தனர் என்று சரித்திரம் கூறுகின்றது.

**சோழன் கரிகாலன்:**—பழைய சோழ அரசர்களுள் புகழ்பெற்றவன் கரிகாலன். இவன் இலங்கைமீது படையெடுத்து வென்றதாகவும், அடிக்கடி சேர பாண்டியர்களுடன் போர் செய்ததாகவும் தெரிகிறது. இவன் காலத்தில்தான் காவிரிப்பூம்பட்டினம் தலைநகரமாக்கப்பட்டது. பழைய சோழ அரசர்களின் குலம் கி. பி. 550ல் அழியவே கி. பி. 600-முதல் 850-வரை சோழநாடு பல்லவர் ஆட்சியின் கீழ் வந்தது.

**இராஜ ராஜ சோழன் :**—பின்னல் வந்த அரசர்களில் சிறந்தவன் **இராஜராஜ சோழன்.** இவன் கி. பி. 985-இல் அரசனுகி 28-வருஷ காலம் நீதியுடன் ஆண்டுவந்தான். இவன் மிகுந்த திறமையும் பலமுமுள்ளவன் ; பல போர்செய்து வெற்றி பெற்ருன். இவன் சேர மன்னருடைய கப்பற்படையை அழித்தான். சாளுக்கியர் பல்லவர்களிடமிருந்து பிடித்துக்



கொண்ட வெங்கியைக் கைப்பற்றினுன். பாண்டியநாடும் இவனுக்குக் கீழ்ப்பட்டது. பின்னல் கலிங்கத்தையும் அவன் வென்று பிடித்துக் கொண்டான். ஆகவே, இவன் காலத்தில் தமிழ்நாடு முழுதும், மைசூரின் பெரும்பாகமும் சோழ நாட்டில் அடங்கி யிருந்தன. இராஜ ராஜசோழன் சைவ சம

யத்தைச் சேர்ந்தவன். எனினும் பிற மதத்தினரை வெறுக்காமல் பாதுகாத்து வந்தான். தஞ்சாவூரிலுள்ள புகழ்பெற்ற **பிரகதீசுவரர்** ஆலயம் கி. பி. 1000-இல் அவனால் கட்டப்பட்டது. மேலும் அவன் நாகப்பட்டினத்தில் பௌத்தர்களுக்கும் ஒரு கோவில் கட்டிக் கொடுத்தான்.

**இராஜேந்திர சோழன் :—** இராஜராஜ சோழனுக்குப் பின் அவன் மகன் இராஜேந்திர சோழ தேவன் பட்டத்தை அடைந்தான். அவனும் வீரமுடையவன். அவன் அந்தமான் முதலிய தீவுகளைப் பிடித்துக்கொண்டான். பர்மா தேசத்திற்கு அவன் சென்று போர் செய்து, தென் பர்மாவை வென்று **பெகு** என்ற பட்டினத்தில் தனது வெற்றிக்கு அறிகுறியாக இரண்டு கற்றூண்கள் நாட்டினான். அவன் வடக்கே கங்கை வரை சென்று வெற்றியுடன் திரும்பியதால், அவனுக்குக் **கங்கைகொண்ட சோழன்** என்னும் பெயர் ஏற்பட்டது. தமது வெற்றியின் குறியாக அவன் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் **கங்கை கொண்ட சோழபுரம்** என்ற நகரை அமைத்தான். பாண்டியநாடும் அவனுக்குக் கீழ்ப் படிந்தது.

**இராஜேந்திர குலோத்துங்க சோழன் :—** குலோத்துங்க சோழன், கங்கைகொண்ட சோழன், மகள் **அம்மங்காதேவி**க்கும் சாளுக்கிய மன்னனான ராஜ ராஜ நரேந்திரனுக்கும் பிறந்தவன். அவன் காலத்தில் சாளுக்கிய

ராஜ்யம் சோழ ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது. அவன் 1070-முதல் 1118-வரை அரசு புரிந்தான். தென்னிந்தியா முழுவதையும் கைப்பற்றி சக்கரவர்த்தி பட்டமும் பெற்றான். கலிங்க நாட்டையும் பிடித்தான். இதைப்பற்றிய கதை **கலிங்கத்துப் பரணி** என்ற **தமிழ்** நூலில் கூறப்பட்டுள்ளது.

### கேள்விகள்

1. சேர நாட்டைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.
2. பாண்டிய நாட்டைப் பற்றிச் சுருக்கிச் சொல்லு.
3. கரிகால்சோழனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
4. கலிங்கத்துப்பரணியில் கூறப்பட்ட மன்னன் யாவன்?

அவனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?

### பயிற்சி

ஔவையார், குருவி, சோழன், வீரன், பல்லிகள் இவை ஒவ்வொன்றும் என்ன திணை?

### இலக்கணம் : பால் :

பால் என்பது பிரிவு அல்லது பகுப்பு. பெயர்ச்சொல்லில் **ஐந்து** பால்கள் உண்டு.

1. **ஆண்பால்** : ஓர் ஆணைக் குறிப்பது : இராமன்.
2. **பெண்பால்** : ஒரு பெண்ணைக் குறிப்பது: சீதை.
3. **பலர்பால்** : பலரைக் குறிப்பது : மனிதர்கள்.
4. **ஒன்றன்பால்** : ஒரு பொருளைக் குறிப்பது : மரம்
5. **பலவின்பால்** : பல பொருள்களைக் குறிப்பது மரங்கள்.

இந்த ஐந்து பால்களுள், முதல் மூன்றும் உயர்திணையைச் சேர்ந்தவை. மற்ற இரண்டும் அஃறிணையைச் சேர்ந்தவை.

# 11. திமிங்கிலம்

| | | |
|---|---|---|
| எண்ணெய் | மூச்சுக்காற்று | புழுபூச்சி |
| சிறுத்து | பீச்சுங்குழாய் | வலைஞர் |
| பருத்து | ஐம்பது | மிதக்கும் |
| துடுப்பு | விலங்குகள் | ஒவ்வொன்றாக |
| கடைவாய் | முப்பது | இடையூறு |

விலங்குகளில் திமிங்கிலத்தைப் போன்றது வேறு ஒன்றுமில்லை. இது ஏறக்குறைய நூறடி நீளமும், இருபத்தைந்து அடி உயரமும் உள்ளது. இது வசிப்பதற்குத் தகுந்த இடம் கடலே யாகும்.

மக்கள் பண்டைக்காலத்தில் திமிங்கிலத்தை மிகுதியாகப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். திமிங்கிலத்தின் உடம்பின்மேல் கொழுப்பு அடை அடையாகப் படிந்திருக்கும். அவ்வடையை உருக்கினால் அதிலிருந்து எண்ணெய் வடியும். ஒரு திமிங்கிலத்திலிருந்து ஏறக்குறைய ஐம்பது பீப்பாய் எண்ணெய் எடுக்கலாம். மண் எண்ணெய் கண்டு பிடிக்கப்படாத முற்காலத்தில், ஐரோப்பியர்கள் திமிங்கிலத்தின் எண்ணெயையே விளக்கு எரிக்கப் பயன்படுத்தி வந்தார்கள். இக்காலத்தில் மண்ணெண்ணெய் இருப்பதாலும் வரவரத் திமிங்கிலங்கள் குறைந்துவிட்டதாலும் திமிங்கிலத்தைப் பிடிப்பவர்களுக்குப்

பல இடையூறுகள் நேர்வதனாலும் இப்பொழுது திமிங்கிலம் பிடிக்கும் வழக்கம் மிகுதியாக இல்லை.

திமிங்கிலத்தின் உடம்பு மீனின் உடம்பைப் போல் நீண்டு உருண்டிருக்கும். அதன் வால் பக்கம் சிறுத்தும் தலைப்பக்கம் பருத்தும் தலையின் முன் பக்கம் குறுகியும் இருக்கும். இதன் உடம்பு மெதுவாகவும் வழவழப்பாகவும் இருப்பதால், இது தண்ணீரில் எளிதாக நீந்திச் செல்கிறது. நீந்திச் செல்வதற்குத் தகுதியாக மீனைப்போல் இரண்டு



கைத்துடுப்புகளும் பிளவுபட்ட ஒரு பெரிய வால் துடுப்பும் இருக்கின்றன. இது வால் துடுப்பினால் தண்ணீரை அடித்துக்கொண்டு

விரைவாக நீந்திச் செல்லும். இதன் கைத் துடுப்புக்கள் நீரின் மேற்புறத்திற்கு வரவும் அடிப்புறத்திற்குச் செல்லவும் உதவி செய் கின்றன. மீனைப்போல் திமிங்கிலத்திற்கும் வெளிக் காதுகள் இல்லை. தன் கண்கள், மிக வும் சிறியனவாய்க் கடைவாய்ப் பற்களின் பக்கம் அமைந்திருக்கும்.

திமிங்கிலம் மூக்கினுலேயே மூச்சுவிடும். அதற்கு மூக்குத் தொளைகள் தலையின் மேல் புறத்தில் இருக்கின்றன. ஆதலால், இது மூச்சு விடும்பொழுது தலையின் உச்சியை மட்டிலும் நீரின் மேல்மட்டத்திற்குக் கொண்டுவந்து மூச்சுவிடும். திமிங்கிலத்தின் மூச்சுக் காற்று குளிர்ந்திருக்கும். அது திடீ ரென்று மூச்சு விடும்போது பீச்சுங்குழாயின் நீர்போல் ஐம்பதடி உயரம்வரை நீர் எழும் பும். அதனுல் பேரொலி உண்டாகும். அவ் வோசை சுமார் பத்து மைல் தூரம் வரையி லும் கேட்கும்.

திமிங்கிலம் எப்பொழுதும் நீரிலேயே தங்கியிருக்கும். திமிங்கிலம் நீரில் வாழும் பொருட்டே அதன் உடல் மீனைப்போல் அமைந்திருக்கின்றது. அதன் உடம்பின் அளவுக்குத் தக்கவாறே வாயும் ஏறக்குறைய முப்பதடி நீளம் பெரிதாக அகன்று இருக்கின் றது. இருந்தும் அதன் வாயில் பற்கள் ஒன்று இரண்டுகூட இல்லை. ஆகையால் அதற்கு இரையைப் பிடிக்கவாவது, துண்டிக்கவா

வது, கடிக்கவாவது, மெல்லவாவது முடியாது. மீன்களைப்போல் இரையைப் பிடிப்பதற்கும் பிடித்த இரையைத் தவறவிடாமல் வாயில் நிறுத்திக்கொண்டு விழுங்குவதற்கும் பற்கள் இல்லாமையால், இது மற்றப் பிராணிகளைப் போல் ஓடியாடி உணவு தேடித் தின்பதில்லை.

திமிங்கிலம் தனக்கு உணவு வேண்டுமென்று நினைக்கும்போது தன் வாயை அகலமாகத் திறக்கும். அப்பொழுது கடல் நீர் அதன் வாய்க்குள் புகுந்து நிரம்பும். நிரம்பியவுடன் அது தன் வாயை மூடிக்கொள்ளும். வாயிற்புகுந்த நீருக்குள் கடலில் மிதந்தும் நீந்தியும் திரிகின்ற மீன், புழு, பூச்சி ஆகியவை இருக்கும். வாயை மூடியவுடன் வாய்க்குள் இருக்கும் நீர், பக்கத்தின் வழியே வெளியில் வந்துவிடும். அந்நீரில் உள்ள பிராணிகள் மட்டிலும் வாய்க்குள் அகப்பட்டுக்கொள்ளும்; அவற்றைத் திமிங்கிலம் அப்படியே விழுங்கிவிடும். ஆகையால், திமிங்கிலத்திற்கு இரையைப் பிடிப்பதற்கு நகங்களோ பற்களோ வேண்டியதில்லை.

திமிங்கிலம் ஒரு தடவையில் ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் போடும்; குட்டிகளுக்குப் பால் ஊட்டி வளர்க்கும். அது தன் குட்டிகளின்மீது மிகவும் அன்புடையது. வலைஞர் தன் குட்டிகளைப் பிடிக்க வந்தால், அது மிகவும் சினமுற்றுத் தன் உயிரையும்

பொருட்படுத்தாமல் தன் வால் துடுப்பினுல் அடித்து அவர்களைக் கொன்றுவிடும். திமிங்கிலம் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து வாழும். அவை இராக்காலங்களில் கடலின் மேற்புறத்தை அடைந்து, ஒன்றோடு ஒன்று துடுப்புக்களால் அடித்துக்கொண்டு விளையாடும். இவ்வாறு விளையாடுவதனுல் உண்டாகும் ஓசை நாலைந்து மைல்கள் தூரம் கேட்கும். இத்தகைய ஓசையைக் கேட்டே வலை வீசுவோர் திமிங்கிலம் இருக்கும் இடத்தை உணர்ந்து செல்வார்கள்.

திமிங்கிலத்தை மீன் பிடிப்பதுபோல் வலை போட்டு பிடிக்க இயலாது. இரும்புக் கம்பிகளால் நெய்யப்பட்ட வலையாயிருப்பினும், அதனைச் சிதைத்துவிடத் தக்க ஆற்றல் திமிங்கிலத்திற்கு உண்டு. ஆகையால், அது சுவாசிக்கும் பொருட்டு மேலே வந்திருக்கும் போது, அதனை ஈட்டிகளாற் குத்திக் காயம் பண்ணுவார்கள். ஈட்டிகளாற் புண்பட்ட திமிங்கிலம் சில நாட்களுக்குள் அப் புண்களால் .வருந்தி இறந்து கடலில் மிதக்கும். அப்பொழுது அதனைத் துண்டு துண்டாக வெட்டிக் கப்பலில் ஏற்றிக்கொண்டு போவார்கள். ஈட்டியால் குத்தும்பொழுது திமிங்கிலம் வலி பொறுக்கமாட்டாமல்,

தனது துடுப்பினால் ஓங்கி அடிக்கும். அதனால் கப்பலும் தூள்தூளாக உடைந்து விடும்; மக்களும் கடலில் முழுகி இறந்துவிடுவார்கள்.

## கேள்விகள்

1. திமிங்கிலத்தால் மனிதர்களுக்கு என்ன பயன்?
2. திமிங்கிலம் எப்படி மூச்சு விடுகிறது?
3. திமிங்கிலம் எவ்வாறு இரை தின்கிறது?
4. திமிங்கிலத்தை வேட்டையாடுவது எப்படி?

## இலக்கணம் (எண்)

எண் என்பது பொருள்களின் எண்ணிக்கை. அது **ஒருமை பன்மை** என இருவகைப்படும். ஒன்றைக் குறிப்பது ஒருமை. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை. **ஒருமை** - மரம்; **பன்மை** - மரங்கள்.

## பயிற்சி

இப்பாடத்திலிருந்து ஐந்து ஒருமைப் பெயர்களும் ஐந்து பன்மைப் பெயர்களும் எடுத்தெழுது.



# 12. திருவள்ளுவர்

| | | |
|---|---|---|
| செய்திகள் | மதி | பெண்டாட்டி |
| மகவு | கொண்டான் | பெருமதிப்பு |

இங்கே தோன்றும் படத்தைப் பாருங்கள். இதில் உள்ளவர் திருவள்ளுவர். இவரைப்பற்றி நீங்கள் முன் வகுப்பிலும் படித்திருக்கிறீர்கள். மேலும் இவரைப்பற்றி அறியவேண்டிய செய்திகள் பலவுண்டு. கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோரைப் பற்றிப் படிக்கப் படிக்க நம் வாழ்க்கை திருந்துமல்லவா!

இவருடைய தந்தையார் **பகவன்.** தாயார் **ஆதி.** இவர்கள் தமது பிள்ளையை இளமை யிலேயே விட்டுப் பிரிந்தனர். அம்மகவை

எடுத்து வளர்த்தவர் ஒரு வள்ளுவர். வள்ளுவர் மனையில் வளர்ந்த வள்ளுவர் வயது ஏற ஏற மதி சிறந்து விளங்கினார். தமிழ் மொழியில் தனித் திறமை பெற்றிருந்தார். இளமையிலேயே புலவர் என மதிப்பும் பெற்றார்.

திருவள்ளுவரின் மனைவியார் வாசுகியம்மையார். அவ்வம்மையார் கொண்டான் குறிப்பறிந் தொழுகும் பெண்டாட்டியாக ஒத்து இன்ப வாழ்வு நடத்தினார்.

திருவள்ளுவர் தமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருளை நெசவுத் தொழில் செய்து தேடிக் கொண்டார்.

"செய்யும் தொழிலனைத்தும் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யும் தொழிற்கு நிகரில்லை—வையகத்தில்
தெள்ளு தமிழ் வேதம் செப்பியநாள் சீர்படுத்தும்
வள்ளுவர் கொண்டதல்ல வா!"

என்பது பாட்டு.

திருவள்ளுவரால் செய்யப்பட்டது திருக்குறள் என்னும் நூல்; அது சிறந்த நீதி நூல்; மற்ற நீதி நூல்கள் பலவற்றிலும் மேலானதென்று சங்கப் புலவர்கள் பலரும் பாராட்டிப் பேசும் தகுதி வாய்ந்தது. கம்பர் முதலிய பெரும் புலவர்களும் திருக்குறள் செய்யுட்களை எடுத்துக் கையாண்டிருக்கிறார்கள். திருக்குறள் எல்லாக் காலத்துக்கும் எல்லா நாட்டுக்கும் எல்லா மதங்களுக்

கும் பொதுவானது. அது எல்லா மொழியி லும் பெயர்த் தெழுதப்பட்டுள்ளது.

திருக்குறளைப் பற்றிச் சங்கப் புலவர் ஒருவர் கூறிய பா ஒன்றை இங்கே தருவோம்;

மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்து அளந்தான்—வாலறிவின்
வள்ளுவரும் தம் குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாம்அளந்தார் ஓர்ந்து (பரணர்)

இப்படிப்பட்ட அரிய நூலை வள்ளுவர் செய்த தனுல் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தமி ழாக்கும் தனிப் பெருமை விளைந்தது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருவள்ளு வர்க்குத் திருமயிலையில் கோயில் ஒன்று அமைந்துள்ளது.

### கேள்விகள்

1. பெரியார் வரலாறு படிப்பதால் பயன் என்ன ?
2. கைத்தொழிலில் சிறந்தது எது ?
3. திருக்குறள் சிறந்த நூல் என்பது எப்படி ?
4. திருவள்ளுவர்க்குக் கோயில் எங்குள்ளது ?

### பயிற்சி

கோடிட்ட இடத்தில் ஏற்ற சொல் அமைக்க :—

1. திருவள்ளுவரின் மனைவியார் ——
2. திருவள்ளுவர் —— பரிசில் பெற்று வாழவில்லை.
3. செய்யும் தொழிற்கு ——
4. —— திருமயிலையில் கோயில் ஒன்றுண்டு.

### இலக்கணம்

### வேற்றுமை

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை. அது எட்டு வகைப்படும். வேற்றுமையைக் குறிப்பது **உருபு**.

1. **முதல் வேற்றுமை:** உருபு இல்லை. அரசன், பழம்.

2. **இரண்டாம் வேற்றுமை :** ஐ - உருபு : . இராமனை, பழத்தை.

3. **மூன்றும் வேற்றுமை :** ஆல், ஓடு - உருபுகள் : காலால், அரசனோடு.

4. **நான்காம் வேற்றுமை :** கு - உருபு : மூளைக்கு.

5. **ஐந்தாம் வேற்றுமை :** இன் - உருபு : முருகனின்.

6. **ஆறும் வேற்றுமை :** அது - உருபு : கண்ணனது.

7. **ஏழாம் வேற்றுமை :** இல் - உருபு : பெட்டியில்.

8. **எட்டாம் வேற்றுமை :** உருபு : இல்லை. .விளித்தல். கந்தா, கண்ணு, அரசே, மக்காள்.

---

# 13. வீடு கட்டுதல்

| | | |
|---|---|---|
| **அஸ்திவாரம்** | **ரஸ்தா** | **சம்மட்டி** |
| **பிறவிகள்** | **ஆரோக்கியம்** | **காளவாய்** |
| **சீதோஷ்ணம்** | **உத்திரம்** | **கழுகு** |
| **வயிரம்** | **கரையான்** | **கிரகித்து** |

உயிருள்ள பிறவிகள் எல்லாம் தூங்கும். தூங்கவும் இளைப்பாறவும் அவற்றிற்கு இடம் வேண்டும். விலங்குகளில் சிங்கம். கரடி முதலியவை குகைகளில் வசிக்கின்றன. நரி, ஓநாய் முதலியன புதர்களில் வாழ்கின்றன. பாம்பும் எறும்பும் புற்றுகளிலும், எலி வளைகளிலும் வசிக்கின்றன. பறவைகள் சில கூடுகளில் உறைகின்றன.

மனிதன் நாகரிகமற்றுக் காட்டில் திரிந்து கொண்டிருந்தபொழுது குரங்குகளைப்போல் மரங்களிலும் குகைகளிலும் வசித்து வந்தான்.

பிறகு, தனக்கு உணவையும் தேடிக்கொண்டு பல இடங்கட்குப் போக வேண்டி யிருந்ததால், **கூடாரம்** அமைத்து வசித்து வந்தான். பிறகு வர வர மனிதனுக்கு நிலையாக ஓர் இடத்தில் வசிக்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டதால் **வீடுகள்** கட்டிக்கொண்டான்.

இவ்வீடுகள் இடத்திற்கு ஏற்றவாறும் நாகரிகத்திற்குத் தகுந்தபடியும் அமைந்திருக்கின்றன. வீடு வெயில், பனி, மழை முதலியவற்றைத் தடுக்கவேண்டும். மனிதன் நோயற்று வாழ நல்ல காற்றோட்டம் உள்ளவையாயும் ஈரமில்லாதவையாயும் அவை இருக்க வேண்டும். வீட்டில் குளிக்கவும் குடிக்கவும் நீர் தரும் கிணறு இருக்கவேண்டும். சூரிய வெளிச்சம் உள்ள இடத்தில் வீடு கட்டவேண்டும். இயந்திரசாலைகள் கூளவாய்கள், சுடுகாடு இவைகளுக்குப் பக்கத்தில் வீடு கட்டக்கூடாது. வீட்டினருகில் சில மரங்கள் இருப்பது நலம்.

வீடுகள் அந்தந்த நாட்டின் வெப்ப தட்ப நிலைக்கு ஏற்றவாறு கட்டப்படுகின்றன. வீடு கட்டப் பயன்படும் பொருள்கள் நெடுநாள் கெடாதனவாய் இருக்க வேண்டும். வீடுகள் கட்டுவதற்குச் செங்கல், கருங்கல், சுண்ணும்பு, மணல், சிமெண்டு, மரம், இரும்பு முதலியன வேண்டும். ஜப்பான்

முதலிய விடங்களில் மூங்கிலாலும் காகிதத்தினாலும் வீடுகள் கட்டிக்கொள்ளுகிறார்கள்.

**வீடு கட்டுவதற்குப் பயன்படும் பொருள்கள்**

வீடுகளில் உத்தரங்களும், கதவுகளும், நிலைகளும் பெரும்பாலும் மரங்களால் செய்யப்படுபவை. மரங்கள் அவைகளின் உறுதிக்குத் தகுந்தவாறு பயன்படும். கோங்கு, வேங்கை, இலுப்பை ஆகியவை உறுதியான மரங்கள். இம்மரங்களை உத்தரங்களுக்குப் பயன்படுத்தலாம். ஆனால், பெரிய மாடிகள் கொண்ட கட்டிடங்கள் கட்டும் பொழுது இரும்பு விட்டங்களை உத்தரமாக உபயோகித்தலே நன்று.

கதவுகளுக்குப் பலகைகளை உபயோகிக்கிறார்கள். அவைகள் தேக்கு, வேம்பு, தோதகத்தி, மாமரம் முதலியனவாம். ஆனால், தோதகத்தி விலையுயர்ந்தது. ஆகையால், அதற்குப் பதிலாகத் தேக்குமரத்தை உபயோகிக்கலாம். அதைக் கரையான் அரிக்காது. மாம் பலகையில் சீக்கிரம் கரையான் பிடித்துவிடும்.

**வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய கற்கள்**

வீடு கட்டுவதற்குச் செங்கற்கள், மிகவாக வேண்டியிருக்கும். செங்கல்லால் கட்டப்படும் கட்டிடங்கள் கோடைக் காலத்தில் அதிக வெப்பமில்லாமலும் குளிர்காலத்தில்

அதிகக் குளிர்ச்சியில்லாமலும் இருக்கும். களிமண்ணைக் குழைத்துச் செங்கல் செய்து, உலர வைத்துச் சூளையில் சுடுகிறார்கள். செங்கல் கருங்கல்லைப்போல் கடினமில்லாததனால் அடிவாரங்களுக்குப் பயன்படுவதில்லை.

மலைப்பாங்கான இடங்களில் கருங்கல் மிகவாகக் கிடைப்பதனால், அதைக் கொண்டே வீடு கட்டுகிறார்கள். ஆனால், கருங்கல் வீடுகள் மிக வெப்பமாயிருக்கும். அவை குளிர் நாடுகளுக்கு ஏற்றவை. வீடுகள் கட்டக்கூடிய கற்கள் பலவகைப்படும். அவை கடப்பைக்கல், கருங்கல், மரக்கல், சலவைக்கல், மணற்கல், செந்நிறக்கல் முதலியன.

## வீட்டின் வெளிச்சம்

மனிதனுக்கு வெளிச்சம் அவசியமென்பது எல்லோருக்கும் தெரியும். வீடுகளில் சூரிய வெளிச்சம் அதிகம் இருந்தால் பிணிகள் அணுகா. ஆகையால், வீடு கட்டும்பொழுது நேர் நேராகப் பெரிய ஜன்னல்கள் அமைத்தல் வேண்டும். பகலில் சூரிய வெளிச்சமே போதுமானது. ஆனால், இரவில் நிலவு வெளிச்சம் மட்டும் போதாது. மேலும் சில நாட்களில் நிலவின் வெளிச்சம் கிடையாது. ஆகையால், இரவில் விளக்கு வெளிச்சத்தை உண்டாக்கிக் கொள்ளுகிறோம்.

பிறகு, எண்ணெயின் உபயோகத்தினுல் விளக்குகள் ஏற்பட்டன. சமுத்திரக் கரை ஓரங்களிலுள்ள மேல்நாட்டு ஊர்களில் திமிங்கிலம் முதலிய பெரிய மீன்களின் கொழுப்பினுல் விளக்கு எரித்தார்கள். நம் தேசத்தில் நல்லெண்ணெய் விளக்கெண்ணெய்களைப் போட்டுத் திரியை வைத்து விளக்குகளை எரிக்கிருேம். இவைகளின் வெளிச்சம் குறைவுதான். புகையும் படியும்; சில வேளைகளில் தீ விபத்தும் ஏற்படும்.

மண்ணெண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், ஏராளமாக மண்ணெண்ணெய் விளக்குகளே பயன்படுத்தப்படுகின்றன.

இப்பொழுது **மின்சார** விளக்கு கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் **பல்பு**களில் காற்று இல்லை. உள்ளிருக்கும் மெல்லிய கம்பியின் வழியாக மின்சார சக்தி செல்லும் பொழுது காய்ந்து ஒளி செய்கிறது. இதனுல் தீயும் புகையும் உண்டாவதில்லை.

**கேள்விகள்**

1. வீடு கட்டுவதற்குவேண்டிய பொருள்கள் எவை ?
2. பண்டைக்காலத்தில் மனிதன்வசித்த வீட்டிற்கும் இப்பொழுது மனிதன் வசிக்கும் வீட்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.
3. வீடு கட்டுவதில் மரங்களின் பயன் யாது ?
4. செங்கல்லாலும் கருங்கல்லாலும் உண்டாகும் நன்மை தீமைகளை எழுது.
5. வீடு கட்டப் பயன்படும் கற்கள் எவை ?
6. பண்டைக் காலத்தில் இரவில் வெளிச்சமுண்டாக்க என்ன செய்தார்கள் ?

### இலக்கணம்

### வினைச்சொல்

தொழிலைக் குறித்து, காலத்தை உணர்த்துவது வினைச் சொல் எனப்படும். (வினை - தொழில்)

வினைச்சொல், முற்றுவினை, எச்சவினை என இரு வகைப்படும்.

1. **வினை முற்று**- பொருள் முடிந்து நிற்கும் வினைச் சொல் (அரசன்) **வந்தான்** (மாடு) **மேய்கின்றது.**

2. **எச்சவினை-நடந்த** (மனிதன்) **ஓடுகின்ற** (குதிரை) இவை பெயரைக்கொண்டு முடிவதால் **பெயரெச்சமாம்.**

3. **நடந்து** (வந்தேன்) **எடுத்து** (விட்டேன்) இவை வினையைக் கொண்டு முடிவதால் **வினையெச்சமாம்.**

### பயிற்சி

இப்பாடத்திலிருந்து இம்மூன்று வினைமுற்று, பெயரெச்சம் வினையெச்சங்களை எடுத்தெழுது.

---

## 14. கடிதங்கள்

| | | |
|---|---|---|
| பாலசுந்தரன் | தள்ளுபடி | பத்திரிகை |
| பயிலாதவன் | தாராளம் | பஞ்ச தந்திரம் |
| பகற்பொழுது | பரீக்ஷை | துணைப்படை |

1

தந்தை மகனுக்கு எழுதுவது :—

‘திருமலை நிலையம்’

மணிமங்கலம்,

29—12—’50.

செல்வச் சிறுவன் M. N. பாலசுந்தரனுக்கு,

பெரிதும் நன்மை உண்டாகுக. இவ்விடம் யாவரும் நலம். அவ்விடம் உள்ள எல்லாருடைய நலனையும் அறிய மிக விரும்பு

கிறேன். கண்டவர்களுடைய நேசம் வைத்துக் கொள்ளாதே. ஒழுக்கமுள்ளவர்களுடன் நட்புக்கொள். காலத்தை வீணுகச் செல விடாதே.

முடிவு பரீக்ஷை விரைவில் வரப் போகிறது. நீ நன்ருகப் படித்து, அதிக மார்க்குகள் பெற்றுத் தேறவேண்டும்; உன் தம்பி குலசேகரனும் பரீக்ஷையில் தேறுமாறு செய்.

நல்ல தமிழ் நூல்களைப் படிக்கும் பழக்கத்தைக் கைவிடாதே. தாய் மொழியைப் பயிலாதவன் தாயிடம் நன்றி மறந்தவனுவான். தம்பிக்கும் தமிழில் பற்று ஏற்படுமாறு செய்.

இப்படிக்கு,
உன் அன்பான தந்தை,
**முத்து கண்ணப்ப முதலியார்.**

2

மகன் தந்தைக்கு எழுதுவது :—

53, நம்மாழ்வார் தெரு, சென்னை.
1—12—'50.

அன்பு நிறைந்த தந்தையவர்களுக்கு,

மிக வணக்கம். தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. இவ்விடம் யாவரும் நலமாகவே இருக்கிருேம். தாங்கள் எழுதியுள்ளபடியெல்லா வகையிலும் நடந்துகொள்ளுகிருேம்.

நானும் தம்பியும் கருத்துடனே படித்து வருகிருேம். போனவாரம் நடந்த வகுப்புத்

தேர்வில் நான்தான் முதலாகத் தேறினேன். தம்பியின் வகுப்பு ஆசிரியர், இவ்வருஷம் அவனுக்குப் பரிசு கிடைக்கும் என்று சொல்லுகிறார்.

தாங்கள் வரும்போது எனக்கு 'மனோன் மணீய வசனம்' மறக்காமல் வாங்கி வாருங் கள். தம்பிக்கு ஒரு 'பஞ்சதந்திர வசனம்' வாங்கி வாருங்கள்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள மைந்தன்,
**M. N. பாலசுந்தரன்.**

விலாசம் :—

**திருவாளர் முத்து - கண்ணப்ப முதலியார்,**
தலைவர் ஐக்கிய நாணயச் சங்கம்,
'திருமலை நிலையம்'
பிள்ளையார் கோயில் தெரு,
மணிமங்கலம், செங்கற்பட்டு ஜில்லா.

3

**அழைப்புக் கடிதம் :—**

61, தம்பு செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.
28—12—51.

நண்பன் துளசிங்கனுக்கு, வணக்கம். நலம்.

என் தந்தையார் சட்டசபை அங்கத்தின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு, அவர் தம் நண்பர்களுக்கு ஒரு விருந்து நடத் தப்போகிறார். அவ்விருந்து 5—1—52-ல் எங்கள் வீட்டில், மாலை 5-மணிக்கு நடை

பெறும். அவ்விருந்துக்கு மறந்துவிடாமல் வரவும்.

விலாசம் :—

**துளசிங்கம்,**
19, வேங்கடேச பத்தன் தெரு,
வேப்பேரி போஸ்டு,
சென்னை.

உன் நண்பன்.
**குபேந்திரன்.**

4

**வியாபாரக் கடிதம் :—**

M. துரைசாமி முதலியார் அண்டு சன்ஸ்,
சென்னை, 27-12-'50.

இ. மா. கோபாலக் கிருஷ்ணக் கோனார்,
மதுரை.

ஐயா,

அடியிற்கண்ட நூல் வரிசைகள், ஒவ்வொன்றிலும் நூறு, அனுப்புங்கள் : இப்புத்தகங்கள் சில நூல் நிலையங்களுக்குப் பரிசாகத் தரவேண்டி வாங்குகிறேன். ஆதலால், விலையில் எவ்வளவு அதிகம் தள்ளித் தர முடியுமோ அவ்வளவும் தள்ளிக் கொடுத்தால் நலமாயிருக்கும்.

1. சிவஞான சித்தியார்—
இருவர் உரை. 100.

2. தருக்க சங்கிரகம் உரையுடன் -
(யாழ்ப்பாணத்துப் பதிப்பு) 100.

3. திருக்குறள் - பரிமேலழகர் உரை
(உங்கள் பதிப்பு) 100.

4. நாலுற்பது - உரையுடன் -
(உங்கள் பதிப்பு) 100.

5. குமரகுருபரர் பிரபந்தம்
(உங்கள் பதிப்பு) 100.

இப்படிக்கு,
**ம. துரைசாமி அண்டு சன்ஸ்,**
புஸ்தக வியாபாரிகள்,
1, மலையபெருமாள் தெரு, சென்னை.

விலாசம் :—

**திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனர் அவர்கள்,**
புத்தக வியாபாரி,
மதுரை.

**பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம் :—**

59, ஆயலூர் முத்தையா முதலித் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.
27—10—'44.

சுதேசமித்திரன்,
பத்திரிகாசிரியர் அவர்களுக்கு,

ஐயா,

கீழ் வரும் செய்தியைத் தங்களுடைய பத்திரிகையில் நாளை வெளியீட்டில் தயவு செய்து வெளியிடுமாறு வேண்டிக் கொள்ளு கிறேன்.

**கோ. சிவநேசன்,**
தலைவன், தமிழ்ச் சிறுவர் துணைப்படை,
ஜார்ஜ் டவுன், சென்னை.

## செய்தி

நாளை மாலை, 4-மணிக்குமேல் எஸ். ஐ. ஏ. ஏ. வெளியில், திருவாளர் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் சென்னை, ஜார்ஜ் டவுன் தமிழ்ச் சிறுவர் துணைப்படையினர் படைப் பயிற்சிகள் செய்து காட்டுவர்.

விலாசம் :—**ஆசிரியர்,**
"சுதேசமித்திரன்" மவுண்ட்ரோட், சென்னை.

### பயிற்சி

வெளியூர்க்குப் போயிருக்கும் தகப்பனுருக்கு மகன் வகுப்பு மாறியதைத் தெரிவிப்பதாகக் கடிதம் எழுது.

நீ பார்த்த கோயில் உற்சவத்தைப்பற்றிக் கிராமத்திலிருக்கும் உன் நண்பனுக்கு எழுதுவதுபோல ஒரு கடிதம் எழுது.

## இலக்கணம்

### காலம்

வினைச்சொல்லிலிருந்து காலம் அறியப்படும். காலம் என்பது தொழில் நடக்கும் பொழுதை அறிவிப்பதாகும். அது **இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்** என்று மூன்று ஆகும்.

**இறந்தகாலம் :** தொழில் நடந்ததைக் குறிப்பது : தம்பி பாடம் **படித்தான்.**

**நிகழ்காலம் :** தொழில் நடந்துகொண்டிருப்பதைத் தெரிவிப்பது : தம்பி பாடம் **படிக்கிறுன்.**

**எதிர்காலம் :** தொழில் இனி நடக்கப் போவதைத் தெரிவிப்பது : தம்பி பாடம் **படிப்பான்.**

வினைச்சொல்லின் இடையில் வரும் **த், ட், ற், இன்.** என்பவை இறந்தகாலத்தையும், **கின்று, கிறு** என்பவை நிகழ்காலத்தையும் **ப், வ்,** என்பவை எதிர்காலத்தையும் காட்டும் வினை இடை நிலைகளாம்.

# 15. காற்று

| | | |
|---|---|---|
| பொருட்செலவு | தூய்மை | நுரையீரல் |
| நச்சுக்காற்று | நவில்கின்றனர் | ஒருப்பாடு |
| அறிவீனம் | சாளரம் | துப்புரவு |
| க்ஷயரோகி | வரையறை | உமிழ் |
| முற்றம் | விரவுகின்றன | உறைவிடம் |
| வாடை | வைகறை | நிலவும் |

நாம் உயிர் வாழ்வதற்கு முதன்மையான துணையாயிருப்பன காற்று, தண்ணீர், உணவு ஆகிய மூன்றேயாகும். இம் மூன்றினுள் காற்று மிகவும் முதன்மையானதாகும். இந் நாளில் நகரங்களில் வாழ்கின்றவர்கள் நல்ல காற்றைப் பொருட்செலவின்றிப் பெறுதற்கு இயலவில்லை. அவர்கள் நல்ல காற்றைப் பெறும்பொருட்டுப் பொருளைச் செலவு செய்துகொண்டு வெளியூர்களுக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது.

நல்ல காற்று கிடைக்காவிட்டால் நாம் நோயற்ற வாழ்வு வாழமுடியாது. நமது உடலில் ஓடிக்கொண்டிருக்கின்ற இரத்தம், நுரையீரல்களினுல் தூய்மையடைகின்றது. நல்ல காற்று உட்சென்று நுரையீரல்களிற் படிந்து, உடலுக்குள் ஓடிக்கொண்டிருக் கின்ற இரத்தத்தில் உள்ள அசுத்தங்களை வெளியே கொண்டு வருகின்றது. ஆதலால், நாம் மூச்சுவிடுங் காற்றை நச்சுக்காற்று என்று கூறுகின்றனர்.

காற்ருேட்டம் இல்லாத அறைக்குள் அடைத்து வைக்கப்பட்ட ஒருவன் இறந்து விடுவதை நாம் காணலாம். அழுக்கு நீரை அருந்துவதற்கு நாம் அருவருப்படைகின்ருேம். சுவையற்ற கெட்ட உணவை நாம் வெறுக்கின்ருேம். அவைபோலவே கெட்ட காற்றைச் சுவாசிப்பதற்கு நாம் வெறுக்க வேண்டும். பிறரிடமிருந்து வெளிப்படும் மூச்சுக் காற்றை நாம் உட்கொள்ளுதல் கூடாது. இதை உணராமல், காற்ருேட்டமற்ற குறுகிய இடத்தில் பலர் ஒன்றுகூடியிருந்து, ஒருவர் வெளியிடுங் காற்றை மற்ருெருவர் சுவாசிப்பதைக் காண்கிருேம். இதைவிட அபாயகரமான செயல் வேருென்றுமில்லை.

காற்று மிக நுண்ணிய பொருளாகச் சிறு தொளையிலும் செல்லத் தக்கதா யிருக்கிறது. நமது அறையின் சாளரங்களை நாம் மூடிவிட்டாலும், கூறைக்கும் ஓட்டுக்கும் இடையில் உள்ள சந்திரன் வழியாக நல்ல காற்று உட்புகுந்து நாம உட்கொள்ளும் காற்றுடன் கலந்து, அதனைச் சிறிது துப்புரவு செய்கின்றது.

நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது பேருக்குப் பிணிவரக் காரணம் கெட்ட காற்றே. இதில் சிறிதும் ஐயம் இல்லை. வெட்ட வெளியில் வாழ்ந்து, நல்ல காற்றை உட்கொள்வோருக்குச் சாதாரணமாக நோய்

உண்டாவதில்லை. க்ஷயம் முதலிய கொடிய நோய்கள் நச்சுக்காற்றை உயிர்ப்பதனுலேயே உண்டாகின்றன. நகரங்களிலேயே க்ஷய ரோகிகள் மிகுந்திருக்கின்றனர். நாள் தோறும் நல்ல காற்று வீசும் வெட்ட வெளியில் வாழ்வதே க்ஷயரோகிக்குச் சிறந்த சிகிச்சையாகும் என மருத்துவர்கள் கூறுவதனுலும் இவ் வுண்மையை உணரலாம்.

நமது வீட்டில் உள்ள கக்கூசுகளை நாம் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். கக்கூசுக்குள் ஒரு பாத்திரத்தில் காய்ந்த மணலாவது உலர்ந்த சாம்பலாவது வைத்திருக்க வேண்டும். மலங் கழித்தவுடன், காய்ந்த மணலையோ சாம்பலையோ அகப்பையினுல் எடுத்து, மலத்தை மூடிவிட்டு வரவேண்டும். இவ்வாறு செய்வதனுல் அம் மலத்தின்மீது படிந்துவரும் கெட்ட காற்று நமது வீட்டின் உள்ளே நடமாடமுடியாது. ஈ, கொசுக்களினுலும் துன்பம் உண்டாகாது. நமது மலத்தை நாம் மூடிவிடுவதில் மானக்கேடு ஒன்றுமில்லை, கக்கூசில் அன்றி மலங்கழிக்க ஊருக்கு வெளியிற் செல்வோமாயின் நீண்ட தூரஞ் சென்று நாமே ஒரு சிறு குழியைத் தோண்டி அதில் மலங்கழித்தபின் அதனை மண்ணுல் மூடிவிட்டு வரவேண்டும். இவ்வாறு செய்யாததனுல் தான் கிராமங்களில் நோய்கள் பரவுகின்றன.

நினைத்த இடங்களில் எல்லாம் சிறு நீரைக் கழிப்பதனாலும் நாம் காற்றைக் கெடுத்து விடுகின்றோம். வீடுகளில் சிறுநீர் கழிப்பதற்கென ஓரிடம் இருப்பது நல்லது. நீர் கழித்தவுடன் அவ்விடத்தில் தண்ணீரை ஊற்றிச் சுத்தப்படுத்திவிட வேண்டும். அன்றி வெளியிற்சென்று நீர் கழிப்போமாயின் நன்றாய் உலர்ந்த இடத்தில் கழித்து அதனை மண்ணினால் மூடிவிடவேண்டும்.

நம்மவர்கள் நினைத்த இடங்களிலெல்லாம் எச்சில் உமிழ்கின்றனர். இது மிகவும் கெட்ட வழக்கமாகும். சிலர் வீடுகளின் திண்ணைகளிலும் முற்றங்களிலும் காறிக் காறித் துப்புகின்றனர். பலர் நடக்கும்போது தெருக்களிலும் உமிழ்கின்றனர். க்ஷயம்போன்ற நோயாளிகளின் எச்சிலாயிருப்பின், அதனால் பலருக்குத் துன்பம் நேர்கின்றது. அதிலுள்ள நச்சுப் பூச்சிகள் காற்றுடன் பரவுகின்றன. அக்காற்றை மற்றவர்கள் சுவாசிக்குங்கால், அப் பூச்சிகளும் அவர்கள் நுரையீரல்களிற் புகுந்து பிணிகளை வருவிக்கின்றன. ஆதலால், வீடுகளில் எச்சில் உமிழ்வதற்காக ஒரு பாத்திரம் வைத்திருப்பதே நலம். வெளியில் செல்கிறவர்கள் எச்சில் துப்பவேண்டுமாயின், காய்ந்த புழுதியுள்ள ஒதுக்கிடங்களில் உமிழவேண்டும். க்ஷய ரோகிகள் நச்சுப் பூச்சிகளைக் கொல்லும் மருந்திட்ட பாத்திரங்களிலேயே எச்சில் உமிழ வேண்டும்.

நாம் காற்றை உட்கொள்ளும்போது, வாயினால் உட்கொள்ளாமல் நாசியினாலேயே சுவாசிக்கவேண்டும். பலர் மூக்கினால் சுவாசிக்காமல் வாயினாலேயே சுவாசிக்கின்றனர். இங்ஙனம் வாயினால் சுவாசிப்பதனால் காற்றில் உள்ள தூசி அணுக்கள் நுரையீரலையடைந்து படிகின்றன. மூக்கினால் உயிர்ப்போமாயின் தூசியணுக்கள் உட்புகாமல் புறத்திலேயே தங்கிவிடுகின்றன. தூசியணுக்களைத் தடுப்பதற்கு அரிப்பு இயற்கையிலேயே நாசியினுள் அமைந்திருக்கின்றது. ஆகையால் ஒவ்வொருவரும் மூக்கினாலேயே மூச்சு விடவும் மூச்சிழுக்கவும் பழகிக்கொள்ள வேண்டும். அவ்வாறு பழகிக் கொள்வது துன்பமான செயலன்று. உரையாடுகின்ற சமயத்தைத் தவிர, மற்றைய நேரங்களில் வாயை நன்றாக மூடிக்கொள்வோமாயின், மூக்கினால் சுவாசிக்கும் பழக்கம் உண்டாகி விடும்.

பெருமூச்சு விடுவது மிகவும் நல்லது. காற்றைச் சிறிது நேரம் நெஞ்சில் தேங்க வைத்துப் பின்னர் நீளமாகவிடும் மூச்சே பெருமூச்சாகும். ஒவ்வொரு நாளும் காலை, மாலை இருகாலங்களிலும் நல்ல காற்றோட்டமுள்ள வெட்டவெளியில் நின்று குறைந்தது இருபது முறையேனும் பெருமூச்சு விட்டுப் பழகுதல் நல்லது. அவ்வாறு செய்

விட்டுப் பழகுதல் நல்லது. அவ்வாறு செய்வதனால் நெஞ்சு விரிந்து கனமடையும். இப்பயிற்சி எல்லோராலும் எளிதிற் செய்யக் கூடியதாகும்.

நாம் எப்பொழுதும் சுத்தமான காற்றையே சுவாசிக்க முயலவேண்டும். சிலர் பாழான காற்றோட்டமற்ற மூலைகளிலும் அறைகளிலும் படுத்து உறங்குகின்றனர். சிலர் வாடை வீசுகின்றது என்பதற்காகப் படுக்கையறையின் சாளரங்களை எல்லாம் காற்று நுழையாதபடி மூடிவிட்டு உறங்குகின்றனர். அவ்வாறு செய்தல் தவறாகும். வைகறையில் வீசும் குளிர்காற்றினால் நீர்க்கோவை யுண்டாகும் என்று கூறிச் சிலர் சாளரங்களை யெல்லாம் கெட்டியாக அடைத்துக்கொள்ளுகின்றனர். குளிர் காற்றைச் சுவாசித்துப் பழகாதவர்களுக்கு முதலில் நீர்க்கோவை யுண்டாவது இயல்பே. ஆனால், அதை எளிதாக அகற்றிக்கொள்ளலாம். எல்லாம் பழக்கத்தைப் பொருத்ததாகும்.

நமக்குள் பலர் முகத்தை நன்றாக மூடிக்கொண்டு உறங்குவதைக் காண்கிறோம். அவர்கள் மூடியிருக்குந் துணி காற்று நுழையாதபடி கெட்டியானதாயிருப்பின் இறந்தே விடுவார்கள். காற்று நுழையும்படியான இடை வெளியுள்ளதாக இருந்தால்தான் மூச்சுவிடவும் இழுக்கவும் முடியும். முகத்தை மூடிக்கொண்டு உறங்குகின்றவர்கள், தாங்கள் விடும் நச்சுக் காற்றையே மீண்டும் உட்

கொள்ளுகின்றனர். சிறிதளவே அதனுடன் உயிர்க் காற்று கலந்து செல்கின்றது. ஆதலால், முகத்தை மூடிக்கொண்டு உறங்கும் முறையை விடவேண்டும்.

எப்பொழுதும் வெளிச்சமுள்ள இடத்திலேயே வசிக்கவேண்டும். அவ்விடத்தில் தான் நல்ல காற்று இருக்கும். இருட்டறையில் உள்ள காற்று சுத்தமான காற்ருகாது.

பலவகையான தொத்து நோய்கள் உண்டாவதற்கெல்லாம் காரணம், நல்ல காற்றின்மையே. மேல்நாட்டு வைத்தியரிற் பலர் இக்காலத்தில் நோயாளிகளுக்கு வேறு மருந்துகள் கொடாமல் இயற்கையான காற்றைக் கொண்டும் வெளிச்சத்தைக் கொண்டுமே நோயைக் குணப்படுத்துகின்றனர். ஆகையால், நமது உறைவிடங்களை நல்ல காற்றும் போதிய வெளிச்சமும் உள்ளனவாகவே அமைத்துக்கொண்டு, உடல் நலத்துடன் நீண்ட நாள் வாழ முயலவேண்டும்.

## கேள்விகள்

1. சுத்தமான காற்றின் பயனைப்பற்றி உனக்கு என்ன தெரியும்?
2. கக்கூசைச் சுத்தமாக வைத்துக்கொள்வதைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.
3. எச்சிலால் நோய் பரவுவது எப்படி?

## பயிற்சி

சொல்கிறேன், சிரித்தாய், ஓடினர், எறிந்தேன்-இவ் வினைச்சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், காலம் கூறு.

### இலக்கணம்

வினைமுற்று - தன்மை வினைமுற்று. முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று என்று இடவகையால் மூன்றாகும்.

| | ஒருமை | பன்மை |
|---|---|---|
| **தன்மை வினைமுற்று:** | நான் சென்றேன். | நாங்கள் சென்றோம். |
| **முன்னிலை வினைமுற்று:** | நீ சென்றாய். | நீங்கள் சென்றீர்கள். |
| **படர்க்கை வினைமுற்று:** | அவன் சென்றான். அது சென்றது. இராமன் சென்றான். சீதை சென்றாள். | அவர்கள் சென்றார்கள். அவை சென்றன. மாடுகள் மேய்கின்றன. |

---

## 16. உழவன் சிறப்பு

நல்ல தேவாலயம் பூசனை நடப்பதும்
நாடோறும் மழை பொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
நவில் வேத வேதிய ரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தொல்புவி செழிக்கும் நலமும்
சுபசோப னங்களும் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்
வெல்லரிய சுகிர்த மொடு வர்த்தகர் கொள்விலையும்
விற்பனையும் அதிக புகழும்
மிக்க அதிகாரமும் தொழிலாளர் சீதனமும்
வீரர் ரண சூரர்வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவதன்றோ
மயிலேறி விளையாடு குகனே புல் வயல்நீடு
மலைமேவும் குமரேசனே.

—குமரேச சதகம்.

# 17. பச்சையப்ப முதலியார்

| | | |
|---|---|---|
| குடும்பத்தார் | ஆண்மகவு | வணிகத் துறை |
| வருமானம் | தருணம் | முன்னணி |
| பிறவிக்குணம் | நன்னடத்தை | பெருமை |
| நல்லொழுக்கம் | நற்குணம் | அலுவல் |
| ஆடம்பரம் | வருவாய் | கம்பீரம் |
| திருப்பணி | கலாசாலை | உருவம் |

தமிழ் நாட்டில் தொன்று தொட்டுச் சிறந்து விளங்கும் பெரு நகரங்களுள் காஞ்சீபுரம் ஒன்று. 'நகரங்களில் சிறந்தது காஞ்சி' என்று மகா கவி காளிதாசரும் கூறியுள்ளார். இந்தியாவிலுள்ள தலைமை பெற்ற ஏழு புண்ணிய ஸ்தலங்களில் காஞ்சீபுரம் ஒன்றுகும். இந்நகரம் பல ஆண்டுகள் பல்லவ மன்னர்களுக்குத் தலைநகரமாக விளங்கிற்று.

இந்நகரில் அநேக வருஷங்களுக்கு முன் **விசுவநாத முதலியார்** என்பவர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் மனைவியாருக்குப் **பூச்சியம்மாள்** என்று பெயர். இவர்கள் மிகுந்த செல்வம் படைத்த குடும்பத்தார் அல்லர்; தமக்குள் சொற்ப வருமானத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தார்கள். இவர்களுக்கு முதலில் இரண்டு பெண் மக்கள் பிறந்தனர். அதன் பின்பு பல ஆண்டுகள் கழிந்தும் ஆண் மகவு பிறக்கவில்லை. அதனுல் அவர்களுக்கு மனக்கவலை உண்டாயிற்று.

தங்கள் குறையைப் போக்குமாறு அவர்கள் இறைவனை வேண்டிக் கொண்டனர்.

ஆண்டவன் அருளால் அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கும் சமயம் நெருங்கியது. ஆனால் குழந்தை பிறப்பதற்குள் விசுவநாத முதலியார் இறந்துவிட்டார். கணவனையிழந்து, கதியற்றவளான பூச்சியம்மாள் உள்ளம் கலங்கினார். விசுவநாத முதலியார் தம் கையில் சிறிது பொருள் மிச்சமாக இருந்தாலும் அதைத் தரும காரியங்களில் செலவழித்து விடுவார். இவ்வாறு செய்வது அவர் பிறவிக்குணம் ஆதலின், அவர் இறந்த பின் ஏதும் மிச்சமில்லை.

பூச்சியம்மாள் தனது இரு பெண் மக்களையும் அழைத்துக்கொண்டு **பெரியபாளையம்** என்னும் ஊரையடைந்தார். அங்கு வாழ்ந்திருந்த, தனது கணவருக்கு நண்பரான **ரெட்டியார்** என்ற பிராமணருடைய உதவியை நாடினார். ரெட்டியார் நற்குணமும் நல்லொழுக்கமும் உடையவர். கொஞ்சம் செல்வமும் அவருக்கு உண்டு. அவர் பூச்சியம்மாளையும் அப்பெண் குழந்தைகளையும் அன்புடன் காப்பாற்றி வந்தார்.

இச்சமயம் பூச்சியம்மாளுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. ரெட்டியார், பிறந்த குழந்தைக்குப் **பச்சையப்பர்** என்று பெயரிடச் செய்தார்; அக்குடும்பத்தைக் கண்ணை இமை காப்பதுபோல் காப்பாற்றி வந்தார்.

ராயர் ஆதரவில் பச்சையப்பர் வளர்ந்து முறையாகக் கல்வி பயின்றார். சிறுபிராய முதற்கொண்டே பச்சையப்பருக்குக் கல்வி யில் மிகுந்த ஊக்கம் இருந்து வந்தது.

இங்ஙனம் பூச்சியம்மாள் சற்று கவலை நீங்கியிருக்கும் தருணத்தில் அவர்களை ஆத ரித்துவந்த ரெட்டியார் திடீரென மரண மடைந்தார். அதன்பின் அவ்வூரில் வசிக்க அம்மையாருக்கு விருப்பமில்லை. ஆகையால் அவர் தமது மூன்று குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சென்னைமா நகரை யடைந்தார். அக்காலத்தில் சென்னையில் **நாராயணப் பிள்ளை** என்னும் ஒரு பெரிய செல்வர் வாழ்ந்து வந்தார். அவர் தரும குண மும் நன்னடத்தையும் உள்ளவர் என்று கேள்வியுற்று, பூச்சியம்மாள் அவரைத் தஞ் சம் அடைந்தார்.

நாராயணப் பிள்ளை நற்குணம் நிறைந்த வர். அவர் பூச்சியம்மாளையும் அவருடைய மக்களையும் அன்புடன் காப்பாற்றி வந்தார். பூச்சியம்மாள் தம்மிடம் சொற்பமான பொருளை அவரிடம் கொடுத்து வைத்திருந் தார். பிள்ளையவர்கள் அந்தப் பணத்தை நல்ல லாபம் வரக்கூடிய வழியில் பயன்படுத் திக்கொண்டே வந்தார். பச்சையப்பரைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து முன்னுக்குக் கொண்டுவந்தார்.

பச்சையப்பருக்குப் படிப்பில் அளவு கடந்த ஊக்கம் பிறந்தது. அவர் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். கணிதத்தில் அவருக்குச் சிறந்த தேர்ச்சி ஏற்பட்டது. சுறுசுறுப்பு, உழைப்பு, பொறுமை, உண்மை, பெரியோரிடம் மரியாதை ஆகிய நற்குணங்கள் யாவும் அவரிடம் நிரம்பி விளங்கின. வணிகத் துறையில் விசேஷ விருப்பமும் ஊக்கமும் அவருக்கு இருந்தது.

முதன் முதலாக அவர் ஒரு சிறு பீங்கான் கடையில வேலைக்கு அமர்ந்தார். பின்னர் அக் கடையில் முதலாளியின் ஆதரவு பெற்று, அங்கேயே ஒரு தரகராக வேலை பார்த்து வந்தார். வர்த்தகத்தில் அவர் மிகவும் நாணயமுடையவராக இருந்ததால், பல வியாபாரிகளின் நட்பும் ஆதரவும் அவருக்குக் கிடைத்தன. பச்சையப்பர் சிறிது சிறிதாக வியாபாரத் துறையில் வளர்ந்து முன்னணிக்கு வந்தார்.

சென்னையில் அக்காலத்தில் சிறக்க வாழ்ந்த வியாபாரிகள் எல்லோருடைய நன்மதிப்பும் பெற்று நாணயமுள்ள ஒரு தரகராக விளங்கினர். பச்சையப்பர். இக்காலத்தில் அவருக்கு ஓர் இராணுவ உத்தியோகஸ்தருடைய நட்பு ஏற்பட்டது. ஐரோப்பியரான அவர் பச்சையப்பரிடம் அன்புகொண்டு, அவருக்கு ஒரு பெருமை வாய்ந்த அலுவல் கொடுத்

தார். பச்சையப்பர் இந்த வேலையிலிருப்பது நாராயணப் பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. இதை அவர் உணர்ந்து அதை விட்டு விலகிக்கொண்டார். அதன் பின் நாராயணப் பிள்ளை பச்சையப்பரை **நிக்கல்சன்** என்ற ஓர் ஐரோப்பிய அதிகாரியிடம் 'துவிபாஷி' வேலையில் அமர்த்தினார். துவிபாஷி என்பதற்கு இரண்டு மொழிகள் பேசத் தெரிந்தவர் என்பது பொருள்.

பச்சையப்பருக்கு நல்ல வருவாய் ஏற்பட்டது. அவருக்கு விவாகம் செய்துகொள்ளத் தக்க வயதும் ஆயிற்று. பூச்சியம்மாள் தம் குடும்ப போஷகரான நாராயணப் பிள்ளையுடன் கலந்து ஆலோசனை செய்து தன் மகள் வயிற்றில் பிறந்த பெண்ணுன **அய்யாளம்மாள்** என்பவளைப் பச்சையப்பருக்கு வாழ்க்கைப் படுத்துவது என்ற முடிவுக்கு வந்தார். தாய் சொல் தட்டாத தனையரும் அதற்கு இசைந்தார். வீண் ஆடம்பரச் செலவு சிறிதும் இல்லாமல் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

நாளடைவில் பச்சையப்பர் ஒரு பெரிய தனவந்தரானார். ஆயினும் அவருடைய கள்ளங்கபடமற்ற உள்ளம் ஆடம்பரமான வாழ்க்கையில் செல்லவில்லை. அவரிடம் தரும குணம் குடி கொண்டிருந்தது. பின்பு அவர் கொஞ்ச காலம் **சலிவன்** என்ற துரைமகனு

ரிடம் துவிபாஷி வேலையில் இருந்தார். பெரிய உத்தியோகஸ்தர்களிடம் ஏற்பட்ட பழக்கத்தினால் அவருக்கு அரசியல், வணிகம் முதலான துறைகளில் தேர்ச்சியும் திறமையும் ஏற்பட்டன. பின்னர் அவர் தஞ்சாவூருக்குச் சென்று அங்கிருந்த மகாராஷ்டிர அரச குடும்பத்தா



ருக்குப் பொருள் கடன் கொடுத்தார். மற்றும் பல ஜமீந்தார்களும் அவரிடம் வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். வட்டிக்கும் வட்டத்திற்கும் பணம் கொடுக்கல் வாங்கள் செய்யும் துறையில் பச்சையப்பருக்கு மிக்க செல்வம் திரண்டது. அவர் தஞ்சாவூரில் தமக்காக ஒரு

பெரிய மாளிகை கட்டிக்கொண்டு அதில் வசித்து வரலானுர்.

பச்சையப்பர் கம்பீரமான தோற்றம் உடையவர்; வாட்ட சாட்டமான கட்டமைந்த உடலினர். தலைப்பாகையும் காதில் கடுக்கனும், கழுத்தில் மணி மாலையும், கைகளில் தோடாவும், விரல்களில் மோதிரமும் அவர் அணிவார். வெளியே செல்லும் போது அவர் பல்லக்கிற் செல்லுவது வழக்கம்.

பச்சையப்பர் தமது செல்வத்தின் பெரும் பகுதியைத் தருமத்திலேயே செலவிட்டார். காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோவிலில் அவர் ஒரு திருக்கலியாண மண்டபம் கட்டிவைத்தார். மற்றும் இரண்டு விக்கிரகங்களைத் தம் செலவில் செய்து வைத்தார். மேலும் பல முக்கியமான சிவாலயங்களிலும் விஷ்ணு ஆலயங்களிலும் பல திருப்பணிகள் செய்தார். தம் பெயரால் நிலையான தருமங்கள் நிகழ்ந்து வர ஏற்பாடு செய்தார். காஞ்சீபுரம், சென்னை, சிதம்பரம், ஆகிய இடங்களில் கலாசாலைகளை அமைத்து, அவை நடைபெறுவதற்கு வேண்டிய மூலதனம் வைத்து உதவினுர். தம்மிடம் வந்து இரந்தவருக்கு இல்லை என்னுமல் உபகாரம் செய்து வந்த உத்தமர் இவர். தமது தருமச் செயலால் இவர் அழியாத புகழ்ச் செல்வத்தை ஈட்டினுர். இப் பெரியாருக்குத் தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர் ஆவர்.

## கேள்விகள்

1. காஞ்சிபுரத்தைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

2. பச்சையப்பருடைய இளம் பருவத்தில் அவர் குடும்பத்தை ஆதரித்தவர் யார்?

3. சென்னையில் பச்சையப்பர் எவர் ஆதரவில் இருந்தார்?

4. பச்சையப்பர் பார்த்த உத்தியோகங்கள் எவை?
5. பச்சையப்பர் பெருஞ்செல்வரானது எவ்வாறு?
6. அவர் செய்து வைத்த தருமங்கள் எவை?
7. அவர் நற்குணங்களைச் சுருக்கிக் கூறு?

## பயிற்சி

1. தொன்று தொட்டு, பிறவிக்குணம், கொடுக்கல் வாங்கல், முன்னணி-இவைகளை வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. முன் + அணி முன்னணி: இதுபோல் வரும் வேறு இரண்டு சொற்கள் எழுது.

## இலக்கணம்

நட, ஓடு, செல் என்னும் வினைச் சொற்களை நோக்குங்கள். இவை கட்டளைப் பொருளில் வந்துள்ளன. அதாவது அத்தொழிலைச் செய்யும்படி பிறரை ஏவும் பொருளில் வழங்குகின்றன. இவ்வாறு ஏவும் பொருளில் வரும் வினைமுற்று **ஏவல் வினைமுற்று** எனப்படும்.

வாழ்க, செல்க, வருக—என்னும் வினைச்சொற்களைக் கவனியுங்கள். இவையும் கட்டளைப்பொருளில் வருவனவே ஆயினும் மரியாதையாகச் சொல்வதுபோல உள்ளன. இப்படி வரும் வினைமுற்றுக்கு **வியங்கோள் வினைமுற்று** என்று பெயர்.

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு உண்டு. ஏவல் முன்னிலையில் மட்டுமே வரும். வியங்கோள் தன்மை முன்னிலை படர்க்கையாகிய மூவிடத்தும் வரும்.

போ, பாடு, எழுதுக, காண்க, சொல்லுக—இவ்வினைகளை அமைத்து ஒவ்வொரு சிறு வாக்கியம் எழுதுக.

## 18. படிக்காசுத் தம்பிரான்

| | | |
|---|---|---|
| **மாண்பு** | **செறிந்த** | **பெருமிதம்** |
| **முனைந்து** | **திவாகரம்** | **அந்தாதி** |
| **கலம்பகம்** | **சங்கநூல்** | **பிள்ளைத் தமிழ** |
| **புராணம்** | **கணக்காயர்** | **சந்தக்கவி** |
| **துலங்கினர்** | **விழைவு** | **வசைப்பாட்டு** |
| **சீட்டுக்கவி** | **உழந்து** | **வதுவை** |

'சான்றோர் உடைத்து' என்று புலவர்களால் போற்றப்பட்ட தொண்டை மண்டலத்தில், **பொற்களந்தை** என்ற ஊர் ஒன்று உண்டு. அது **தென்களத்தூர்** எனவும் அழைக்கப்படும். அதன் நிலவளம் பொன்னிட்டால் பொன் விளையும் என்று சொல்லக்கூடியது. அதனால் **பொன் விளைந்த களத்தூர்** எனவும் அவ்வூருக்குப் பெயர் வழங்கும். அவ்வூரில் முன்னளில் செங்குந்தர் குடியினர் சிறப்பாக வாழ்ந்திருந்தனர்.

செங்குந்தர் குடியில் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் படிக்காசர் என்ற ஒருவர் பிறந்தார். அவர் சிறுவயதில் கல்வி கற்கத் தொடங்கி, முயற்சியோடு திவாகரம், அந்தாதி, கலம்பகம், உலா, பிள்ளைத் தமிழ், புராணம், சங்க நூல், சமய நூல் முதலியன யாவும் நன்கு கற்ருர்; அதனுல் மற்ற மாணவர்களைக் காட்டிலும் மேம்பட்டு விளங்கினர்.

படிக்காசருக்குச் சந்தக்கவி பாடவேண்டும் என்னும் வேட்கை மிகுதியும் உண்டு. அவர் சந்தக்கவி பாடுவதில் மிகவும் பழகி, அக்கவிகளை இளமை தொட்டே பாடி வரலானார். சீட்டுக்கவி பாடுவதிலும் அவருக்கு அளவற்ற விருப்பம் உண்டு. வசைப்பாட்டு பாடுவதிலும் அவர் வல்லவராக விளங்கினார்.

இவ்வாறிருக்கும் நாளில் படிக்காசருக்கு விவாகம் நடந்தது. அவர் மனைவி, நற்குணங்கள் நிரம்பியவளாக இருந்தாள். புலவரும் அவர் மனைவியும் உடலும் உயிரும்போலவும் மலரும் மணமும் போலவும் வாழ்ந்து வந்தனர். சிலநாள் கழித்து அவ்வம்மையார் ஒருபாலகனைப் பெற்றாள். படிக்காசுப் புலவர் உள்ளம் மகிழ்ந்தார். இருவரும் அக்குழவியை நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாகச் சீராட்டித் தாலாட்டித் தோள்மேல் சுமந்து முத்தாடி வளர்த்து வந்தனர்.

அவ்வாறு வளர்த்து வரும் நாளில், நம் புலவரை வறுமை பற்றிக்கொண்டது. வெறும் கல்வி கற்று, வயிற்றுப் பிழைப்புக்கு யாதொரு தொழிலும் மேற்கொள்ளாமையால், புலவருக்கு வறுமை என்னும் இன்னல் ஏற்பட்டது. புலர் பெருமான் மனம் கலங்கினார். அவர் ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுமின்றிப் பலநாள் வாடினார். புலவரின்

மனைவியாரும் குழவியும் பசியால் வாடி மெலிய நேர்ந்தது. புலவர் மனம் வருந்தி **வல்லமா நகர்** என்னும் ஊரில் வாழ்ந்து வந்த **காளத்திபூபதி** என்ற செல்வரையடைந்தார். தம் குறையைச் சொல்லி, ஒரு பாட்டைப் பாடினார். அப்பெரியார் மனம் இரங்கி, கறவைப் பசுக்களையும் அவற்றைக் காப்பதற்கு வேண்டிய பொருளையும் அளித்தார். இதனால் புலவர் சிலகாலம் துன்பம் இல்லாமல் வாழ்ந்து வந்தார்.

பிறகு, படிக்காசுப் புலவர் **மாவண்டூர்** என்னும் ஊரில் வாழ்ந்து வந்த கஸ்தூரி முதலியாரின் மைந்தர் **கறுப்ப முதலியார்** வேண்டுகோளுக்கு இசைந்து **தொண்டை மண்டல சதகம்** என்னும் நூலைப் பாடி அரங்கேற்றினர். கறுப்ப முதலியார் புலவருக்குப் பரிசுகளும், ஏறிச் செல்லச் சிவிகையும் தந்து புலவரைச் சிவிகை மேலேற்றி, அச்சிவிகையைச் சற்று தூரம் தாமே சுமந்து சென்றும் பெருமைப் படுத்தினர்.

பிறகு, நம் புலவர் சிதம்பரத்தையடைந்து அங்கே கோயில் கொண்டருளும் சுவாமியையும் தேவியையும் உண்மை அன்போடு துதித்தார். சுவாமிக்கு முன்னேயுள்ள படியின்மேல் ஐந்து பொற்காசுகள் இருத்தலைக் கண்டு, அவற்றைக் கைக்கொண்டு இன்புற்றுச் சிலகாலம் அங்கே வசித்து வந்

தார். அன்று முதல் அவருக்குப் **படிக்காசுப் புலவர்** என்ற பெயர் வழங்கலாயிற்று.

புலவர் பிறகு அவ்விடம் விட்டகன்று **இராமநாதபுரம்** சேர்ந்து, அவ்வூர் மன்னர் **இரகுநாத சேதுபதியின்** சமஸ்தான புலவருள் ஒருவராக அமர்ந்தார். சிலகாலம் அங்கிருந்து பிறகு **காயல் பட்டணம்** சென்று ஆங்கு



வாழ்ந்து வந்த **சீதக்காதி**என்ற தமிழுணர்ந்த முகம்மதியப் பிரபுவின் நட்பைப் பெற்றார். அவ்விடம் சில நாளிலிருந்து பிறகு **சிவகங்கை** அடைந்து **திருமலைத் தேவர்** என்ற பிரபு சிகாமணியைச் சேர்ந்தார். அப்பிரபு நம் புலவரைக் கர்வம் கொண்டவர் என்று எண்ணி அவரைச் சிறைப்படுத்தினார். சிறையில் வருந்திய புலவர் ஒரு நாள் பிரபு மகிழ்ச்சியோடு

இருக்கும்சமயம் பார்த்து ஒரு பாடலைப் பாடி அவரை மகிழ்விக்க, அவர் இவரை விடுதலை செய்து, மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அளவற்ற பரிசிலும் தந்து அனுப்பினர்.

படிக்காசுப் புலவர் பிறகு **தண்டலை நீள் நெறி** என்னும் திருப்தியைச் சேர்ந்து அவ் வூரார் வேண்டுகோளுக்கு இசைந்து **தண்டலை யார் சதகம்** என்னும் நூலைப்பாடினர். பிறகு சீதக்காதி என்ற பிரபுவைக் காண விரும்பிக் காயற்பட்டணம் சென்றூர். ஆங்கு அப் பிரபு இறந்துவிட்ட செய்தியை அறிந்தார். அவ ரைச் சமாதி வைத்திருந்த இடத்தை அடைந் தார். பலஉருக்கமான பாடல்களைப் பாடினர். அச்சமாதிக் குழி திறந்து கரத்தை நீட்ட, அக்கரத்தின் மோதிர விரலில் இருந்த ஆழி யைப் புலவர் கழற்றிக்கொண்டார். கையும் மறைந்தது.

படிக்காசுப் புலவர் சிறிது காலம் சென்ற பின் தருமபுர ஆதீனத்தை அடைந்து அம் மடத்தின் தம்பிரானுய் அமர்ந்தார். அதன் பிறகுதான் அவருக்குப் **படிக்காசுத் தம்பிரான்** என்ற பெயர் ஏற்பட்டது. அவர் சில வருடங்களுக்குப் பின் தில்லையை அடைந்து, நடன சிகாமணியாகிய நடராஜ மூர்த்தியின் திருவடிகளுக்குத்

திருப்பணி செய்துகொண்டிருந்து, இறைவன் பொன்னடிகளைச் சேர்ந்தார்.

### கேள்விகள்

1. படிக்காசர் பிறந்த இடம் எது?

2. புலவர் 'தொண்டை மண்டல சதகம்' எழுதிய வரலாறு கூறுக.

3. புலவருக்கு ஏன் படிக்காசர் என்ற பெயர் ஏற்பட்டது?

4. புலவருக்கும் சீதக்காதிக்கும் இருந்த நட்பை விளக்கி எழுது.

5. புலவர் காளத்திப் பூபதியை வேண்டுவதுபோல உன் சொந்த நடையில் எழுது.

### பயிற்சி

1. மூன்று இடைச் சொற்கள் எழுது.

2. சூறையாடல், தயாளகுணம்— வாக்கியத்தில் உபயோகித்து எழுது.

3. கல் மனமுடையவன் — எதிர் அர்த்தமுடைய தொடர் எழுது.

### இலக்கணம்

ஒரு சொற்றொடரில் குறைந்தது எழுவாய் பயனிலை ஆகிய இரண்டும் இருக்கவேண்டும். செயப்படுபொருளும் வருவதுண்டு.

காரியத்தைச் செய்யும் கர்த்தாவுக்கு **எழுவாய்** என்று பெயர். வினைமுற்றைக்கொண்டு **யார்** அல்லது **எது** என்று கேள்வி கேட்டால், வரும் விடையே **எழுவாய்** ஆகும்.

வினைமுற்றைக்கொண்டு **யாரை** அல்லது **எதை** என்று கேள்வி கேட்டால் வரும் விடையே **செயப்படுபொருள்** ஆகும்.

எழுவாயைக்கொண்டு என்ன செய்தான்? என்ன செய்தது? என்று கேள்வி கேட்டால், வரும் விடையே **பயனிலை**யாகும்.

நீங்கள் படிக்கும் பாடங்களில் இவை சரிவர அமைந்திருக்கின்றனவா என்று கவனித்து வாசிக்கவேண்டும்.

**பயிற்சி**

1. இந்தப் பாடத்தின் முதல் பாராவில் உள்ள வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சங்களைக் குறிப்பிடுக.

2. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமைந்துள்ள வாக்கியம் ஒன்றை இப்பாடத்திலிருந்து எடுத்து எழுதுக.

# அபாயத்திற்கு ஓர் உபாயம்

(பஞ்சதந்திரப் பாடல்)

| | | |
|---|---|---|
| கரும்பாம்பு | மஞ்சனச்சாலை | ஏவலாளர் |
| பெருமரம் | பொன்னணி | அருஞ்செயல் |

கோடுறு சினையில் காகம்
　　கூடுவைத் தனேக காலம்
பேடொடு வாழும்
　　பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்(கு)
　　அஃதிடும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
　　நலிந்துளம் மெலிந்து வாடி,

தன்னுயிர்ப் பாங்க னான
　　சம்புகன் அருகுபோய், "இங்கு
என்ன செய்குவன் நான்?" என்ன,
　　"இதைக்கொலல் அரிதோ? நீ போய்
மன்னவன் தேவி யாடும்
　　மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
　　போடுக பொந்தில்" என்ன,

காகம் அப்படியே செய்யக்
　　காவலன் ஏவ, ஏவ லாளர்
ஏகி மாமரத்தின் பொந்தை
　　ஈர்ந்தனர் : ஈரும்போதில்
நாகம் அங்(கு) இருந்து சீற
　　நறுக்கினர் இருதுண் டாக;
ஆகையால் உபாயத் தாகா
　　அருஞ்செயல் எதுவும் இல்லை.

## கேள்விகள்

1. காகத்திற்கு நேர்ந்த துன்பம் யாது?
2. பாம்பைக் கொல்ல அது செய்த உபாயம் என்ன?
3. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

## பயிற்சி

1. இக்கதையைப் பத்து வரியில் எழுது.
2. இக்கதையைக் காகம் சொல்லுவதுபோல் எழுது.

## இலக்கணம்

தந்தை '**வா**' **என** நான் வந்தேன்.
தாய் 'அழாதே' **என்று** சொன்னாள்.
**நீயும் நானும்** போகலாமா?

இந்த வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொற்களைக் கவனியுங்கள். அவை பெயர்ச்சொல், வினைச் சொற்களை ஒட்டியே வரும்; தனித்து வந்து பொருள் தருவதில்லை. இவை போன்றவை **இடைச்சொல்** எனப்படும்.

**சுட்டு, வினா** எழுத்துக்களும்; **வேற்றுமை உருபுகளும்** இடைச் சொற்களே ஆகும்.

விலங்குகளில் யானை **மிகப்** பெரியது.
பாகற்காய் **தவப்** பிஞ்சு.
அவன் **நனி** வல்லவன்.

இவற்றில் தடித்த எழுத்திலுள்ள சொற்களைக் கவனியுங்கள். இவை **மிகுதி** என்னும் பொருள் தரும். இவற்றிற்கு **உரிச்சொல்** என்று பெயர்.

இந்த உரிச்சொற்கள் வரும்படி ஒவ்வொரு வாக்கியம் எழுது.

GUNASEKARA PUBLIC LIBRARY

# 20. வாக்குண்டாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. 1

நன்றி யொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால். 2

நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கல்மே லெழுத்துப் போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். 3

அட்டாலும் பால்சுவையிற் குன்று(து) அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே; சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 4

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்களாகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட வுயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. 5

உற்ற விடத்தில் உயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான் ? 6

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். 7

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார் 7
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று. 8

தீயாரைக் காண்பதுவும் தீதே ; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே;—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது. 9

நெல்லுக்(கு) இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்;—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. 10

—ஔவையார்

## அரும்பதவுரை

1. மாமலராள் - சிறந்த தாமரைப் பூவில் வாழும் திருமகள். நோக்கு - அருட்பார்வை. நுடங்காது - (நோயால்) வாடாது. துப்பு ஆர் - பவளம்போன்ற தும்பிக்கையான் - யானையின்கை போன்ற-கைகளையுடைய விநாயகன்.

2. நன்றி - உபகாரம், என்று தரும் கொல் - எப்பொழுது செய்வானோ ? தெங்கு - தென்னைமரம். தாள்-வேர்.

3. அல்லாத - நல்லவர் அல்லாத. ஈரம் இலா - அன்பில்லாத. நேர் - சமம்.

4. அளவளாய் - கலந்து உறவாடி. அட்டாலும் - காய்ச்சினாலும்.

5. கருமங்கள் - காரியங்கள். பருவம் - தக்க காலம்.

6. உற்ற - ஆபத்து நேருகின்ற இடத்து-சமயத்தில் பற்றலர்-பகைவர். கல் + தூண் = கற்றூண். இறுவது-முறிவது.

7. நீர் ஆம்பல் - நீரிலுள்ள அல்லி. நுண் அறிவு - கூர்மையான புத்தி. மேலை தவம் - முன் பிறவியில் செய்த நல்ல செயல்.

8. நல்லார் குணங்கள் - நல்லவரது குணங்களை, இணங்கி - மனம் ஒத்து.

9. திருவற்ற - சிறப்பு இல்லாத. 'துஷ்டர் சகவாசம் பிராண சங்கடம்' என்பது பழமொழி.

10. தொல் உலகில் - பழமையான உலகத்தில். அவர் பொருட்டு - அவருக்காக.

---

# 21. நல்வழி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா. 1

புண்ணியமாம் பாவம்போம் போனநாட்செய்த அவை
மண்ணிற் பிறந்தார்க்குவைத்தபொருள்-எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை எச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல். 2

சாதி யிரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 3

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணிலான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு. 4

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

உள்ள தொழிய வொருவர்க் கொருவர்சுகங்
கொள்ளக் கிடையா குவலயத்தில்—வெள்ளக்
கடலோடி மீண்டும் கரையேறி ளுலென்
உடலோடு வாழு முயிர்க்கு. 6

ஈட்டும் பொருண்முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்;—தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். 7

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கா லுலகூட்டும்;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 8

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கு மதுவழியே; நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும். 9

ஒருநா ளுணவை யொழியென்ரு லொழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய்!—ஒருநாளும்
என்னே வறியாய் இடும்பைகூ ரென்வயிறே
உன்னேடு வாழ்த லரிது. 10

—ஔவையார்.

## அரும்பதவுரை

1. தருவேன் - படைப்பேன். தமிழ் மூன்றும்-இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ். கோலம் - அழகு. கரிமுகம் - யானை முகம்.

2. ஆம் - செய்யத் தகுந்தது. போம்-ஒழியத்தக்கது. போன நாள் - முன் பிறவி. தீது - தீய செயல்.

3. மேதினி-பூமி. பட்டாங்கு- உண்மை நூல், தரும சாஸ்திரம்.

4. எய்தபோது - அடையும் வேலை. ஒண்ணாது - முடியாது.

5. பொருந்துவன - வரத்தக்க பொருள்கள். துஞ்சுவதே - இறந்து போவதே. மாந்தர் - மனிதர்.

6. குவலயம் - பூமி. மீண்டு - பொருள் சம்பாதித்துக் கொண்டு திரும்பி வந்து.

7. மகிதலத்தீர் - பூமியில் வாழும் மனிதரே. ஊழ் - விதி. தனம் - செல்வப்பொருள். தரியாது - நிலைத்திராது. தேட்டம் - சம்பாதிக்கத் தக்கது.

8. உலகு ஊட்டும் - உலகமக்களை ஊயிர்ப்பிக்கும். ஏற்றவர்க்கு - யாசித்தவருக்கே. நல்கூர்ந்தார் ஆனாலும் - வறுமையை அடைந்தவராயினும்.

9. என் - யாது சம்பந்தம். இட்டு - பிச்சையிட்டு.

10. ஏல் - ஏற்றுக்கொள். என் னோ - எனது துன்பத்தை. இடும்பைகூர் - துன்பம் மிக்க.

---

## 32. நன்னெறி

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்ப தீதற்றோர்;—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. 1

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க;—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நண்ணுதலால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு? 2

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருடங்கனிர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 3

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினுந் திண்மைநிலை போம். 4

கடலே யனையம்யாம் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும். 5

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரை தான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 6

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்;—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 7

தொலையாப் பெருஞ் செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இறைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய்! மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 8

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்(று)
எல்லாம் இருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்!
மொழியிலார்க் கேதுமுதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு? 9

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பாரோ? பைந்தொடீஇ!
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி. 10

—சிவப்பிரகாச சுவாமிகள்.

## அரும்பதவுரை

1. குழலாய் - கூந்தலையுடையாளே. முகமன் - பாராட்டு மொழி. பூங்கை - அழகியகை. சுவை - இனிமை.

2. நுதல் - நெற்றியையுடையவளே! மாசு - குற்றம். ஏனையர் - குற்றமுடைய மதத்தினர். பிறிது - கொடியது. நல்லோன் - சாக்கிய நாயனர். எறி சிலை-எறிந்த கல். கரும்பு வில்லோன் - கரும்பு வில்லையுடைய மன்மதன்.

3. பேரும் - செல்வமாகும். பெய்யாக் கொடுக்கும் - மழையாகப்பெய்து உதவும்.

4. நீக்கம் - பிரிவு. அறும் இல்லாத. இருவர் - இரு நண்பர். நொய்து - அற்பமானது. புல்லினும் - கூடினும். திண்மை நிலை - முனைக்கும் சக்தி.

5. அனையம் - ஒத்திருக்கிறோம். அடல் - வல்லமை பொருந்திய, ஏறு அனைய - ஆண் சிங்கத்தை ஒத்த. செருக்கு-கர்வம். விடல்-விடுதலாம். முனிக்கரசு-அகத்தியர்.

6. தடம்கரை - (முன்பே போடப்பட்டுள்ள) பெரிய கரையை - (தடம் - உரிச்சொல்). விளம்பு - சொல்லு.

7. விழுமியோர் - மேலோர். தீர்வு - நீங்குதல். தீர்க்கிற்பார் - நீக்குவார். கறை - களங்கம்.

8. ஈரம் - குளிர்ச்சி பொருந்திய. கோதாய் - மாலையை அணிந்தவளே. தோற்றத்தோம் - (நாம்) பிறந்திருக்கிறோம். **வந்தன்று - வந்தது.**

9. அன்பு இல்லாற்கு - அன்பில்லாதவனுக்கு. மொழி இலார்க்கு - வாய் பேசாத ஊமைகளுக்கு.

10. பைந்தொடி - பசுமையான வளையலை அணிந்தவளே. எந்தை - எங்கள் பிதா. அரம்பை - வாழைமரம்.

---

# 23. நீதிநெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்-உறுங்கவலொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. 1

கலைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
மலரவன் வண்டமி ழோர்க்(கு) ஒவ்வான்-மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு. 2

கற்றோர் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூணவேண்டா யாரே
அழகுக்(கு) அழகுசெய் வார். 3

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். 4

—குமரகுருபரர்.

### அரும்பதவுரை

1. புறங்கடை - வெளியில், இசை-புகழ், கவல் - துன்பம்.

2. உய்த்துணர்வு - ஊன்றிப் பார்த்தறியும் பன்மை.

3. முகம் - வாய், இவர் செய்யும் உடம்பு - (புலவர்களாகிய) இவர்கள் செய்யும் (உடம்பாகிய) செய்யுள்.

4. நலனே - அழகே, கலன் - நகை, மணிப்பூண் - கற்கள் பதித்துச் செய்த ஆபரணம்.

5. தகரும் - பிளக்கும். தகரா =(தகராது) பிளவாது. கனம் குழாய் - பெரிய தோடு அணிந்தவளே. கொல் - கொல்லன், உலை - உலைக்களம் (தொழில் செய்யுமிடம்) கூடம் - சம்மட்டி (இரும்பை அடித்துச் செப்பஞ் செய்வதற்கானதொரு கருவி.)

# 24. திருக்குறள்

அகரமுதல் எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் : அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. 2

நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. 3

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 4

கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக. 5

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப ; இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. 6

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 7

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். 8

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. 9

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லாதவர். 10

**அரும்பதவுரை**

1. ஆதி - முதன்மை, ஆதிபகவன் - முதற்கடவுள்.
2. என்பும் - எலும்பினாலும்.
3. நன்றி - பிறர் செய்தவுதவி.
4. தீயவை - தீய ஒழுக்கங்கள், தீய - துன்பங்களை பயத்தலால் - விளைப்பதனால்.
5. கசடு - குற்றம்.
7. இடுக்கண் - துன்பம்.
8. தொழுது - வணங்கி, பின் செல்பவர் - அடிமை புரிவோர்.
9. மற்றெல்லாம் - அறமல்லாத மற்றவை அனைத்தும் புறத்த - (இன்பமல்லாத) துன்பங்கள்.

# 25. நன்மதிமாலை

## கீழ்மக்கள் இயல்பு

1. பித்தளை பொன்னோடு பெய்துருக்கப் பெற்றாலும்
பித்தளை பித்தளையே பீடில்லாச்—சுத்தமனம்
இல்லாக் கயவர் இசைகூர்நல் லாரோடு
பல்லாண் டுறைந்துமிலை பண்பு.

2. தங்கத் தவிசில் தகையில்லா நாயினைத்
தங்கும் படிபட்டம் தந்தாலும்—சிங்கம்போல்
தோன்றுமோ கீழோரைத்தோத்திரம் செய்தாலும்
தோன்றுமோ ஈகைத் தொழில்.

3. நீரோடு, சேர்ந்தபால் நீரைப்போல் தோன்றாமல்
சீரான பால்போல் தெரிந்தாலும்—ஆர்சுவை
கெட்டிடும் ஆதலால் கீழோரை நல்லோர்தாம்
தொட்டிடார் உள்ளத்தும் சோர்ந்து.

## உண்மை

4. சொல்லுக் குயிருண்மை சோவென்னும் கோட்டை
மல்லார் படைஉயிர் மங்கையர்க்கு—சொல்லார்ந்த
மானம் உயிராம் வரைகின்ற சீட்டினுக்கு
ஊனமில் கைசாத்து உயிர்.

5. சொன்னதைப்பின் இல்லென்று சொல்லிடும் பொய்[வாயும்
கன்ன லெனவே கருதியே-இன்னிசையைக்
கற்காத வாயும் கரிசாம்பல் கொட்டுகின்ற
பொற்பிலாப் பாழ்ங்குழியே போன்ம்

(ஐ. நடேசன்.)

## அரும்பதவுரை

1. பெய்து - சேர்த்து, பீடு-பெருமை, கயவர் - கீழ் மக்கள் (வஞ்சகர்) இசை - புகழ்.
2. தவிசு - சிம்மாசனம், தகை - பெருமை.
3. ஆர் - பொருந்திய.
4. சோ - மதில், மானம் - பெருமை.
5. கன்னல் - கரும்பு, போன்ம் - போலும்.

# 26. பல்சுவைப் பாக்கள்

## நாலு கோடி கவி

1. மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்;
உண்ணீருண் ணீரென்றே யூட்டாதார் தன்மனையில்
உண்ணாமை கோடி யுறும்;
கோடிகொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்;
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடையநாக்
கோடாமை கோடி யுறும்;

—ஔவையார்.

## நிந்தாஸ்துதி

2. நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால் ஐயாநின்
ஆட்டுக் கிரண்டுகா லானாலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் புலி.

## பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சிலேடை

3. நஞ்சிருக்கும்;தோ லுரிக்கும்; நாதர்முடிமேலிருக்கும்;
வெஞ்சினத்திற் பல்பட்டால் மீளாது—விஞ்சுமலர்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம்.

—காளமேகப் புலவர்.

## தமிழ் மடந்தை

1. பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோர் ஏன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளர்கின்றாளே.

—வில்லிப்புத்தூரார்

வாழ்க தமிழ் !

## அரும்பதவுரை

1. முற்றம் - வீட்டு முன்னிடம். ஊட்டாதார் - உண்பிக்காதவர்கள். குடி - நற்குலம், கூடுவது - நேசிப்பது, கோடாமை - மாறாமை (பொய் கூறாமை)

2. நின் ஆட்டுக்கு - உனது நடிப்புக்கு, இவ் ஆட்டை விட்டு-இந்த ஆட்டத்தைப் பாராமல் விட்டு நீங்கி, அப்புலி - அப்புலிக்காலர் (வியாக்கிரபாத முனிவர்).

3. நஞ்சு - விஷம், நைந்து - மெலிந்து, மீளாது - திரும்பாது, விஞ்சு - மிக்க, தேம்பாயும் - (தேன்+பாயும்).

4. பொருப்பு - பொதியமலை, தென்னன்-பாண்டியன், ஏனம் - திருமால் தோற்றமாகிய பன்றி, மருப்பு - கொம்பு, பாவை - பெண்ணாகிய நிலமகள்.

CONNEMARA PUBLIC LIBRARY
12 NOV 1957
MADRAS